விலை ரூபா 20 | பக்கங்கள் 32

# உதயன்

சுடர் 31 | கதிர் 020 | வள்ளுவர் ஆண்டு 2046 | கார்த்திகை 30, புதன்கிழமை 16.12.2015






திருக்கோணேஸ்வரத்தில் வழிபாட்டில் அமெ.அதிகாரி குழுவினர்...

## இலங்கையில் சமாதானத்துக்கு அமெரிக்கா உறுதியான உதவி

### திருகோணமலையில் நேற்றுத் தெரிவித்தார் ராஜாங்கத் திணைக்கள ஆலோசகர் ஷனோன்

கொழும்பு, டிசெ. 16
இலங்கை மக்கள் சமாதானம், செழிப்பு, நல்லிணக்கம் ஆகியவற்றை நோக்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தைத் தொடர்கையில் அமெரிக்கா உறுதியான விதத்தில் அதற்கு உதவும். இலங்கையில் என்ன நடைபெறுகின்றதோ அது சர்வதேச அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும். இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதிலும், மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் நீங்கள் அடையும் பக். 28

## ரயிலில் மோதுண்டு நேற்றும் ஒருவர் சாவு

கிளிநொச்சி, டிசெ. 16
கொழும்பில் இருந்து யாழ். நோக்கி வந்த ரயிலில் மோதுண்டு வயோதி[illegible] ஒருவர் [illegible]யிரிழந் பக். 29


## 15 அரசியல் கைதிகள் இன்று நீதிமன்றுக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 16
மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் 15 பேர் இன்று பக். 27

# வடக்கின் அதிகாரங்களை பிடுங்கப் பிரதமர் முயற்சி

### மாகாண சபையில் நேற்றுக் குற்றச்சாட்டு ரணிலுக்கு தக்க பதில் அனுப்புகிறார் விக்கி

யாழ்ப்பாணம், டிசெம்பர் 16
வடக்கு மாகாண சபையின் அதிகாரங்களை, கிராம இராச்சியம்திட்டத்தின் ஊடாக மத்திய அரசுக்கு மாற்றியமைப்பதற்கு - மையப்படுத்துவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சித்து வருவதாக வடக்கு மாகாண சபையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ள முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், இந்த விடயம் தொடர்பில் அரசியல் ரீதியாகப் பிரதமர் அணுகாமல் நிர்வாக ரீதியில் அணுகுவதற்கு முயல்வதாகவும் இது விசனத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் இதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தக்க பதிலைத் தயார் செய்துள்ளதாகவும், அதனை இன்று அனுப்பி வைக்கவுள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.
வடக்கு மாகாண சபையின் அடுத்த ஆண்டுக்கான பக். 28



## ஷனோனுக்கும் அப்பம்



பக். 27

## தமிழீழம்தான் ஒரே தீர்வு

### மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் சபையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16
எங்கள் மக்களுக்கு தமிழீழம் தான் ஒரே தீர்வு. அந்தத் தீர்வின் ஊடாகவே எங்கள் மக்களுக்கு விடிவு கிடைக்கும்.
இவ்வாறு வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் தெரிவித்துள்ளார் ஆளுங் கட்சி உறுப்பினரான து.ரவிகரன்.
வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினரான அ.பரஞ்சோதி, நாங்கள் சமஷ்டிக் காகப் பக். 27

## கையில் உள்ள அதிகாரங்களைக் கூட பயன்படுத்தாத வடக்கு மாகாண சபை

### ஆளும்கட்சி உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 16
மாகாணசபைக்கு இருக்கின்ற அதிகாரங்களையே நாங்கள் இன்னமும் முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்று குற்றம் சுமத்திய ஆளுங்கட்சி உறுப்பினர்கள், யாரோ தயாரித்து அனுப்பிய வரவு - செலவுத் திட்டத்தையே நாங்கள் இங்கு அங்கீகரிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம் என்று குறிப்பிட்டனர்.
வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்டத்தின் கொள்கை விளக்க உரைமீது கருத்துத் தெரிவிக்கையிலேயே பக். 28

## காணாமற்போனோரைக் கண்டறிய சர்வதேசத்தின் விசாரணை உதவுமா?

### கேள்வி எழுப்புகிறார் பரணகம

யாழ்ப்பாணம்,டிசெ.16
குற்றவாளிகளைக் கண்டறியவும் காணாமற்போனவர்களைக் கண்டு பிடிப்பதற்கும் எங்களிடம் திறமையான விசாரணையாளர்கள் உள்ளனர்.
பின்னர் இதற்கு ஏன் சர்வதேச விசாரணை? பக். 29

## குறை நிரப்பு பட்ஜெட்டுக்கு வடமாகாண சபை அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 16
மத்திய அரசினால் அறிவிக்கப்பட்ட, அரச ஊழியர்களுக்கான 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வை நடைமுறைப்படுத்துவதற்காகவே, 2015 ஆம் ஆண்டின் குறைநிரப்பு வரவு - செலவுத் திட்ட நியதிச் சட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டதாகப் பக். 28

## அதிகார வரம்புகளை மீறி நடக்கும் நிதி ஆணைக்குழு

### தற்போதைய அரசு அதனை மாற்றவேண்டும் என்கிறார் வடக்கு எதிர்க்கட்சித் தலைவர்

யாழ்ப்பாணம், டிசெ. 16
நிதி ஆணைக்குழு அரசமைப்பில் குறித்தொதுக்கப்பட்ட விடயங்களைத் தாண்டி-அதிகார வரம்பை - மீறிச் செயற்படுகின்றது. இதனைத் தற்போதைய பக். 28




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வித்தியா கொலைச் சந்தேகநபர்களை மகசினில் வைத்து விசாரிக்க அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 16

புங்குடுதீவு மாணவி கூட்டுவன் புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில், கடந்த வாரம் கைது செய்யப்பட்டவரையும், ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களையும் மகசின் சிறைச்சாலைக்குக் கொண்டு சென்று விசாரிக்க ஊர்காவற்றுறை நீதிமன்று நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த வழக்கில் ஏற்கனவே 9 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்துவருகின்றனர். கடந்த செவ்வாய்க்கிழமை சுழிபுரத்தைச் சேர்ந்த பியவர்த்தன ராஜ்குமார் என்பவர் கைது செய்யப்பட்டார். அவரைப் பொலிஸார் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். அவரையும் ஏற்கனவே கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களான தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஸ்யந்தன் ஆகியோரையுமாக 3 பேரையும் மகசின் சிறைச்சாலையில் வைத்து விசாரிப்பதற்குக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றிடம் அனுமதி கோரினர். இதற்கு நீதிமன்று அனுமதி வழங்கியது. வழக்கைத் துரிதப்படுத்த வேண்டியுள்ளதனால் அங்கு கொண்டு சென்று விசாரிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் கைது செய்யப்பட்ட ராஜ்குமாரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்தார். குறித்த சந்தேக நபர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும் அவர் நீதிமன்றில் தெரிவித்தார். அதனாலும் குறித்த சந்தேக நபரிடம் நீதிமன்று சில கேள்விகள் கேட்டது. அதற்கு அவர் பதிலளித்துள்ளார். அந்தப் பதிலிலிருந்து மனநிலை பாதிப்பு என்று சந்தேகிக்கும் அளவுக்கு நிலைமை இல்லை என்று நீதிமன்று கருதினாலும் அவர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார் என்பதற்கான மருத்துவச் சான்றிதழ் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டதற்கு அவை 1997 ஆம் ஆண்டளவில் தொலைந்து விட்டதாகச் சட்டத்தரணியால் பதில் கூறப்பட்டது.

அதனாலும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அதனை எதிர்த்தனர். குறித்த சந்தேக நபர் வித்தியா வீட்டுக்குச்சென்று விசாரித்தமை, தரவு சேகரிக்க முற்பட்டமையைக் கூறிய பொலிஸார், வித்தியா பற்றிய தகவல்களையும் புகைப் படத்தையும் அவர் வைத்திருந்துள்ளார் என்றும் நீதிவான் செ. லெனின்குமாரிடம் தெரிவித்தனர்.

வித்தியா கொலைக்கு முன்பாகவும் குறித்த நபர் புங்குடுதீவுக்குச் சென்று வந்துள்ளார். அந்தச் சம்பவங்களால் வித்தியாவின் கொலையுடன் அவர் தொடர்புபட்டுள்ளாரா என்று விசாரிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், அவர் உள்ளிட்ட 3 பேரையும் விசாரிக்கவென மகசின் சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றனர்.

அதற்கு முன்னைய தவணைகளில் அனுப்பப்பட்டிருந்த மரபணுப் பரிசோதனை அறிக்கை, இலத்திரனியல் உபகரணங்கள் தொடர்பான அறிக்கை எவையும் நீதிமன்றுக்கு இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. வழக்கின் சந்தேக நபர்களுக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த மே மாதம் 13 ஆம் திகதி வித்தியா மீதான கொலைச் சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# வடக்கு மாகாண சபையை மாங்குளத்துக்கு மாற்றுங்கள்

### பிரமாண நன்கொடையை ஒரு கோடி ரூபாவாக உயர்த்துமாறும் சபை உறுப்பினர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 16

வடக்கு மாகாண சபையை மாங்குளத்துக்கு மாற்றவேண்டும் என்றும் அத்துடன் மாகாண சபை உறுப்பினர்களுக்குரிய பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியை 60 இலட்சம் ரூபாவிலிருந்து ஒரு கோடியாக உயர்த்த வேண்டும் என்றும் மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு மாகாண சபையின் வரவு – செலவுத் திட்டத்தில், பேரவைச் செயலகத்தின் மீதான விவாதம் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டனர்.

ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபை மாங்குளத்திற்கு மாற்றம் செய்யப்படவேண்டும். அங்கு மாகாண சபைக்கு திட்டவட்டமான நிலம் அடையாளம் காணப்பட வேண்டும். நாங்கள் மாகாண சபையை பாரம் கொடுக்கின்ற போதாவது, மாங்குளத்தில் கட்டடம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் – என்றார். மாங்குளம் வடக்கு மாகாணத்துக்குப் பொதுவான இடம். மாங்குளத்திலேயே வடக்கு மாகாண சபை அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்தப் பகுதியில் மக்கள் குடியமர்வார்கள். நாங்களும் எங்கள் எல்லைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று, ஆளுங்கட்சி உறுப்பினர் து.ரவிகரன் குறிப்பிட்டார்.

மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினரான பசுபதிப்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில், நிலாவைப் பிடிச்சுத் தருவதாச் சொல்லி என்னுடைய அம்மம்மா சாப்பாடு தீத்தினார். என்னுடைய அம்மம்மா சாவடைந்து விட்டார். எனக்கும் வயது போய்விட்டது. இன்னமும் நிலாவைப் பிடிக்கவில்லை. அதே போன்றுதான், வடக்கு மாகாண சபையை மாங்குளத்திற்கு மாற்றுகின்ற விடயமும் இருக்கின்றது. விரைவில் மாங்குளத்திற்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 150 மில்லியனை வைத்து அங்கு, காணியை அடையாளம் கண்டு வேலியிடவேண்டும் – என்றார்.

ஆளுங்கட்சியின் உறுப்பினர்களான ச.சுகிர்தன், ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோர் உறுப்பினர்களுக்கு பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியாக 60 லட்சம் வழங்கப்படுகின்றது. அதனை ஒரு கோடியாக்க வேண்டும். இது தொடர்பில் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். இன்னமும் பதில் இல்லை – என்றனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் கருத்துத்தெரிவிக்கையில், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலும், ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரின் மாவட்டத்திலும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்டடம் அமைத்துக் கொடுப்பதாகப் பிரதமர் ரணில் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அதே போன்று மாகாண சபை உறுப்பினர்களுக்கு, அவர்களது மாவட்டங்களில் ஒவ்வொரு அலுவலகத்தை அமைத்து தருமாறு கேட்கின்றோம். தற்போதுள்ள மாகாண சபைக் கட்டடங்களையாவது இதற்குப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டார்.

ஆளுங்கட்சி உறுப்பினர் சர்வேஸ்வரன், மாகாணசபை உறுப்பினர்கள் சட்டங்கள் – சுற்றறிக்கைகளைப் பார்ப்பதற்கு – ஒப்பீடு செய்வதற்கு ஒரு நூலகம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஆளுங்கட்சி உறுப்பினர் இ. ஆனோல்ட் கருத்துத் தெரிவிக்கையில், மாகாணசபை உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் கடந்த இரண்டு ஆண்டு காலமாக மீறப்பட்டுள்ளன. அத்துடன் மாகாணசபை உறுப்பினர்களுக்கு இன்று வரை வாகனங்கள் வழங்கப்படவில்லை. ஜனவரி முதலாம் திகதியிலிருந்து மாகாணசபை உறுப்பினர்களுக்கு வாகனங்களுக்கு உரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும் – என்றார்.

இறுதியில் பதிலளித்த குழுத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், மாகாண சபையை மாங்குளத்துக்கு மாற்றுவதில் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை என்று தெரிவித்தார். இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். அதே போன்று வாகன விடயத்தில், மாகாண சபை உறுப்பினர்களுக்கு வாகன பெமிற்றினூடாக இல்லாமல், வேறு வழியில் பெற்றுக் கொடுப்பதற் குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

(த-5-ரி5)

## அரங்க நிகழ்வு இன்று

மன்னார், டிசெ. 16

யுத் கிரியேற் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படும் மன்னார் மாவட்டத்துக்கான கருத்துக்கள அரங்கக் குழுவினரின் சேவைகளை அறிமுகப்படுத்தும் வகையில் பங்குதாரர்களுக்கான கருத்துக்கள அரங்க நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று புதன் கிழமை மு.ப 10 மணிக்கு மாவட்ட செயலக ஜே.ஐ.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வை கெயார் சர்வதேச நிறுவனம் மற்றும் மன்னார் செயலகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. நிகழ்வில் செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்ட குறுந்திரைப் படங்கள் திரையிடப்படவுள்ளதுடன் கண்காட்சி, கருத்துக்கள அரங்கக் குழு பற்றிய அறிமுகம், ஆற்றுகை உட்பட பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகவும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(த-10)

## ரூ.40 ஆயிரம் பறிபோனது

வங்கியில் பணம் வைப்பிலிடச் சென்று திரும்பிய பெண்ணின் 40 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையர் கைப்பையுடன் பறித்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுவனில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மூளாயைச் சேர்ந்த பெண் ஒருவரே பணத்தை இழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் பணத்தை வைப்பிலிடச் சென்றிருந்த நிலையில் பின்னர் அதனை வைப்பிலிடாது திருப்பிக் கொண்டுவந்துள்ளார். வரும்போது கடை ஒன்றில் அது பற்றிக் கதைத்துள்ளார்.

இதனால் அதனைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் அந்தப் பெண் வீடு நோக்கிச் செல்லும் போது பின்தொடர்ந்து பணத்தைப் பறித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் முகத்தை மறைத்தவாறு சென்ற நபர்களே அவ்வாறு பணத்தைப் பறித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## கஞ்சாவுடன் கைதாகிய இளைஞருக்கு கடூழியம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்த இணுவிலைச் சேர்ந்த நபருக்கு மல்லாகம் நீதிமன்று 6 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையை விதித்துள்ளது. தாவடிச் சந்தி, முருகமூர்த்தி கோயிலடியைச் சேர்ந்த கிரிஜன் என்றழைக்கப்படும் நபருக்கு இவ்வாறு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாகச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் ஏற்கனவே கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து பின்னர், தான் சுற்றவாளி என்று கூறிய நிலையிலேயே, அவர் 2 கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் கையும் மெய்யுமாகப் பொலி ஸாரிடம் மாட்டிக் கொண்டார்.

அவருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். அவர் நீதிமன்றில் தன்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டார். அதனால் அவருக்கு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவருக்கு எதிரான முன்னைய வழக்கு இன்னமும் விசாரணையில் உள்ளது.

(த-4)

## வடக்கு மாகாண அரசின் வரவு - செலவுத் திட்டம்

| | மீண்டுவரும் செலவினம் (சம்பளம்) | மூலதனச் செலவினம் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. ஆளுநர் செயலகம் | 56 மில்லியன் 8 லட்சத்து 49 ஆயிரம் | 2 மில்லியன் | 58 மில்லியன் 8 லட்சத்து 49 ஆயிரம் |
| 2. மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு | 28 மில்லியன்7 லட்சத்து 34 ஆயிரம் | 1 மில்லியன் | 29 மில்லியன்7 லட்சத்து 34 ஆயிரம் |
| 3. மாகாண பேரவைச் செயலகம் | 99 மில்லியன் | 202 மில்லியன் | 301 மில்லியன் |
| 4. முதலமைச்சரின் அமைச்சு | 2 ஆயிரத்து 38 மில்லியன் 6 லட்சத்து 91 ஆயிரம் | 318 மில்லியன் 5 லட்சம் | 2 ஆயிரத்து 357 மில்லியன் ஒரு லட்சத்து 91 ஆயிரம் |
| 5. பிரதம செயலாளர் செயலகம் | 339 மில்லியன் 2 லட்சத்து 24 ஆயிரம் | 453 மில்லியன் 3 லட்சத்து 50 ஆயிரம் | 792 மில்லியன் 5 லட்சத்து 74 ஆயிரம் |
| 6. விவசாய அமைச்சு | 976 மில்லியன் 9 லட்சத்து 23 ஆயிரம் | 466 மில்லியன் 5 லட்சம் | ஆயிரத்து 443 மில்லியன் 4 லட்சத்து 23ஆயிரம் |
| 7. கல்வி அமைச்சு | 9 ஆயிரத்து 297 மில்லியன் 6 லட்சத்து 31 ஆயிரம் | ஆயிரத்து 481 மில்லியன் 5 லட்சம் | 10ஆயிரத்து 779 மில்லியன் ஒரு லட்சத்து 31ஆயிரம் |
| 8. சுகாதார அமைச்சு | 5 ஆயிரத்து 269 மில்லியன் 2 லட்சத்து 53 ஆயிரம் | ஆயிரத்து 347 மில்லியன் 5 லட்சம் | 6 ஆயிரத்து 616 மில்லியன் 7 லட்சத்து 53ஆயிரம் |
| 9. மாகாண மீன்பிடி அமைச்சு | 467 மில்லியன் 9 லட்சத்து 25 ஆயிரம் | 423 மில்லியன் 3 லட்சம் | 891 மில்லியன் 2 லட்சத்து 25 ஆயிரம் |
| | 18 ஆயிரத்து 574 மில்லியன் 2 லட்சத்து 30 ஆயிரம் | 4 ஆயிரத்து 659 மில்லியன் 6 லட்சத்து 50 ஆயிரம் | 23 ஆயிரத்து 269 மில்லியன் 8 லட்சத்து 80 ஆயிரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமி வன்புணர்வின் பின் கொலை; போதியளவு சாட்சியங்கள் உள்ளன

## வழக்கு யாழ். மேல்நீதிமன்றுக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 16
நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திக் கொலைசெய்ததாக குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டவர் மீதான குற்றத்தை நிரூபிப்பதற்குப் போதுமானளவு சான்றுகள் உள்ளன என்று தெரிவித்துள்ள ஊர்காவற்றுறை நீதிமன்று, அந்த வழக்கைக் குற்ற விசாரணைக்காக யாழ். மேல்நீதிமன்றுக்கு மாற்றியுள்ளது.

குறித்த சிறுமியை வன்புணர்ந்து கொன்ற குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டவரது இரத்த மாதிரி உள்ளிட்ட சான்றுப் பொருள்கள் மரபணுப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறிக்கையின்படி சந்தேக நபரான ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரான ஜெகதீஸ்வரன் என்பவர் அந்தக் குற்றத்தைப் புரிந்துள்ளார் என்பதை நிரூபிப்பதற்குப் போதியளவு சான்றுகள் உள்ளன என்று நீதிமன்று நேற்றுத் தெரிவித்தது.

அவரது மரபணு அறிக்கை மற்றும் பல் தடயங்கள் உள்ளிட்டவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

நீதிவான் செ.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருந்தது.

நெடுந்தீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜேசுதாசன் லக்சினி என்ற சிறுமி 2012 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் திகதி அங்குள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அந்தச் சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தலையில் கல்லால் குத்திக் கொலை செய்யப்பட்டார் என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கந்தசாமி ஜெகதீஸ்வரன் (வயது 31) என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் பூரண உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டார். சில வருடங்களின் பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டபோதும் அவரைப் பிணை எடுக்க எவருமே முன்வந்திருக்கவில்லை. அதனால் அவர் 3 வருடங்களுக்கு மேலாக இன்னும் சிறையிலேயே உள்ளார். அவர் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினர் என்று கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில் சகல சான்றுகளும் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு வழக்கு விசாரணைக்காகச் சட்டப்படி யாழ்.மேல்நீதிமன்றுக்கு நேற்று மாற்றப்பட்டுள்ளது.

முன்னர் அவரைப் பிணையெடுக்க நெடுந்தீவைச் சேர்ந்த 2 பேர் முற்பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் தம்மைப் பிணையாளிகள் என்று நிரூபித்த பின்னரே அவ்வாறு பிணை எடுக்க முடியும். அவர்களது பிரிவுக்கான கிராம அலுவலர் பிணைப் படிவத்தைப் பூர்த்தி செய்ய ஒத்துழைக்கவில்லை என்று பிணை எடுக்க வந்திருந்தவர்களால் நீதிமன்றில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. தகுந்த காரணம் அவர்களால் கூறப்படவில்லை. அதனால் அதற்குக் கிராம அலுவலரின் தெளிவர்க்கம் பெறப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பிணை பற்றிய இந்த விடயத்துக்காக இந்த வழக்கு எதிர்வரும் ஜனவரி 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-4)

# எமது மாகாண எல்லைகளை முதலில் பாதுகாக்கவேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் சிவநேசன் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 16
எங்களது மாகாணத்தின் எல்லைகளை நாங்கள் முதலில் பாதுகாக்க வேண்டும். ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, எல்லைகளுக்கு நாங்கள் போகாவிட்டால் எல்லைகள் எங்களை நோக்கி வரும் என்று சிங்கள மக்களுக்கு சொல்லி, அவர்கள் தற்போது அவர்களுடைய எல்லைகளையும் தாண்டி எங்களின் எல்லைகளுக்குள் வந்து விட்டார்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் க.சிவநேசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் வரவு – செலவுத் திட்டத்தின் கொள்கை விளக்க உரையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சனத்தொகை அடிப்படையில் மாகாண நிதி பங்கிடப் படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. கிளிநொச்சி – முல்லைத்தீவு மாவட்டங்கள் போரின் பாதிப்பை எதிர் கொண்டன. அதனால் இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படவில்லை. அவர்கள் இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறு இருக்கையில் எப்படி சனத்தொகை அடிப் படையில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ள முடியும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, "எல்லைகளுக்கு நாங்கள் போகாவிட்டால், எல்லைகள் எங்களை நோக்கி வரும்" என்று கூறினார். இன்று சிங்கள மக்கள் அவர்களுடைய எல்லைகளையும் தாண்டி எங்களின் எல்லைகளுக்குள் வந்து விட்டார்கள். போர் முடிந்த கொஞ்சக் காலத்திலேயே அதிகளவிலான குடியேற்றங்களை முல்லைத்தீவு மாவட்டம் சந்தித்துள்ளது.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் மக்களுடைய விவசாய நிலங்களும், குடியிருப்பு நிலங்களும் பறித்தெடுக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தண்ணி முறிப்பு, ஆண்டான்குளம் போன்ற பகுதிகளில் மக்கள் மீள்குடியேறுவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். ஆனால் அங்கு மக்கள் செல்ல முடியாத நிலை உள்ளது. அதாவது மக்கள் அச் சுறுத்தப்படுகின்றார்கள். அத்துடன் அவர்களுக்கு அடிப்படை வசதிகளும் இல்லாமல் இருக்கின்றது.

எனவே அந்த மக்களுக்கு வசதிகளை வழங்கி, குளங்களை அமைத்து அங்கு குடியேற்றவேண்டும். இதன் மூலமே எங்களின் எல்லைகளை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும். சாதாரணமாக வீட்டில் வளர்க்கப்படும் நாய் நான்கு திசைகளில் சிறுநீர் கழித்துவிட்டு அந்த எல்லைக்குள் வேறு நாய்கள் வந்தால் சண்டையிடுகின்றது. ஆனால் நாங்கள் மட்டும் எங்கள் எல்லைகளைப் பாதுகாக்க முடியாதவர்களாக நாய்களை விடவும் கேவலமாக வாழ்வதா? எனவே இந்த விடயத்தைச் சாதாரண விடயமாகப் பார்க்க வேண்டாம். இது பாரதூரமான விடயமாக வளரும். கடைசியில் தமிழ் மக்களை ஒரு வட்டத்திற்குள் கொண்வரும் அளவுக்கு மக்களை நோக்கி எல்லைகள் வேகமாக சுருங்கிக் கொண்டிருக்கின்றன – என்றார். (த-5-ரி5)

# வரவு செலவுத் திட்டம் மக்களின் பார்வைக்கு

சாவகச்சேரி,டிசெ.16
சாவகச்சேரி நகரசபையின் 2016 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கை நேற்றுத் தொடக்கம் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளது. நகரசபை அலுவலகம், சாவகச்சேரி, நுணாவில், மீசாலை பொது நூல கங்கள் ஆகியவற்றில் பொது மக்கள் பார்வையிடலாம் என்று நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார். (ஐ-9)

G.C.E (A/L)
PHYSICS, MATHS
2016, 2017, 2015 Repeat
மாணவர்களுக்கு வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:
077 396 6535

நியத்த ஜய
419
15-12-2015
20 43 44 58 I
18,348,260/=

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
15.12.2015 | 1916 | நீலம்
வெற்றி இலக்கங்கள்
01 09 35 57
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
2,783,620/=
பெறுமதியான "டீ-செட்" வென்ற டிக்கட் தொடரிலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| குருநாகல் | 400966732-2-42 | பதுளை | 400968600-6-16 |
| கொழும்பு | 400970493-9-09 | கேகாலை | 400968660-6-26 |
| களுத்துறை | 400972673-2-42 | அம்பாறை | 400968994-6-06 |
| கம்பஹா | 400975486-8-08 | மாத்தறை | 400974360-3-23 |
| கண்டி | 400975940-5-35 | திருகோணமலை | 400978429-5-15 |
| காலி | 400976182-2-12 | நுவரெலியா | 400980325-8-28 |
| மாத்தளை | 400964925-5-15 | வவுனியா | 400981866-8-48 |
| இரத்தினபுரி | 400967766-8-28 | | |

Web: www.dlb.lk
SMS: DLB LOT LW
அல்லது துரித அழைப்பு 1919




# சிரித்துக் கொண்டு அதிகாரங்களை பிடுங்குகின்றது தற்போதைய அரசு

## மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன் சாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 16
கடந்த அரசு முறைத்துக் கொண்டு அதிகாரங்களைத் தரமாட்டோம் என்று சொன்னது. தற்போதைய அரசு சிரித் துக் கொண்டு அதிகாரங்களைப் பிடுங்கி எடுத்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் பாதீட்டின் கொள்கை விளக்க உரையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

60 வருடங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வுதான் தீர்வு. அதைக் கடந்த அரசு செய்யவில்லை. இப்போதைய அரசு அதனைச் செய்யும் என்று சொல்லி ஆட்சி பீடமேறியது. தற்போதைய இந்த அரசு, தந்திரோபாயமாக – மறைமுகமாக, மாகாணத்துக்கு இருக்கும் அதிகாரங்களை மத்திக்குக் குவிக்கும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றது.

நாங்கள் தற்போது சமஷ்டி கேட்டுக் கொண்டிருக்கின்றோம். எங்களிடமிருந்து – மாகாணசபை அதிகாரங்களையும் பிடுங்கினால், நாங்கள் கடைசியில் மாகாணசபையே போதும் என்று கேட்போம் என்று நினைத்துக் கொண்டு மாகாணத்தின் அதிகாரங்களைப் பிடுங்கும் வேலை இடம் பெற்று வருகின்றது. அதாவது, நாங்கள் கூடக் கேட்கும் போது இருப்பதைப் பிடுங்கினால், கடைசியில் இருப்பதையாவது விடுங்கள் என்று கேட்போம் என்ற நினைப்பில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

13 ஆவது திருத்தம் போதாது என்பது, அது கொண்டு வரப்பட்ட காலம் முதல் சொல்லப்பட்டு வரும் விடயம். மங்கள முனசிங்க அறிக்கை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் கொண்டு வரப் பட்ட அரசியலமைப்பு, முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் காலத்தில் நடத்தப்பட்ட வட்டமேசை மாநாடு எல்லாமே, 13 ஆம் திருத்தம் தமிழருக்குரிய தீர்வு அல்ல என்பதைக் கடந்த கால அரசுகள் ஏற்றுக் கொண்டன என்பதன் வெளிப் பாடே.

கடந்த அரசு முறைத்துக் கொண்டு தர மறுத்ததை, தற்போதைய அரசு சிரித்துக் கொண்டு பிடுங்கி எடுக்கின் றது.

அதிகாரப் பரவலாக்கத்தில் தற்போதைய அரசுக்கு விருப்பு இருக்குமாக இருந்தால் அதற்கு முதலில் நல்லெண்ண சமிக்ஞையாக இந்தக் கிராம இராச்சியம் தொடர்பான முறைமையைத் தூக்கி எறிய வேண்டும் – என்றார். (த-5-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு மக்களுக்கு வீடமைப்பு நிதி போதாது

## அதனை அதிகரிக்குமாறு ஜே.வி.பி கோரிக்கை

கொழும்பு, டிசெ 16

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க 2009 இல் மதிப்பீடு செய்யப்பட்டு வழங் கப்பட்ட ஐந்தரை இலட்சம் ரூபா நிதி போதாது. இதனால் அந்த மக்கள் தமது வீடுகளைக் கட்டிமுடிக்க முடியாமல் பாதிக் கப்பட்டுள்ளனர் என்று நேற்று சபையில் தெரிவித்த ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, இந்த நிதியு தவித் தொகை மேலும் 3 இலட்சம் ரூபாவால் அதிகரிக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட காணிகளில் மீள்குடியேறிய மக்களுக்கு எந்த வித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. முகாம்களில் இருப்பவர்களைவிட மீள்குடியேற்ற மக்கள் பெரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற காணி அபிவிருத்தி அமைச்சு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், சிறைச்சாலைகள், மறு சீரமைப்பு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 6 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் வடக்கு - கிழக்கு மக்களுக்கு இன்னும் பெரிய பிரச்சினைகள் உள்ளன. இன்னும் அந்த மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர். சுன்னாகம், வலிகாமம் உள்ளிட்ட பகுதிகளில் 13 முகாம்கள் உள்ளன. வலிகாமம் பகுதியில் காணிகள் விடுவிக்கப்பட்டன. இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை. முகாமில் வாழ்பவர்களைவிட மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்குப் பெரிய பிரச்சினைகள் உள்ளன.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. ஒரு வீட்டைக் கட்டிக்கொடுப்பதற்காக ஐந்தரை இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.

போர் 2009இல் முடிவடைந்ததையடுத்து இந்தியா மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியால் வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2010இல் இந்த வீட்டுத்திட்டத்துக்கான மதிப்பீடு செய்யப்பட்டது. இருப்பினும், இந்த வீட்டுத்திட்டத்துக்கான நிதியுதவி 2012, 2013, 2014ஆம் ஆண்டுகளில் தான் உரியவர்களுக்கு வழங்கப்பட்டது. 2010இல் வீட்டுத்திட்டம் மதிப்பீடு செய்யப்பட்டபோது சீமெந்து, கம்பிகள் ஏனைய பொருள்களின் விலைகள் 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் அதிகரித்திருக்கும். எனவே, இந்த ஐந்தரை இலட்சத்தை வைத்துக்கொண்டு அந்த மக்களால் வீடுகளைக் கட்டி முடிக்க முடியாது.

அந்த மக்கள் கூடாரம் போன்ற வீடுகளில் வாழ்கின்றனர். எனவே, அவர்கள் நல்லதொரு வீட்டைக் கட்டிமுடிக்க வேண்டுமாயின், மேலும் 3 இலட்சம் ரூபா அந்த மக்களுக்கு வழங்கவேண்டும் -என்றார்.

இந்திய மீனவர்கள் பிரச்சினை குறித்து கருத்து வெளியிட்ட அவர், இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதால் வடபகுதி மீனவர்கள் பெரியளவில் பாதிக்கப்படுகின்றனர். முன்னர் ஒருநாளில் ஈட்டும் வருமானத்தை தற்போது ஒரு வாரத்தில் ஈட்டவேண்டிய நிலையில் அந்த மீனவர்கள் இருக்கின்றனர்.

ட்ரோலர் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கைது செய்யப்படும் இந்திய மீனவர்களிடம் கடற்படையினர் மீனை இலஞ்சமாகப் பெறுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்திய மீனவர் விடயத்தில் கடற்படையினரிடமும் சரியான நிர்வாக முறைமை ஒன்றைக் காணமுடியவில்லை. சரியான தலையீடு இல்லை. இந்நிலையில், ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநில கடற்பகுதிக்குச் சென்று மீன்பிடிக்க முடி யாது. அப்படியாயின், இது எமது நாட்டு இறைமையுடன் தொடர்பு டைய பிரச்சினையாகும். எனவே, இதைத் தீர்க்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

(த-சி)

UNIVERSITY OF CAMBRIDGE
**CAMBRIDGE ENGLISH**
*GET A CERTIFICATE THAT IS ACCEPTED GLOBALLY*

**Cambridge - Prelimnary English Test (PET)**

* இது ஓர் Intermediate B1.Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றி பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும். **Exam date: Saturday 12th March in Colombo.**

**Cambridge First Certificate in English (FCE)**

FCE is an upper intermediate Level Exam. It tests the ability to deal confidently with a range of written and spoken communication. FCE is the most widely taken of the general English exams, with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2.

UK இல் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் IELTS இற்குப் பதிலாக FCE யினை ஏற்றுக் கொள்கின்றன.

It covers all four language skills - Advanced Reading, Advanced Writing, Listening and Speaking Knowledge of grammar and vocabulary.

**Exam date:Tuesday 07th June 2016 in Colombo.**

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 21.12.2015

COURSE SCHEDULE

| Mon, Tues, Wed, Thur | | Saturday & Sunday. |
|---|---|---|
| Duration | 10 Weeks | |
| Time | 10.00 - 12.00, 03.00 - 05.00 | 03.00 - 05.00 |

**BRITISH COLLEGE OF ENGLISH**
No.192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel: 021 222 0384, 077 880 3887

**சர்வதேச தொலைக்காட்சிக் கலைஞர்கள் தேர்வு 2016**

[illegible]

ibceylon@gmail.com

[illegible] 31.12.2015 [illegible]

**வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.**

கோப்பாய் எரிபொருள் நிலையத்தில் உராய்வு நீக்கி எண்ணெய் வகைகள், மின்பிறப்பாக்கி வைப்பதற்குமான அறை அமைத்தல்

மேற்படி நிலையத்தின் வேலைக்கு பொருத்தமானவர்களிடமிருந்து கேள்வி விண்ணப்பம் கோரப்படுகிறது. விண்ணப்பங்களை தலைமைக் கந்தோரில் வேலை நாள்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுதிகதி- 23.12.2015 ஆகும். (11.12.2015 ஆம் திகதிய இயக்குநர்சபை கட்டளைப்படி) (சி.15806) (13.15)

பொது முகாமையாளர்
வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.

**யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடல்**

யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடல் (2015/2016) ஆனது பழைய மாணவர்களுக்கு இடையிலான உறவினையும் பழைய மாணவர்களுக்கும் கல்லூரிக்கும் இடையிலான தொடர்பினையும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு எதிர்வரும் (19.12.2015) சனிக்கிழமை மாலை 4 மணி முதல் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இடம் - யாழ்ப்பாணக் கல்லூரி
காலம் 19.12.2015 (சனிக்கிழமை)
நேரம் - மாலை 4 மணி

அனுமதிச் சீட்டுக்கள் பெற்றுக் கொள்வதற்குப் பின்வருவோரைத் தொடர்பு கொள்ளவும்.

1) திரு.இ.குகன் 077 912 3670
2) திரு.ரி.கேதீஸ்வரன் (செய்) 077 438 6508
3) திரு.வே.கணேசரட்ணம் 077 691 3024

செ.செந்தூரன்
(செயலாளர்)
Hony Secretary
Jaffna College Alumni Association, Vaddukkoddai.

(சி.15804) (11,15,17)

**தென்மராட்சியில்** தொடர்பு: 077 670 4338

ஆன்மீகப் பணி, அறப்பணி புரிந்து வரும் நிறுவனங்களுக்கான அன்பான அழைப்பு.தொலைபேசி மூலம் ஒரு முறை தொடர்பு கொள்ளுங்கள்.

**வீடு வாடகைக்கு** தொடர்பு: 076 5451 307, 077 3533163

பருத்தித்துறை வீதி, 2 ஆம் ஒழுங்கையில் (யாழ். புகையிரத நிலையத்திற்கு அருகில்) 6 அறை வாகனத்தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளையும் கொண்ட பெரிய வீடு வாடகைக்கு உண்டு. அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் விடுதிகள் நடத்துவதற்கும் உகந்தது.

**வீடு விற்பனைக்கு** தொடர்பு: 021 492 1162, 077 711 0085

இல.14/1 புதியவீதி கொய்யாத்தோட்டம், சுண்டுக்குளியில் இருக்கும் நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட வீடு விற்பனைக்கு உண்டு (66802) (14,15)



* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

[illegible]

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

[illegible]
தொடர்பு: 077 559 3006 [illegible]

[illegible]
தொடர்பு: 077 654 1731 [illegible]

**மலேசியா வேலை வாய்ப்பு**

1) சொக்லேட் கொம்பனி (கெல்ப்பர் 50 ஆண்)
RM 900 SR 36000 + OT
(No Food, Accommodation Free)

2) கிளவுஸ் கொம்பனி
(கெல்ப்பர் 50 ஆண்)
RM 900 SR 36000 + OT
(No Food. Accommodation Free)

3. மேசன், பிளம்பர், பெயின்டர்,லேபர், எலக்ரிசன், காப்பெண்டர் உடன் தேவை.
(வங்கிக் கடன் வசதிகளும் செய்து கொடுக்கப்படும்)

T.P: 076 885 1720, 076 885 1723
Email:-asianlanka27@gmail.com
Galaxy Foreign Employment Agency
Licence No: 2486

**புதிய ஆங்கில வகுப்புக்கள்** தொடர்பு: 075 076 3138

புதிய ஆங்கில வகுப்புகள் தரம் 3இலிருந்து உயர்தரம் ஆங்கில இலக்கியம் தரம் 10இற்குரியது 16.12.2015 இலிருந்து (பிற்பகல் 2.30 இற்குப் பின்னர்) (66879) (14,15)

**வீடு வாடகைக்குண்டு** தொடர்பு: 077 787 8318

பிறவுண் வீதி, நீராவியடியில் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு மட்டும் கொடுக்கப்படும். (66870) (14,15)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

ஷாளினி ஜெயபாலச்சந்திரன்
(LL.B), சட்டத்தரணி



11.12.2015 அன்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக உறுதிப் பிரமாணம் செய்த ஷாளினி ஜெயபாலச்சந்திரனை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
வை.சங்கர்ராஜ் குடும்பத்தினர்.
[illegible]
ந.துளசிதாசன் குடும்பத்தினர் (அளவெட்டி)
செ.செல்வராசா குடும்பத்தினர் (திருநெல்வேலி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes

# பாராட்டி வாழ்த்துகின்றேன்



## உயர்திரு
## சிதம்பரப்பிள்ளை பசுபதி
## (குடாநீரூரான்)




வடமராட்சி கிழக்கில் உதித்த மண்ணின் மைந்தன்
**உயர்திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி**
தன் மண் சிறக்க பெயர் விளங்க சமூக பொதுச்
சேவைகளாக மிக நெருக்கடியான காலகட்டத்தில்
வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தின் முன்னாள்
தலைவராகவும், வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின்
முன்னாள் பிரதேச செயலாளராகவும், பருத்தித்துறைப்
பிரதேசசபையின் முன்னாள் செயலாளராகவும்,
பணி புரிந்து அளப்பரிய சேவை செய்தவர்.
சமகாலத்தில் சமூக அபிவிருத்தி, கலை, கலாசார,
சமய மேம்பாடுகளுக்காக அரும்பெரும்
பணிபுரிந்து வரும்வேளையில்
நேற்று (15.12.2015) செவ்வாய்க்கிழமை
மகரகம இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெற்ற
கலைஞர்களுக்கான கௌரவிப்பு விழாவில்
தமிழ் இலக்கியத்துறை (மரபுக்கவிதை)
சேவையினைப் பாராட்டியும், கௌரவித்தும்
**கலாபூசணம்** என்னும் சிறப்பு விருது வழங்கப்பட்டது.
இதனைப் பெற்ற எமது அன்புக்கும்
பெருமதிப்புக்குமுரிய **உயர்திரு**
**சிதம்பரப்பிள்ளை பசுபதி (குடாநீரூரான்)**
அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன்
அவரது சேவைகள் மேன்மேலும் தொடர
நல்ல உடல் உள ஆரோக்கியங்களையும்
நீண்ட ஆயுளையும் எல்லாம்வல்ல இறைவன்
அருள வேண்டுமென வேண்டுதல் செய்கின்றேன்.

**பொன்.ஸ்ரீராமச்சந்திரன்**
**(மைத்துனர்)**
**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரவிழிகளுடன் 20 ஆண்டுகள்



அமரர்
மேரி மாகிறெற்
துரைநாயகம்
(உசன், மிருசுவில்)

இருபது ஆண்டுகள் பறந்ததம்மா
இரவாமல் அடிமனது துடிக்குதம்மா
நெஞ்சம் மறக்க மறுக்குதம்மா
மறப்போமா நாங்கள் உங்களை
வாழ்வோம் உயிர் உள்ளவரை
உம் நினைவுகளுடன்.....

மண்ணில் 1950.06.15
விண்ணில் 1995.12.16

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
இல.38, மாட்டீன்லேன்,
யாழ்ப்பாணம்.


# சீற்றமடைந்த அமைச்சர் காமினி சபையை விட்டு வெளியேறினார்

கொழும்பு, டிசெ.16
குழுநிலை விவாதத்தில் உரையாற்றுவதற்காக தனக்கு ஒதுக்கப்பட்ட நேரம் போதாதெனக் கூறி தனது உரையை இடையில் நிறுத்திவிட்டுச் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான மூத்த அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா.

நாடாளுமன்றம் நேற்று முன் தினம் முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியன முடிவடைந்த பின்னர், காணி அமைச்சு மற்றும் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, இந்துசமய கலாசார அமைச்சு மீதான குழுநிலை விவாதம் ஆரம்பமானது.

விவாதத்தில் உரையாற்றுவதற்கு காமினி ஜயவிக்கிரம பெரேராவின் பெயர் அழைக்கப்பட்டது. அவரின் பெயரை அழைத்த சபைக்குத் தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தங்களுக்கு ஏழு நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டார்.

பேச ஆரம்பிப்பதற்கு முன்னரே நேரம் பற்றி அறிவிக்கப்பட்டதால், சற்றுக் கோபமடைந்தார் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம. எனினும், அதை வெளிப்படுத்தாது அவர் உரையைத்தொடர்ந்தார். அவர் உரையாற்ற ஆரம்பித்து ஒருசில நிமிடங்கள் சென்ற பின், அமைச்சரே, உங்களுக்கு இன்னும் 2 நிமிடங்களே உள்ளன என்று செல்வம் சுட்டிக்காட்டினார்.

இதனால் கடுப்பானார் அமைச்சர். நான் இன்னும் உரையை ஆரம்பிக்கவே இல்லை. அதற்குள் நேரம் முடிந்துவிட்டதா? எனக் கேட்டார். இதற்குப் பதிலளித்த குழுக்களின் பிரதித்தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உங்களுக்கு 7 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன. அந்தவகையில் இன்னும் 2 நிமிடங்களே உள்ளன என்றார்.

அமைச்சரின் கோபம் எல்லை மீறியது. அப்படியா? நான் இனி பேசமாட்டேன் எனக் கூறி விட்டு அமர்ந்தார். இந்நிலையில், 2 நிமிடங்கள் உள்ளன. எனவே, உரையாற்றுங்கள் என்று அமைச்சரை செல்வம் அழைத்தார்.

அதற்கு காமினி ஜயவிக்கிரம பெரேரா மறுத்து விட்டார். அத்துடன், ஆவணங்களையும் எடுத்துக்கொண்டு சீற்றத்துடன் சபையை விட்டு வெளியேறினார். (கு-சி)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
16 . 03 . 1929

மறைவு
16 . 11 . 2015



அமரர் கந்தையா ஞானசுந்தரம்

கடந்த 16.11.2015 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.12.2015) புதன்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்கன் வளவு.
இணுவில். (66871) (12.15)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



விசுவலிங்கம்
வயித்தியநாதன்

தோற்றம்
06.08.1942

மறைவு
26.11.2014

திதி: 16.12.2015

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.403/26, பிரமந்தனாறு, விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட (ஓய்வுபெற்ற மலேரியா தடை இயக்க ஊழியர் - தருமபுரம் வைத்தியசாலை) விசுலிங்கம் வயித்தியநாதன் அவர்களின் ஓராண்டு நிறைவு அஞ்சலி

விழிகள் இரண்டும் அலைகிறது
விலையில்லா அப்பா உங்கள் வதனம் தேடி
நெஞ்சம் எங்கும் கனக்கிறது
நெருங்கிவிட முடியா உங்கள் பயணம் எண்ணி
அப்பா என்றழைக்க இதயம் தவித்திருக்க!
ஆறுதல் சொல்ல நீங்கள் இல்லையப்பா!
அலைகள் போல் உங்கள் நினைவுகள் அலைமோத
அளவிட முடியா. சோகம் எம் விழி மறைக்க
ஆண்டுச் சக்கரம் உருண்டோடிச் சென்று
ஆண்டு ஒன்று ஆனதப்பா எம்மை நீங்கி நீங்கள் சென்று...

பிரமந்தன் ஆறு,
விசுவமடு.

மகள், மருமகன்,
திரு.திருமதி மதன்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரம், இறுப்பிட்டி
புளியடிச்சந்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
அம்பிகை களஞ்சியம், ராம் சுப்பர் சிற்றி- யாழ்ப்பாணம்,
சன்றைஸ் ரேடர்ஸ், நியூ மெடிக்கல் Clinic Center
சாவகச்சேரி, சிற்றி சென்ரர் - கொழும்பு ஆகியவற்றின்
உரிமையாளருமான

## தம்பிராசா குகநேசன்

தோற்றம்
13.03.1961

மறைவு
16.11.2015

### அன்னாரின் ஞாபகார்த்த அன்னதான நிகழ்வு

நாளை (17.12.2015) வியாழக்கிழமை புங்குடுதீவில் ( 5 ஆம் வட்டாரம் ஸ்ரீதுர்க்கா தேவி அம்பாள் ஆலயத்தில்) இடம் பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பு உள்ளங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரது மரணச்செய்தி கேட்டு தொலைபேசி மூலமும் நேரிலும் வந்து அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக் கொள்ளவும்.

அன்னை நாகா பூட் சிற்றி
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அன்னாரது
குடும்பத்தினர் சார்பாக
த.குழந்தைவேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுவாகலில் ராணுவத்திடம் சரணடைந்தார் எனது மகன்

## மீட்டுத் தருமாறு தந்தை மன்றாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.16
இறுதிப் போரின்போது 40 விடுதலைப்புலி உறுப்பினர்களுடன் வட்டுவாகல் பகுதியில் இராணுவத்திடம் சரணடைந்தார் எனது மகன். 6 வருடங்கள் கடந்தும் அவர் பற்றிய தகவல் எதுவும் இல்லை.- இவ்வாறு தந்தை ஒருவர் ஆணைக் குழு முன்பாகச் சாட்சியம் வழங்கினார்.
பருத்தித்துறைபிரதேசசெயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வில் சாட்சியமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது–
1990 ஆம் ஆண்டு இயக்கத்தில் சேர்ந்தவர் எனது மகன் கருணாநிதி. இறுதிப் போரில் சரணடையும் வரை போராடியவர். இறுதியாக வட்டுவாகலில் வைத்து இராணுவத்திடம் சரணடைந்தார்கள்.
சரணடைந்து இரண்டு வாரங்களில் வல்வெட்டித்துறை பொலிஸார் வந்து மகனைப்பற்றி விசாரித்து முழுத் தகவல்களையும் எடுத்துக் கொண்டு போனார்கள்.
2010 ஆம் ஆண்டு அவரைப் பூசா முகாமில் கண்டதாக சில சொன்னார்கள். ஆனால் அங்கிருந்தும் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.
நீங்கள் தான் எங்கட பிள்ளையைத் திருப்பித் தரவேண்டும். உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும் – என்று கண்ணீர் விட்டவாறு சாட்சியமளித்தார். (ஐ–ரி2)

# காணாமற்போன எனது தங்கை சாட்சியமளித்த பின் கிடைத்தார்

## சகோதரி ஒருவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழு முன்னிலையில் பதிவுகளை மேற்கொண்ட பின்னர் காணாமற் போன எனது தங்கை மீண்டு வந்தார். ஆனால் அம்மாவை இப்போதும் தேடுகின்றேன் என்று சாட்சியம் அளித்தார் சகோதரி ஒருவர்.
வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்கையிலேயே அந்தச் சகோதரி இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கடந்த இறுதிப்போரின் போது திக்குத்திக்காக எங்களது குடும்பம் பிரிந்து விட்டது. பின்னர் அனைத்து இடங்களிலும் தேடினேன். எங்கேயுமே அவர்கள் இல்லை. இந்த நிலையில் கடந்த வருடம் நடைபெற்ற காணாமற் போனோர் தொடர்பிலான விசாரணைகளின்போது எனது தங்கையையும், அம்மாவையும் காணவில்லை என நான் சாட்சியம் அளித்திருந்தேன். அதன் பின்னர் எனது புகைப்படம் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது. அதைக் காணாமற்போன எனது தங்கை பார்த்திருக்கின்றார். அப்போதுதான் எனது தங்கைக்குத் தெரியும் நான் உயிருடன் உள்ள விடயம்.
அவர் போரின்போது அநாதரவாகி அருட்சகோதரிகளின் துணையுடன் தானும் ஒரு அருட்சகோதரி போன்று முல்லைத் தீவைக் கடந்து வவுனியாவுக்குச் சென்றாராம். பின்னர் அங்கு அருட் சகோதரிகளுடன் தங்கியிருந்துள்ளார். புகைப்படத்தைப் பார்த்துவிட்டுக் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் என்னைத் தேடி வந்து இணைந்துள்ளார். ஆயினும் எனது அம்மா வான சி.சிவனேஸ்வரியை இன்று வரை காணமுடியவில்லை அதனாலே தொடர்ந்தும் சாட்சியம் அளிக்க வந்தேன்–என்றார் அல்வாயைச் சேர்ந்த ஐங்கரன் லக்சனி. (த–21)

# மகன், மருமகனைக் கடத்தி ஹெலியில் ஏற்றிச் சென்றனர்

## ஆணைக்குழு முன்பாக தாயொருவர் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ.16
மிதிவெடி அகற்றும் பிரிவில் வேலை செய்த எனது மகனையும், மருமகனையும் கடத்திச்சென்ற இராணுவத்தினர் வல்லிபுரக்கோவில் பகுதியில் வைத்து அவர்களைக் ஹெலியில் ஏற்றிக் கொண்டு போனார்கள். – இவ்வாறு தாயொருவர் சாட்சிமளித்தார்.
காணாமல் போனோர் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் அமர்வு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் சாட்சியம் வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது –
2006 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் எனது மகனும், மருமகனும் மிதிவெடி அகற்றும் வேலைக்குச் சென்றனர். எங்களது ஒழுங்கையில் இருந்து வீதிக்கு ஏறியபோது வீதியில் படுத்திருந்த இராணுவத்தினர் எனது மகனையும், மருமகனையும் வெள்ளை வானில் ஏற்றிக் கொண்டு சென்றனர்.
இதனை ஓடக்கரைச் சந்தியில் உள்ள ஒரு வீட்டுக்காரர் நேரில் கண்டுள்ளார். அவர்தான் எங்களிடம் தகவல் கூறினார். நாங்கள் தேடி அலைந்து பருத்தித்துறையில் உள்ள இராணுவ முகாமில் சென்று கேட்டோம். ஆனால் அவர்கள் தங்களிடம் இல்லை என்று கூறிவிட்டார்கள்.
மீண்டும் நாங்கள் கதறி அழுதபடி தேடினோம். ஆனால் எனது மகனும், மருமகனும் கிடைக்கவில்லை. ஆனால் வல்லிபுரம் ஆள்வார் கோயிலுக்குப் பக்கத்தில் இருந்த வல்லை காம்பில் வைத்து எனது மகனும் மருமகனும் இராணுவத்தினருடைய ஹெலியில் ஏற்றப்பட்டுள்ளனர்.
அந்த முகாமில் இருந்து 25 மீற்றர் தூரத்தில் இருக்கும் பனை ஒன்றின் மேலிருந்தஒருவர்இதனைக் கண்டு எம்மிடம் கூறினார்.
2006 ஆம் ஆண்டு எனது மகளையும் வேலை முடிந்து வரும்போது இனந்தெரியாத நபர்கள் சுட்டு கொள்றார்கள். மகள் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் குடும்பநல உத்தியோகத்தராக கடமையாற்றினார்– என்று தெரிவித்தார். (ற–ஐ–21)

காணாமல் போனோர் குறித்து விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வடக்கில் நடத்தப்பட்டு வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அவற்றில் சாட்சியங்களைப் பதிவு செய்து வருகின்றனர். அவற்றில் இராணுவத்துக்கு எதிரான சாட்சியங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

# கண்முன்னே மகனுடன் பலரை ஏற்றிச் சென்றது இராணுவம்

## வட்டுவாகலில் மகனை இராணுவத்தினரிடம் ஒப்படைத்த பெற்றோர் சாட்சியம்

கரணவாய், டிசெ.16
சரணடைந்தால் பாதுகாப்பளிக்கப் படும் என்று இராணுவம் கூறியதை நம்பி நாங்கள் மோசம் போய் விட்டோம். இப்ப அவன் எங்கே என்பதற்கு இராணுவம் தான் பதில் சொல்ல வேண்டும். எனது பிள்ளையுடன் நூற்றுக்கணக்கானவர்களை மூன்று பஸ்களில் ஏற்றிச் சென்றதை எங்கள் கண்களால் கண்டோம் என வட்டுவாகலில் மகனை இராணுவத்தினரிடம் ஒப்படைத்த பெற்றோர் ஆணைக்குழு முன்பாகச் சாட்சிய மளித்தனர்.
பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆணைக்குழு அமர்விலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
அவர்கள் தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது –
கடற்புலி உறுப்பினராக இருந்த எங்களது பிள்ளையை வண.பிதா பிரான்ஸிஸ் அடிகளார் முன்னிலையில் வட்டுவாகல் பகுதியில் வைத்து ஒப்படைத்தோம். அவரை இராணுவத்தினர் இன்னும் வைத்திருக்கின்றனர். அவரைத்தேடிக்கண்டுபிடிக்கத் தேவையில்லை. அவர்களிடமிருந்து மகனை மீட்டுத் தாருங்கள்.
சரணடைந்த எமது பிள்ளையுடன் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தளபதிகள் உட்பட 100 இற்கு மேற்பட்டவர்களை மூன்று பஸ்களில் ஏற்றிக் கொண்டு போவதை எமது கண்களால் நேரில் கண்டோம். எனது மகனுடன் மருமகள் மற்றும் பிள்ளைகளையும் பஸ்ஸில் ஏற்றிய இராணுவத்தினர் அதில் இடமில்லை என்று கூறி இறக்கிவிட்டு மகனை மாத்திரம் ஏனையோருடன் அழைத்துக் கொண்டு சென்றனர்.
எங்களுக்கு எந்த நிவாரண உதவிகளும் வேண்டாம் அவர்களிடம் ஒப்படைத்த பிள்ளை தான் மீண்டும் வேண்டும். நீங்கள் தான் இராணுவத்தை விசாரித்து பிள்ளையை மீட்டுத் தரவேண்டும்.– எனக் கண்ணீர் விட்டழுதவாறு சாட்சியமளித்தனர். (ற–ஐ–108)

# டக்ளஸே எனது மகனைக் கடத்தியிருக்க வேண்டும்

## ஆணைக்குழு அமர்வில் தாயொருவர் கண்ணீர்

யாழ்ப்பாணம்,டிசெ.16
டக்ளஸே நேரடியாக எனது மகனைக் கடத்தியிருக்க வேண்டும் அவரிடம், மகனைத் தருமாறு நேரடியாகப் போய்க் கேட்டால் முடிவு சொல்கிறோம் என்கிறார். எனது மகனை அவர் தான் வைத்திருக்கின்றார். மகனை மீட்டுத் தாருங்கள் – இவ்வாறு ஒரு தாய் ஒருவர் சாட்சியம் அளித்திருந்தார்.
வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வில் சாட்சியமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது–
எனது மகன் பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டு 2004 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் உள்ள நகர சபையில் காவலாளியாகச் சேர்ந்தார். 2006 ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் ஒரு நாள் காலை அவர் வேலைக்காகப் புறப்பட்டார்.
வேலைக்குச்சென்ற மகன் [illegible] யில் நகர சபையில் கையெழுத்தும் இட்டுள்ளார். அவருடைய மோட்டார் சைக்கிளும் நகர சபையிலே தான் நின்றது. ஆனாலே ம[illegible] [illegible] காணவில்லை. நகரசபையில் இருந்து அந்தச் சுற்று வட்டாரம் அனைத்தும் ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது. வேறு எவரும் வந்து எனது மகனைக் கடத்தவில்லை. டக்ளஸ்தான் கடத்தியுள்ளார். வல்வெட்டித்துறையில் இருந்த ஈ.பி.டி.பி முகாமில் கேட்டோம். ஆனால் அவர்கள் அங்கு இல்லை என்று கூறினார்கள். நேரடியாக யாழ்ப்பாணத்தில் இருந்த டக்ளஸின் அலுவலகத்துக்குச் சென்று அவரைச் சந்தித்து எனது மகனைத் தருமாறு கேட்டேன்.
அதற்கு அவர் ஒரு முடிவு எடுப்போம் என்று தான் சொன்னார். இப்படி பல தடவை அவரைக் கேட்கும் போதும் இதே பதிலைத்தான் சொல்லுவார். எனது மகனை ஈ.பி.டி.பி தான் பிடித்து வைத்திருக்கின்றது. அவனை மீட்டுத் தாருங்கள் – என்று அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். (ற–ஐ–21)

அந்தச் சுற்று வட்டாரம் அனைத்தும் ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது. யாரும் வந்து எனது மகனைக் கடத்தவில்லை. டக்ளஸ் தான் கடத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனது கணவர் விடுதலை புலிகள் இயக்கத்தில் இருந்த போதே இராணுவத்தினரால் பிடித்து செல்லப்பட்டார்."

# ரகசியமான முகாமிலேயே கணவரை வைத்துள்ளனர்

### ஆணைக்குழுவிடம் மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ.16
இராணுவத்தினருடைய மறைமுக முகாம்களை விசாரணை செய்யுங்கள். அதில்தான் எனது கணவர் உள்ளார். மறைமுக முகாம்களை விசாரணை செய்தால் எனது கணவரைக் கண்டு பிடிக்கலாம். - இவ்வாறு ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்தார் பெண் ஒருவர்.

சங்கானை பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற காணாமல்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்கும் போதே அந்த பெண் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது–

எனது கணவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த போதே இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டார். அவருடன் அவருடைய நண்பர்களும் இராணுவத்தால் பிடிக்கப்பட்டார்கள். எனது கணவர் பிடிக்கப்பட்டு 5 மாதங்களின் பின்னர் அவர் காயமுற்ற நிலையில் வவுனியா வைத்தியசாலைக்கு இராணுவத்தினரால் கொண்டு வரப்பட்டார். நான் கண்டேன். ஆனால் வைத்தியசாலையில் சென்று அங்கு சிகிச்சை பெற்றவர்களின் விவரத்தில் பார்த்தால் அவருடைய விவரங்கள் எதுவும் இல்லை.

இராணுவத்தால் கொண்டு வரப்படுபவர்களை வைத்திய சாலையில் பதியமாட்டார்கள். இராணுவத்தினர் விவரங்களைக் கொடுக்க மாட்டார்கள். எனது கணவரை இராணுவத்தினர் தான் வைத்திருக்கின்றார்கள். எனது கணவருடன் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு காணாமல் போன ஒரு நண்பர் அண்மையில் திரும்பி வந்து தனது மனைவியுடன் இணைந்துள்ளார். நான் அவரிடம் நேரடியாகச் சென்று விசாரித்தேன்.

அப்போது எங்களைத் திருகோணமலையில் உள்ள ஒரு ரகசியமான முகாம் ஒன்றில்தான் இராணுவத்தினர் அடைத்து வைத்திருந்தார்கள். ஆனால் அங்கு யார் யார் இருக்கின்றார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. எனக்குப் பக்கத்தில் யார் இருக்கின்றார் என்றே எங்களுக்குத் தெரியாது. அப்படித்தான் இராணுவத்தினர் எங்களை வைத்திருந்தார்கள் என்று கூறினார்.

அவருடன் தான் எனது கணவரையும் இராணுவம் பிடித்துச் சென்றது. குறித்த இராணுவத்தினருடைய மறைமுகமான தடுப்பு முகாம்களில் ஏதோ ஒன்றில் தான் எனது கணவர் உள்ளார். அந்தத் தடுப்பு முகாம்கள் மீது விசாரணைகளை மேற்கொண்டால் எனது கணவரைக் கண்டு பிடிக்கலாம். - என்று தெரிவித்துள்ளார். (ற-21)



காணாமல் போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு நேற்று சங்கானை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. அதில் சாட்சியம் வழங்கிய தாய் ஒருவர்.......

# சிவில் உடையில் வந்த ராணுவம் கணவரைக் கடத்திச் சென்றது

### மீட்டுத் தருமாறு மனைவி கண்ணீர்

யாழ்ப்பாணம்,டிசெ.16
மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைவதற்கு கணவரை அழைத்துக்கொண்டு செல்லும்போது, நீர்வேலிப்பகுதியில் ஓட்டோவில் சிவில் உடையில் வந்த இராணுவத்தினர் எனது கணவரைக் கடத்திச் சென்றனர். - இவ்வாறு பெண்ணொருவர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வுகள் நேற்று முன்தினம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அதில் சாட்சியமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது–

எனது கணவர் சிறி ஆனந்தனுக்கு இயக்கத்துடன் தொடர்பு இருப்பதாக ஆமி தேடி திரிஞ்சவன்கள். 2008 ஆம் ஆண்டு அவரை யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றோம்.

போகும் வழியில் நீர்வேலி கந்த சுவாமி ஆலயத்தில் சாமி கும்பிட்டுப் போக இறங்கினோம். அவர் முதலில் போய் கும்பிட்டு வெளியில வரும் போது ஓட்டோ ஒன்றில் சிவில் உடையில் வந்த ஆமிக்காரர் அவரை இழுத்துத் தூக்கிப் போட்டு கடத்திக்கொண்டு போனார்கள்.

இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையம், கோப்பாய் பொலிஸ் நிலையம் சென்ற போது முறைப்பாட்டை ஏற்க மறுத்தார்கள். இதுவரை அவர் பற்றிய தகவல் இல்லை எனது கணவனை மீட்டுத் தாருங்கள். - என்று கண்ணீருடன் தெரிவித்தார். (ற-ஜ-109)

# இந்திய இராணுவமே மகன்மாரை கடத்தியது

### ஆணைக்குழு முன் தாய் சாட்சியம்

யாழ்ப்பாணம்,டிசெ.16
கடையைக் கொளுத்தி, எனது இரண்டு பிள்ளைகளையும் பிடித்துச் சென்றது இந்திய இராணுவமே என்று சாட்சியம் அளித்தார் தாயொருவர்.

வடமராட்சி வடக்குப் பிரதேச செய லகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற காணாமல் போனோர் தொடர்பிலான ஆணைக்குழுவின் விசாரணையின் போதே அந்தத் தாய் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது –

1989 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினருக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரின் போது, வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்த கடையில் எனது இரண்டு மகன்களும் வேலை செய்தனர்.

அந்தக் கடைக்கு வந்த இந்திய இராணுவத்தினர் எதுவுமே கேட்காது கடையை உடைத்து கொழுத்தினர். பின்னர் எனது இரண்டு மகன்மாரையும் பிடித்துக் கொண்டு சென்றார்கள். இதனை நேரில் பார்த்த பக்கத்துக் கடைக்காரர் எங்களிடம் தெரிவித்தார்.

அதன் பின்னர் நாங்கள் அலையாத இடம் இல்லை கும்பிடாத கடவுளும் இல்லை. இன்று வரை எனது மகன்மார் எங்கு இருக்கின்றனர் எனத் தெரியவில்லை.

இந்திய இராணுவத்தினர் தாங்கள் பிடிக்கவில்லை என்றே கடைசி வரைக்கும் கூறிவிட்டார்கள். தயவு செய்து எனது மகன்மார் இருவரையும் கண்டுபிடித்து தாருங்கள். – என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-21)

# நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட மகன் எவ்வாறு காணாமல் போக முடியும்?

### மகனை மீட்டுத் தருமாறு தந்தை மன்றாட்டம்

கரணவாய்,டிசெ.16
இராணுவத்தால் பிடிக்கப்பட்ட பின்னர் வவுனியா நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரியில் சேர்க்கப்பட்ட எனது மகன் எவ்வாறு காணாமல் போக முடியும். – இவ்வாறு ஆணைக்குழுவிடம் சாட்சியம் வழங்கியபோது கேள்வி எழுப்பினர் தந்தை ஒருவர்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காணாமல் போனோர் தொடர்பிலான ஆணைக் குழுவின் விசாரணைகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது–

நாங்கள் நாட்டில் இடம் பெற்ற போர் காரணமாக பருத்தித்துறையிலிருந்து 1995 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு இரணைப்பாலைக்கு இடம்பெயர்ந்திருந்தோம். அப்போது 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி எனது மகனை விடுதலைப்புலிகள் பிடித்துச் சென்றனர். அதன் பின்னர் மகனை நாங்கள் காணவில்லை.

பின்னர் நாங்கள் இடம்பெயர்ந்து வவுனியா செட்டிக்குளம் சோன் - 4 முகாமுக்குச் சென்றோம். அப்போது எனது மகன் வீரபுரம் முகாமில் இருப்பதாக அவனைக் கண்ட உறவினர்கள் எமக்குத் கூறினார்கள். அங்கு சென்று விசாரித்த போது மகன் அங்கில்லை. 2010 ஆம் ஆண்டு மட்டக்களப்புப் பகுதியில் இருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று எனக்கு வந்தது. அதில் எனது மகன் இக்பால் என்னும் ஹோட்டலின் வேலை செய்வதாகவும் ஹோட்டல் உரிமையாளர் றியசிடம் சென்று மகனைச் சந்திக்குமாறும் கூறப்பட்டது.

ஊடனடியாக அங்கு சென்று விசாரித்த போது தொலைபேசி அழைப்பு எதனையும் தாங்கள் எடுக்கவில்லை என்று கூறினர். இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தோம்.

சில நாள்கள் கழித்து கடையில் சீனி சுற்றிய பேப்பரில் மகனின் படம் வந்திருந்தது. அதில் அம்பேஸ்த தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட சிறுவர் போராளிகளுடையது எனக் குறிப்பிடப் பட்டிருந்தது.

உடனடியாக அம்பேஸ்த முகாமுக்குச் சென்ற போது அந்த இராணுவ முகாம் மூடப்பட்டு விட்டது என்று தெரிவித்தனர். அதையடுத்து அம்பேஸ்த முகாம் பொறுப்பதிகாரியைத் தொடர்பு கொண்ட பொது, மகனுக்கு தலையில் காயம் ஏற்பட்டதால் பழைய நினைவுகள் எல்லாவற்றையும் மறந்து விட்டார் என்று கூறினார். அத்துடன் மகனை வவுனியா நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர் என்றும் தெரிவித்தனர்.

அப்போது வவுனியா நீதிமன்ற நீதிபதியாக இருந்த அலக்ஸ் ராஜாவிடம் சென்று விசாரித்த போது மகனை சிறுவர் நன்னடத்தை அதிகாரி மூலமாக இரத்மலானை இந்துக் கல்லூரியில் சேர்க்குமாறு பணிக்கப்பட்டதாகவும் அங்கு சென்று அவரைப் பார்க்குமாறு கடிதமும் வழங்கப் பட்டது. கடிதத்துடன் அங்கு சென்ற போது எனது மகனது பெயரில் பதிவுகள் எவையும் இல்லை என்றுதெரிவிக்கப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் மகனைத் தேடவேண்டாம் எனத் தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுத்திருந்தனர். மகன் உயிருடன் தான் இருக்கிறார். காயத்தால் பாதிக்கப்பட்ட மகனை யாரோ தமது தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றனர். நீங்கள்தான் அவனைத் தேடிக் கண்டு பிடித்துத் தர வேண்டும். – என்று அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்தார். (ற-ஜ-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கியை உடைமையில் வைத்திருந்த சார்ஜன்ட் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.16

மோசடியான முறையில் ரீ-56 துப்பாக்கியைத் தனது உடமையில் வைத்திருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை நேற்றுமுன்தினம் மாலை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை பொலிஸார், காங்கேசன்துறை பொலிஸ் கராஜ்ஜில் பணிபுரிந்து வந்த சார்ஜன்ட் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

2006 ஆம் ஆண்டு பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய குறித்த பொலிஸ் சார்ஜன்ட் காங்கேசன்துறைப் பொலிஸ் பிராந்தியத்தில் உள்ள வாகனம் திருத்தும் தளத்துக்கு இடமாற்றம் பெற்று வந்திருந்தார்.

இடமாற்றம் பெற்று வந்த அவர், பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டிய ரீ-56 துப்பாக்கியைத் தன்னுடன் எடுத்து வந்து அதனைத் தனது விடுதியில் கடந்த 9 வருடங்களாக மறைத்து வைத்துள்ளார்.

இது தொடர்பிலான தகவல் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்டதை அடுத்து, விசாரணை செய்யும் பொறுப்பு யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறைப் பொலிஸார், காங்கேசன்துறை வந்து குறித்த பொலிஸ் சார்ஜன்ட் தங்கியிருந்த விடுதியைச் சோதனையிட்டதுடன், மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியையும் மீட்டிருந்தனர். அத்துடன் அவரைக் கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-107)

# கிளி. மாவட்டம் முழுவதற்கும் ஜனவரி இறுதிக்குள் மின்சாரம்

*மின்சார சபையின் வட மாகாண பிரதி முகாமையாளர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, டிசெ.16

கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் அனைத்துக் குடும்பங்களுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதி முகாமையாளரும், வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளருமான டி.கே.பி.யு குணதிலக தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 41 ஆயிரத்து 862 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளனர். அவர்களில் 34 ஆயிரத்து 400 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது 3 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு வேலைத்திட்டங்கள் இடம் பெற்று வருகின்றது. மின் இணைப்புக்களைப் பணம் செலுத்திப் பெற முடியாதவர்களுக்கு கடன் அடிப்படையில் 40 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அதனை 7 வீத வட்டியுடன் 6 வருடங்களுக்குள் மாதாந்த மின் கட்டணத்துடன் 600 ரூபாவைச் சேர்த்துச் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கடன் திட்டத்துக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் 230 பேர் பதிவு செய்துள்ளனர். வழங்கப்படும் 40 ஆயிரம் ரூபா கடனில், 17 ஆயிரத்து 500 ரூபா வீட்டு மின் வேலைக்காகவும், மீதிப் பணம் மின் இணைப்புக்காகவும் மின்சார சபைக்குச் செலுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கல்லாறு, சோலைநகர், உழவனூர், புளியம்பொக்கணை, புன்னைநீராவி, கண்ணகிநகர், ஊரியான் உட்பட 113 கிராமங்களில் மின் இணைப்பை வழங்குவதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஜ-ரி3)

# சூது விளையாடிய மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், டிசெ.16

மல்லாகம், கோணப்புலம் முகாமில் பணம் வைத்து சூது விளையாடிய குற்றச்சாட்டில் தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவருக்கு தலா 2 ஆயிரம் ரூபா அபராதம் மல்லாகம் நீதிமன்றால் விதிக்கப்பட்டது.

கோணப்புலம் முகாமில் சூது விளையாடுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் மூவரைக் கைது செய்திருந்ததுடன், ஒரு தொகைப் பணத்தையும் மீட்டிருந்தனர்.

பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட அவர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த போது நீதிவான் மூவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் 6 ஆயி ரம் ரூபா தண்டம் விதித்தார். (ற-ஜ-107)



எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினரால் 28 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதிக் கட்டடங்கள் கடந்த வாரம் திறக்கப்பட்டன. சுவிஸ் நாட்டுக்கான உயர்ஸ்தானிகர் ஹெயின்ஸ் வோல்கர் நெதர்கூன், நிறுவன யாழ்.மாவட்ட நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் மாட்டீன் ஸ்ருடர், நிறுவனப் பணிப்பாளர் ஜீன் மிக்சேல், பிரதிப் பணிப்பாளர் லாஸ் புஸ்லர், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோர் கட்டடங்களைத் திறந்து வைத்தனர். (ற-ஜ-9)

# வடக்கு-தெற்கு உறவுப் பரிமாற்ற நிகழ்வுகள் மன்னாரில் ஆரம்பம்

மன்னார், டிசெ.16

மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டம் மற்றும் தென் மாகாண இளைஞர் யுவதிகளுக்கிடையே கலை, கலாசார விளையாட்டு உறவுகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் 3 ஆம் கட்ட நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மன்னாரில் ஆரம்பமானது.

தென் மாகாணத்தில் இருந்து சுமார் 50 பேர் கொண்ட இளைஞர் யுவதிகள் அடங்கிய குழு ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மன்னாருக்கு வருகை தந்த நிலையில், அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து வரவேற்கப்பட்டனர்.

மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மேல், உதவி மாவட்டச் செயலாளர் வி.பாவாகரன் மற்றும் மன்னார் மாவட்டச் செயலகப் பணியாளர்கள், அதிகாரிகள், விளையாட்டுத்துறை அதிகாரிகள் ஆகியோர் இணைந்து தென் மாகாணத்தில் இருந்து வருகை தந்த குழுவினரை மாலை அணிவித்து வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்டச்செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் விசேட நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது வடக்கு-தெற்கு உறவுப் பரிமாற்ற நிகழ்வுக்கு மன்னாருக்கு வருகை தந்த குறித்த குழுவினருக்கு தமிழ் மொழிகற்பித்துக்கொடுக்கப்பட்டதோடு பல்வேறு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குறித்த குழுவினர் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளதுடன், இன்று புதன்கிழமை மன்னாரில் தமது நிகழ்வுகளை மேற்கொள்ளவுள்ளனர். (ற-ஜ-56)

# கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள்: இருவர் படுகாயம்

அளவெட்டி, டிசெ.16

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வளைவில் திரும்பும் போது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் சறுக்கியது.

இதன்போது வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லான்ட்மாஸ்டர் மீது மோதி, மோட்டார் சைக்கிள் லான்ட் மாஸ்டர் பெட்டியின் கீழ் புகுந்து விபத் துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழைப் பகுதியில், கே.கே.எஸ் வீதியில் ஆனைக்குட்டி மதவடியில் இடம்பெற்றது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-ஜ-36)

# மீன்பிடி வலைகளுக்குப் பதிலாக மீன்களைக் கண்டறியும் கருவிகள்

*100 மீனவர்களுக்கு மானியமாக வழங்கப்படவுள்ளன*

கிளிநொச்சி,டிசெ.16

மீனவர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 100 மீனவர்களுக்கு மானியமாக வழங்கப்படவுள்ள மீன்பிடி வலைகளுக்குப் பதிலாக மீன்களின் உறைவிடங்களை துல்லியமாகக் காட்டிக் கொடுக்கும் கருவிகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த அரசின் காலப்பகுதியில் மண்ணெண்ணெயின் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீனவரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக ஒரு மீனவருக்கு ஒரு வருடத்துக்குரிய ஒரு லட்சத்து 12 ஆயிரம் ரூபா பெறுமதியான மண்ணெண்ணெய் கடற்றொழில் அமைச்சால் மானியமாக வழங்கப்பட்டு வந்தது.

மீனவரின் நலன்கருதி இந்த நடைமுறையை மாற்றியமைக்க முன்வந்துள்ள கடற்றொழில் அமைச்சு மண்ணெண்ணெய்க்குப் பதிலாக ஒரு மீனவருக்கு ஒரு லட்சத்து 12 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை வழங்கி வருகிறது.

இந்த நிலையில் பூநகரிப் பிரதேசத்திலுள்ள நூறு கடற்றொழிலாளர், மீன்பிடி வலைகளுக்குப் பதிலாக மீன்களின் இருப்பிடங்களை இலகுவாகக் கண்டறியும் கருவிகளைத் தந்துதவுமாறு கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழில்திணைக்களத்திடம் கோரியிருந்தனர்.

இதையடுத்து அதிகாரிகளால் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பயனாக மீனவர்களுக்குரிய கருவிகள் கடற்றொழில் அமைச்சால் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கருவிகள் சம்பந்தப்பட்ட மீனவர்களுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளன. (ற-ஜ-115)

# திருவாதிரை உற்சவம்

காரைநகர், டிசெ.16

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை உற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவ காலத்தில் தினமும் காலை 7 மணிக்கு ஐயனார், சிவன் ஆகிய மூல மூர்த்திகளுக்கு விசேட அபிசேக ஆராதனைகளும், முற்பகல் 10 மணிக்கு மணிவாசகப்பெருமான் நடேசர் சந்நிதிக்கு எழுந்தருளி திருவெம்பாவை ஓதலும் தொடர்ந்து மணிவாசகப் பெருமான் உள் வீதி உலா வருதலும் இடம்பெறும்.

இந்த உற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பஞ்சரத பவனியும், நடேசர் அபிசேகமும் மறுநாள் சனிக்கிழமை திருவூடல் உற்சவமும் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ற-ஜ-250)

# அபராதம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

காப்புறுதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் மல்லாகம் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் போக்குவரத்துப் பொலிஸாரால் குறித்த நபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிமன்றால் அபராதம் விதிக்கப்பட்டது. (ற-ஜ-107)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்குப் பிரிட்டன் நிதி; விளக்கமளிக்கக் கோரிக்கை

லண்டன், டிசெ.16

இலங்கைக்கு நிதியுதவி வழங்கவுள்ளதாக பிரிட்டன் உறுதியளித்துள்ள நிலையில், அதுகுறித்து பிரிட்டன் நாடாளுமன்றின் அனைத்துக் கட்சிக் குழு விளக்கம் கோரியுள்ளது.

குறித்த நிதியானது இலங்கையின் இராணுவ மீளமைப்புக்கு பயன்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அது எவ்வாறு பயன்படுத்தப் படுமெனவிளக்குமாறு பிரிட்டன் பிரதி வெளியுறவு அமைச்சர் ஹுகோ சுவைரிடம் கோரப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவம் மீது போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில், அது குறித்த விசாரணை இன்னும் இலங்கை அரசால் முன்னெடுக்கப்படவில்லையெனத் தெரிவித்துள்ள அனைத்துக் கட்சிக் குழு, இவ்வாறான நிலையில் நிதியுதவி வழங்குவது குறித்து தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

அண்மையில் பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி மைத்திரி கலந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனைச் சந்தித்தார். இதன்போது இலங்கைக்கு 6.6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்குவதாக டேவிட் கமரூன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# கிழக்கில் முதலீடுகள் தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் மாநாடு

மட்டக்களப்பு, டிசெ.16



கிழக்கில் முதலீடு செய்யுங்கள் என்றதொனிப்பொருளில் ஜனாதிபதி தலைமையில் சர்வதேச முதலீட்டாளர்களுடனான மாநாடு எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதன்போது, கிழக்கின் அபிவிருத்திக்கான முதலீடு குறித்து ஆராயப்படும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவது சம்பந்தமாகக் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில்,

நடைபெறவுள்ள, கிழக்கில் முதலீடுசெய்யுங்கள் எனும் தொனிப்பொருளிலான மாநாட்டில் ஐநூறுக்கும் மேற்பட்ட சர்வதேச முதலீட்டாளர்கள் கலந்து கொள்கின்றார்கள்.

கிழக்கு மாகாண முதலமைச்சரான எனது தலைமையிலே இது நடைபெறும். கிழக்கு மாகாண பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகின்ற விவசாயம், கால்நடை, மீன்பிடி ஆகியவை 70 சதவீதம் பொருளாதார வளம் சேர்க்கின்றன.

பொருளாதாரத்தை ஈட்டித் தருகின்ற இந்தத் துறைகளை மேன்மேலும் விருத்தி செய்வதனூடாகக் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கும் இளைஞர், யுவதிகளுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதற்கும் நாம் திட்டங்களை வகுத் துள்ளோம்.

இந்த மாநாடு நிச்சயம் பெரும் முதலீட்டாளர்களைக் கவர்வதோடு பெரும் அபிவிருத்திகளையும் கிழக்குக்குக் கொண்டு வரும் என்று நான் திடமாக நம்புகின்றேன். மீன்பிடி, விவசாயம், கால்நடைவளர்ப்பில் சூழலுக்கும் இயற்கைக்கும் பாதிப்பில்லாத நவீன மாற்றங்களை நாம் கொண்டு வரவேண்டியிருக்கின்றது- என்றார். (த)

# சுகாதார அமைச்சுக்கு முன்னால் பல்கலை மாணவர் போராட்டம்

கொழும்பு, டிசெ.16

சுகாதார அமைச்சுக்கு முன்பாகக் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.




மாலபேயில் அமைந்துள்ள தனியார் மருத்துவக் கல்லூரி யைத் தடைசெய்யக்கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு மருத்துவக் கல்லூரியிலிருந்து ஆரம்பிக் கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டமானது, சுகாதார அமைச்சின் அலுவலகம் வரை சென்றிருந்தாகக் கூறப்பட்டது.

மருத்துவ பீட மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைப் பெற்றுத்தருமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாகக் கொழும்பின் சில பகுதிகளில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தாகக் கூறப்பட்டது. (த)

# இறம்பொடை நீர் வீழ்ச்சியில் இரு பெண்கள் சடலமாக மீட்பு

கொழும்பு, டிசெ.16

நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை, இறம்பொடை நீர்வீழ்ச்சிக்கு நீராடச் சென்ற இரண்டு பெண்களின் சடலங்கள் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளதாகக் கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, ஆர்.எஜ்.கீலாநிமாலி மற்றும் மானெல் ஆகிய இருவரே சடலங்களாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த இடர் இடம்பெற்றுள்ள நிலையில், அவர்களின் சடலங்கள் நேற்று முன் தினம் காலையே கண்டெடுக்கப்பட்டுள்ளன.

புத்தளம் பகுதியில் இருந்து நுவரெலியாவுக்குச் சுற்றுலா சென்ற ஒரு குழுவினர் வரும் வழியில் இறம்பொடை ஓயாவில் நீராடச் சென்றுள்ள நிலையில் இந்த இடர் நிகழ்ந்துள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலங்கள் கொத்மலை வைத்தியசாலையில்வைக்கப்பட்டுப் பின்பிரேதபரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளைக் கொத்மலைப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

# ஜோடி சடலமாக மீட்பு கொலை எனச் சந்தேகம்

கொழும்பு, டிசெ.16

எல்பிட்டிய, பிடுவல பிரதேசத்தில் அடஹேலன நீர்வீழ்ச்சிக்கு அண்மையிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்ட இருவரும் தற்கொலை செய்துகொள்ளவில்லைஎன்றும் அவ்விருவரும் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விருவரும் டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கும் டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கும் இடைப் பட்ட காலத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நவத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான இளைஞன் (இராணுவச் சிப்பாய்) மற்றும் 18 வயதான யுவதியின் சடலங்களை, கடந்த ஞாயிற்றுக்கிழமை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிடுவல பிரதேசத்தில் கைவிடப்பட்டிருந்த நிலையில் மோட்டார் சைக்கிளொன்றுகாணப்பட்டதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கை யின்போதே குறித்த சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சடலங்களுக்கு அருகில் இருந்து விசப் போத்தல் மீட்கப்பட்டது. எனினும், அவ்விருவரும் தற்கொலை செய்துகொண்டதாக காண்பிப்பதற்காகவே இந்த விசப் போத்தல் அவ்விடத்தில் வீசப்பட்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளை விடுவிக்காவிடின் மீண்டும் வெடிக்கும் போராட்டம்

## நாடாளுமன்றில் மாவை எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.16
மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதன் வடக்கு, கிழக்கு விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் புறந்தள்ளி தன்னிச்சையாகத் தனிவழியில் செயற்படுகின்றார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்று முன்தினம் சபையில் குற்றஞ் சாட்டினார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகள் உடன் விடுவிக்கப்படாவிட்டால், மீண்டும் காணி மீட்புப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என எச்சரித்த அவர், காணி விடுவிப்பு விடயத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் கொடுத்த வாக்குறுதியைநிறைவேற்றவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற காணி அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கு-கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் மலையக மக்களின் வாக்குகளினால்தான் இந்தச் சபையில் பலர் அமைச்சர்களாக உள்ளனர். இதனை மறந்துவிடக் கூடாது. அமைச்சர் சுவாமி நாதனிடம்தான் புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற அமைச்சு ஒப்படைக்கப்படவேண்டும் என நாம் பிரதமரிடம் வலியுறுத்தியிருந்தோம். அத்துடன், அமைச்சர் சுவாமிநாதனுடன் 100 இற்கு 200வீதம் ஒத்துழைத்து செயற்படவும் நாம் தயாராக இருந்தோம். ஆனால், சுவாமிநாதனோ இன்று எம்மை, அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புறந்தள்ளி, தன்னிச்சையாகச் செயற்படுவதுடன், வடக்கு-கிழக்கு விடயங்களில் தனித்துப் பயணிக்கவும் முற்படுகின்றார்.

வடக்கைப் பொறுத்தவரை பனைவளம் மிக முக்கியமானதாக உள்ளது. பனைவளத்துடன் தொடர்புடைய பல தொழில்முயற்சிகளும், பெருமளவு மக்களும் இங்கு உள்ளனர். எனவே, வடக்கிலுள்ள பனை அபிவிருத்தி அதிகார சபையைச் சிறப்பாகச் செயற்பட வைப்பதற்காக அதன் தலைவராக அந்தச் சமூகத்துடன் நெருங்கிய தொடர்புடைய பனை



வளம் தொடர்பில் ஆழமான அறிவுகொண்ட பேராசிரியர் மோகனதாஸை நியமிக்குமாறு பரிந்துரை செய்திருந்தோம்.

ஆனால், அதனைப்புறக்கணித்த அமைச்சர் தன்னிச்சையாக, பனைவளங்களுடன் தொடர்புபடாத, அதுதொடர்பான அறிவைக் கொண்டிராத ஒருவரை பனை அபிவிருத்திச் சபைத் தலைவராக நியமித்துள்ளார்.

இது குறித்து நாம் கவலையடைகின்றோம். இதுபற்றி மக்கள் எம்மிடம் கேள்வி கேட்கின்றனர். எனவே, நாம் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் ஒவ்வொரு அபிவிருத்தியிலும், எந்தவொரு நடவடிக்கைகளிலும் எம்முடன் பேசப்படவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

இதேவேளை, தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கை ராணுவமயப்படுத்தி அதன்மூலம் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்திப் பௌத்தமயமாக்கி, தமிழர்களுக்குப் பூர்வீக இடங்கள் இல்லையெனக் காட்டி தமிழரின் அரசியல் எதிர்காலத்தை அழிப்பதே மகிந்த சிந்தனையின் இலக்கு.

யாழ்.குடாநாட்டில் 11 அகதி முகாம்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் 2 இலட்சம் பேர் இன்னமும் அகதிகளாக வாழ்கின்றனர்.

தமிழகத்தில் உள்ள 155 அகதிகள் முகாம்களில் ஒரு இலட்சத்து 68ஆயிரம்பேர் அகதிகளாகவுள்ளனர். இந்த மக்கள் தமது சொந்த இடங்களில், சொந்த வீடுகளிலே வாழவே விரும்புகின்றனர். ஆனால், இந்த மக்களின் காணிகள், வீடுகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். இதனால், மக்களின் அகதி வாழ்க்கை அப்படியே தொடர்கின்றது. எனவே, வடக்கு-கிழக்கில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டுமென வலியுறுத்துகின்றோம். இது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் எமக்குக் கொடுத்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்றவேண்டும்.

இல்லையேல், மகிந்த அரசுக்கு எதிராக நாம் மேற்கொண்ட போராட்டங்களைப்போல மீண்டும் காணி மீட்புப் போராட்டத்தில் இறங்குவோம்-என்றார். (கு-சி)

## தாஜுதீன் சாவு குறித்த சி.சி.ரி.வி காட்சிகளினால் அம்பலமாகும் தகவல்கள்

கொழும்பு, டிசெ.16
பிரபல ரகர் வீரர் வசிம் தாஜுதீனின் சாவு தொடர்பாக கிடைக்கப்பெற்ற சி.சி.ரி.வி கமராக் காட்சிகளில் பல தகவல்கள் வெளியாகியுள்ளதாகப் பொலிஸ்வட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

ஆய்வுக்காக கொழும்புப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட குறித்த காட்சியில், தாஜுதீனின் வாகனத்தை ஒத்த வாகனமொன்றைச் சில வாகனங்கள் துரத்துவதாகப் பதிவாகிவாகியுள்ளது. அதன் பிரகாரம், துரத்தும் வாகனங்களைத் தாஜுதீன் தவிர்த்து, வேறு வழிகளில் பயணித்தபோதும் சிலவாகனங்கள் அதனை வழிமறிப்பது பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

எனினும் வாகனங்களின் இலக்கத் தகடுகள் மற்றும் ரகங்களில் தெளிவற்ற நிலை காணப்படுவதால் தொடர்ந்தும் அது குறித்து ஆராயப்பட்டு வருவதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளர்.

இதேவேளை, வாகனங்கள் துரத்த ஆரம்பித்த அந்த நேர இடைவெளியில், தாஜுதீன் இவ்விடயத்தை யாருக்கேனும் தெரியப்படுத்தியிருக்கலாமெனச் சந்தேகிக்கும் பொலிஸார், அவரது தொலைபேசித் தரவுகளைத் திரட்டுவதற்கு நீதிமன்ற உதவியை நாடியுள்ளனர்.

தாஜுதீனின் விசாரணையை முன்னெடுத்துவரும் பொலிஸாருக்குச் சில தரப்பினரால் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதால் விசாரணைகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

# கூட்டமைப்பைப் புறந்தள்ளி செயற்படுவது நோக்கமல்ல

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.16
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்தே தமிழர் பகுதி அபிவிருத்தியை மேற்கொள்ள விரும்புகின்றேன். அதனால் புறந்தள்ளிச் செயற்படுவது எனது நோக்கமல்ல என மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு மற்றும் இந்துமத அலு வல்கள் அமைச்சர் டி.எம். சுவாமி நாதன் நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு மற்றும் இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் நியமனம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சில கருத்துக்களை முன்வைத்திருந்தார். ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் ஆகியவற்றின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே தீர்மானம் வழங்கப்பட்டது. நாட்டுக்கு எது நல்லதோ, பனை அபிவிருத்திச் சபைக்கு எது நல்லதோ அதைத்தான் நான் செய்வேன்.

யாழ்ப்பாண அபிவிருத்தியை அங்குள்ள பிரச்சினைகளை அந்த மக்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து தீர்க்கவே விரும்புகின்றேன். இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா ஆகியோருடன் இணைந்து செயற்படுவேன். அவர்களைப் புறந்தள்ளிச் செயற்படமாட்டேன். அது எனது நோக்கமும் அல்ல. நான் இன, மத ரீதியாகச் செயற்படுபவன் அல்லன். மார்ச் மாத காலப்பகுதியில் 65 ஆயிரம் வீடுகள் கட்டப்படவுள்ளன. இவை உண்மையாக வீடுகள் பாதிக்கப்பட்ட தேவையுடைய தமிழ், முஸ்லிம், சிங்கள மக் களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். அத்துடன், மன்னாரில் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்ட காணியை விடுவிக்க நடவடிக்கை எடுப்பேன்.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் குறிப்பிட்டதுபோல மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்து சமயத்தை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுப்பேன்-என்றார். (கு-சி)

# வறிய மக்கள் பணத்தில் சவாரி செய்தார் பஸில்

## சஜித் பிரேமதாச சாடல்

நாட்டின் வறிய மக்களுக்கு வழங்கப்படும் சமுர்த்திக் கொடுப்பனவின் நிதியைப் பயன்படுத்தி, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ச விமானப் பயணங்களை மேற்கொண்டமை தொடர்பில், அமைச்சர் சஜித் பிரேமதாச கடும் கண்டத்தை வெளியிட்டுள்ளார்.



அம்பாந்தோட்டை வெலிகவத்தை பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், நாட்டின் வறிய மக்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையே சமுர்த்திக் கொடுப்பனவாகும். அதனை திவிநெகும எனக் கடந்த ஆட்சியாளர்கள் மாற்றினர்.

கடந்த காலத்தில் திவிநெகும திணைக்களத்தின் 150 மில்லியன் ரூபாவை அதன் அமைச்சர் விமானப் பயணங்களுக்குப் பயன்படுத்தியுள்ளார். அது வறிய மக்களின் பணமாகும். ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அது தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது.

சமுர்த்திக்காக ஒதுக்கிய 150 மில்லியன் ரூபாவைப் பயன்படுத்தி அமைச்சர் ஒருவர் சவாரி செய்வது நாட்டுக்குச் சிறந்ததா என நாம் கேட்கின்றோம்?- என்றார்.

திவிநெகும திணைக்களத்தின் நிதியை விமானப் பயணங்களுக்காகப் பயன்படுத்தியமை தொடர்பில், அதன் முன்னாள் அமைச்சர் பஸிலிடம் விரைவில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தவுள்ளதாக அதன் செயலாளர் லெசில் டிசில்வா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

## நாலக்க உட்பட மூவருக்கு விளக்கமறியல்

நிதிக்குற்ற புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்ட பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் நாலக்க கொடஹேவா உட்பட மூவரை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கள் கிழமை உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர்கள், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவில் கடந்த 2013ஆம் ஆண்டு இடம்பெற்ற 5 மில்லியன் ரூபா மோசடி தொடர்பிலேயே கைதுசெய்யப்பட்டு நேற்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையிலேயே அவர்களது விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (தி)

## பொன்சேகாவுக்கு எதிராக அவன்கார்ட் போர்க்கொடி

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான முக்கிய ஆதாரங்களை வெளியிடும் நடவடிக்கையில், அவன்கார்ட் நிறுவனம் இறங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவன்கார்ட் நிறுவனத்துக்கு எதிராகப் பல குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த நிறுவனத்திடமிருந்து அமைச்சர்கள் மற்றும் சரத் பொன்சேகா உள்ளிட்ட சிலர் இலஞ்சம் வாங்கியதாக அதன் தலைவர் நிஸங்க சேனாதிபதி தெரிவித்தார்.

இதனையடுத்து நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கும் நிஸங்க சேனாதிபதிக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டதாகவும், அது குறித்த சில புகைப்படங்களையும் சரத் பொன்சேகா வெளியிட்டார். இதனையடுத்தே சரத் பொன்சேகா தொடர்பான விடயங்களை வெளியிடவுள்ளதாகவும், விரைவில் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடுசெய்து அதுகுறித்த விவரங்களை வெளியிடுவதற்கும் அவன்கார்ட் நிறுவனம் தீர்மானித்துள்ளது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐ.நா.அதிகாரியின் கேள்விக்கு அரசின் பதில் தான் என்ன..?

பொறுப்புக் கூறுதல் என்பது, எல்லாப் பிரச்சினைகளுக்கும் நடுநாயகமாக உள்ளது. ஆகையால் அதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அதுவே முதலில் நிறைவேற்றப் படவும் வேண்டும்.

அதனை அழுத்திக் கூறியுள்ளார், ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர், கிறிஸ்றோப் ஹெய்ன்ஸ்.

பொறுப்புக் கூறல் கைக்கொள்ளப்படா விடின், ஏனைய எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வை நிறைவேற்றவே இயலாது--

பொறுப்புக்கூறல் ஒருவரது வாழ்வுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கிறது. ஆகையால், இலங்கை அரசு என்னை அங்கு வருமாறு அழைத்தால், நான் நிச்சயமாக அங்கு செல்வேன், அதற்காகக் காத்திருக்கிறேன்-- என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

போர்க்காலத்தில் பல்வேறு வகையான படுகொலைகள் மற்றும் வன்முறைகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.--

அவை அனைத்தையும் விசாரணை செய்து, தீர்வு காண்பதில் புதிய அரசு போதிய ஆர்வம் காட்ட வில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

அது மட்டுமன்றி, மனித உரிமை விவகாரங்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து ஆராய்ந்து, நிலைமைகளைக் கண்டறிவதற்குத் தம்மை, இலங்கை அரசு அழைத்தால், தாம் உடனடியாக அங்கு சென்று உதவக் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை, இலங்கை அரசு போர்க் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைக் கையாளுவது நல்லதோர் சமிக்ஞையாக இருப்பினும், அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆர்வம் காண்பிக்கவில்லை என்றும் அவர் அழுத்தமாகச் சுட்டிக்காட்டுகிறார்.

அத்தோடு, இங்கு பெரிய அளவில் கட்டவிழ்த்து விடப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்கள் அனைத்தையும் விசாரணை செய்வதில் விசாரணை செய்யும் பாங்கு துளியும் புலப்பட இல்லை எனவும் அவர் அழுத்தம் திருத்தமாக கருத்து வெளிப்படுத்தி உள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தொட்டுக் காட்டிய, வெளிப்படுத்திய, பெறுமதியும், அர்த்தமும் மிக்க கருத்துக்களை, நல்லாட்சி அரசு என்று தனது.முகத்தில் முத்திரை குத்தி உள்ள அரசு, நல்லெண்ண மனதோடு கருத்தில் எடுத்துச் செயற்படுமா? அன்றி சிறப்பு அறிக்கையாளரின் கருத்தையும், நல்லெண்ணத்தையும் கடாசி விடுவதற்கான உத்தி குறித்து ஆழ ஊடுருவித் தேடுதல் நடத்துமா? அது குறித்து எதிர்மறையான வழித்தடத்தில் கால் பதிக்குமா? அவற்றுக்கான பதில் இன்னும் சில நாள்களில் தெரிந்து விடும்....!

# புதுவருடத்துக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுவது சந்தேகம்!

தமிழில்: ரெங்கன்



அமைச்சர்களின்வாராந்த சந்திப்பின்போது கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில எச்சரிக்கைக் கருத்துக்களை வெளியிட்டார். வியாழக்கிழமை வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும்போது அது இலகுவாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யும் வகையில் அவர்கள் ஓர் அணியாக செயற்பட வேண்டும். நிதி நிலை அறிக்கையில் காணப்படும் ஆலோசனைகள் தொடர்பாக அவர்கள் தனிப்பட்ட வகையிலான விமர்சனங்களில் ஈடுபடலாகாது. அது நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அதன் ஒவ்வொரு அம்சமும் எவ்வாறு மக்களுக்கு பயனளிக்கப்போகிறது என விளக்கம் அளிப்பதற்கான இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

**பட்ஜெட்டில் சில திருத்தங்கள்**

நாளையதினம் நிதி நிலை அறிக்கையை நிதி அமைச்சர் மூன்றாம் வாசிப்புக்கு சபையில் தாக்கல் செய்யும்போது சில திருத்தங்களை முன்வைப்பார் என்று தெரிகின்றது. அதில் ஒன்று உரத்துக்கான மானியம். இப்பொழுது ஒரு ஹெக்ரேயருக்கு மட்டுமே வழங்கப்படுகின்ற மானியம் இரண்டு மடங்காக்கப்பட்டு இரண்டு ஹெக்ரேயருக்கு வழங்கப்படும். அறிவிக்கப்பட்டிருக்காவிட்டாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரிகளற்ற கார்களுக்கான அனுமதி சிட்டை முறை இரத்துச் செய்யப்படவிருக்கின்றது. அதற்குப் பதிலாக அவர்கள் பயன்படுத்தக்கூடியதாக வாகனங்கள் அரசால் வழங்கப்படும். அவைகளை கொள்முதல் செய்ய விரும்பினால் அரசு சலுகைகளுடனான கடன்களை வழங்கவிருக்கின்றது. உறுப்பினர்கள் அனுமதிச் சிட்டைகளை அதிக விலைக்கு விற்று விடுவதைத் தடுக்கவே இந்த ஏற்பாடு.

**அரசியல் காரணங்களால் எதிர்ப்பு**

கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசுகையில், அரசியல் காரணங்களுக்காக தொழிற்சங்கங்கள் எதிர்க்கட்சியினரை உசுப்பிவிட முயற்சிக்கிறார்கள் என்று கூறியிருந்தார். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் அரச சுகாதார அதிகாரிகள் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிறிசேனவுக்கு எதிராக வேலை செய்தார்கள் என்றும் பிரதமர் குற்றஞ்சாட்டினார். அவர் மேலும் பேசும்போது; தேசியப் புத்தாண்டுக்கொண்டாட்டங்களுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கான செயற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அறிவித்தார். அதன்நிமித்தம் உள்ளூராட்சிநிறுவனங்கள் தொடர்பான சட்டங்களில் பல திருத்தங்களை செய்வதும், சில உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல்களை செய்வதும் அவசியமாகின்றது.

**உள்ளூராட்சித் தேர்தல்கள்**

ஏப்ரலுக்கு முன்னதாக உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமானால் நல்லாட்சிக்கான ஐக்கிய முன்னணியிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. அதேசமயம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் அரைவாசிப் பேர் வரவு

> ஏப்ரலுக்கு முன்னதாக உள்ளூராட்சி தேர்தல் நடக்குமானால் நல்லாட்சிக்கான ஐக்கிய முன்னணியிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்திருக்கும் நிலையில் உள்ளூராட்சித் தேர்தலை முன்கூட்டியேநடத்தினால் அது, அந்தக் கட்சிக்கு சாதகமாக இருக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. அந்தக் கட்சியின் அதிகாரத்தை முற்றுமுழுதாக தன் கைக்குள் கொண்டுவர ஜனாதிபதி சிறிசேன எடுத்து வந்த முயற்சிகள் யாவும் வியர்த்தமாகியுள்ளன. கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் மத்தியில் ராஜபக்சவுக்கு இன்னமும் கணிசமான ஆதரவு இருந்து வருகின்றது என்பது வெளிப்படையாகியிருப்பதுடன் அதுவே பெரும் அச்சுறுத்தலாகவும் இருக்கும் என்றும் கருதப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை உள்ளூராட்சித் தேர்தல்கள் நேரடி வாக்களிப்பு முறையானால் என்ன விகிதாசார முறையிலானால் என்ன எந்த முறையைப்பின் பற்றி நடத்துவதாய் இருந்தாலும் தேசியப் புதுவருடத்துக்கு முன்னர் அது நடத்தப்பட்டாக வேண்டும் என்பதே தமது தீர்க்கமான முடிவாகும் என்று அறிவித்திருக்கிறார். அடுத்த ஆண்டு ஜன வரி முதல் வாரம் அளவில் சகல கட்சிகளுக்குமிடையில் உடன்பாடு ஒன்றுகாணப்பட்டுவிடவேண்டும் என்று கருதும் பிரதமர், ஐ.தே.கவினர் தமது வேட்பாளர்கள் தொடர்பாக முடிவெடுப்பதற்கு குறைந்தது ஒரு மாத காலம் எடுக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். இந்தக் கருத்து ஜனாதிபதியின் கருத்துடன் ஒத்துப் போகவில்லை என்பது தெரியவந்துள்ளது. உள்ளூராட்சிமன்றங்களின் தேர்தல் புதிய முறையில்தான் நடைபெற வேண்டும் என்று எல்லோரும் ஒப்புக்கொண்டிருந்தார்கள் என்று அவர் கூறினார். முன்னர் பெரும்பாலான கட்சிகள் நேரடித் தேர்தல் முறையையே ஆதரித்திருந்துள்ளார்கள். ஆனால் விகிதாசார முறையில் இந்தத் தேர்தல் நடைபெறுவதை சிறிசேன விரும்பவில்லை. எனவே, இந்த முரண்பாடான கருத்துக்கள் காரணமாக புதுவருடத்துக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறுமா என்பதில் சந்தேகங்கள் உருவாகியுள்ளன.

**ஐ.தே.கவும் அனுகூலம்**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் முன்கூட்டியே நடைபெறுமானால் அது தங்களுக்கு அனுகூலமான ஒரு நிலையை ஏற்படுத்தித் தரும் என்று பல ஐ.தே.கவினர் நம்புகிறார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணம் தங்களின் அடிமட்ட அமைப்புக்கள் சீரமைக்கப்பட்டுள்ளமையாகும். அதேசமயம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடிமட்ட அமைப்புக்கள் சிறிசேன மற்றும் ராஜபக்ச விசுவாசிகளுக்கிடையில் பகிரப்பட்டு விடும் என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். சில சமயம் சிறிசேனவின் ஆதரவாளர்களின் நிலை மூன்றாம் இடத்துக்கு தள்ளப்படுவதும் சாத்தியமே என்ற கருத்தும் நிலவுகின்றது.

ஆங்கில மொழி மூலம்:
சண்டே ரைம்ஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 DEC 2015
பொது சன நூலகம்

எம்.ஐ.முபாறக்

# காணாமற்போனவர்களின் விடயத்தில் அரசு அக்கறை செலுத்துமா?

காலத்துக்குக் காலம் இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்து வந்த இரண்டு பிரதான கட்சிகளின் ஆட்சிக் காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வந்தமை நிரூபணம் ஆகியுள்ளது. வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் இந்த இரண்டு கட்சிகளின் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைப் பட்டியல் போட்டுக் கொண்டே போகலாம்.

தமிழர்களுக்கு எதிரான ஜூலைக் கலவரம், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் தமிழர்களுக்கு எதிரான சம்பவங்கள் எனப் பல கொடுமைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராக உரிய முறையில் தண்டனை வழங்கப்படாமல் காலம் உருண்டோடி விட்டது.

ஆனால், அண்மைக் காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் உரிய முறையில் சர்வதேசத்தை எட்டியதால் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் இனிமேல் அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத் துவதற்கும் ஆட்சியாளர்கள் தள்ளப்பட் டுள்ளனர்.

குறிப்பாக, இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போதும் அதனை ஒட்டியதாகவும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த இறுதிக்கட்டப் போரின்போது அப்பாவித் தமிழர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலதரப்பட்ட பிரிவினர்கள் காணாமற்போயுள்ளனர்; கடத்தப்பட்டுள்ளனர் மற்றும் கொலை செய்யப்பட்டுள்ளனர். அந்தக் காலப் பகுதியில் வெள்ளை வான் என்ற சொல் மிகவும் பிரபல்யமானதாக இருந்தது. இலங்கையில் இடம்பெற்ற அநேகமான கடத்தல் சம்பவங்களுக்கு இந்த வான்கள்தான் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறு கடத்தல் மற்றும் காணாமற் போதல் சம்பவங்கள் மகிந்தவின் ஆட்சியில் மலிந்து காணப்பட்டன. அவரது ஆட்சிக் காலத்தின்போதே அவற்றுக்கு எதிராக உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் குரல்கள் எழுப்பப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் ஒன்றுக்கும் மகிந்த அரசு பொறுப்பேற்காதது மாத்திரமன்றி அவ்வாறான சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை என்பது போலவே கருத்துக்களையும் வெளியிட்டு வந்தது.

சிலர் வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகவும் குடும்பப் பிரச்சினை காரணமாகவும் ஒழிந்துகொண்டு கடத்தப்பட்டதாக நாடகமாடுகின்றனர் என்று மகிந்த அரசு கூறியது. அத்தோடு, சில பெண்கள் காதலித்து ஓடிப் போவதும் காணாமற் போதல் பட்டியலில் சேர்க்கப்படுகின்றது என்றும் மகிந்த அரசு பொறுப்பற்ற விதத்தில் கூறியதையும் நாம் மறக்கவில்லை.

கடத்தல் மற்றும் காணாமற்போதல் சம்பவங்களை இவ்வாறு மறுத்ததோடு மாத்திரமன்றி உண்மையா அல்லது பொய்யா எனத் தேடித் பார்ப்பதற்குக்கூட அரசு முயற்சி செய்யவில்லை. குற்றச்சாட்டு ஒன்று எழுகின்றபோது அதை எடுத்த எடுப்பில் மறுக்காமல் அது தொடர்பில் தேடித் பார்த்து பதிலளிக்கின்ற ஒரு சாதாரண தார்மீகப் பண்புகூட மகிந்த அரசிடம் இருந்ததில்லை.

இதனால் கடத்தப்பட்ட மற்றும் காணாமற் போனவர்களின் உறவினர்கள், பொது அமைப்பினர் மற்றும் சர்வதேச சமூகத்தினர் போன்றோர் இதற்கு எதிராக நீதி கேட்டு சர்வதேச நாடுகளிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால், சர்வதேசம் இதில் கவனம் செலுத்தத் தொடங்கியது.

சர்வதேசத்தின் எந்தவொரு கரிசனையையும் அழுத்தங்களையும் கவனத்தில் எடுக்காமல் மகிந்த இருந்தமையால் கடத்தல் மற்றும் காணாமற்போகும் சம்பவங்கள் அதிகரிக்கவே செய்தன. அரசுக்கு எதிராக யார் பேசுகிறார்களோ, யார் எழுதுகிறார்களோ அவர்கள் கடத்தப்படுவதும் கொல்லப்படுவதும் நிச்சயிக்கப்பட்ட நிகழ்வுகளாக இருந்தன.

பொதுவாக, ஊடகவியாலாளர்களால் அரசுக்கு எதிராக வாய் திறக்கவே முடியாது. அவ்வாறு மீறித் திறந்தததால்தான் ஊடகவியாலாளர்களான லசந்த விக்கிரமதுங்க, தராக்கி போன்றவர்கள் கொல்லப்பட்டனர். பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டார். இன்னும் பல ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர்; மிரட்டப்பட்டனர்.

இது ஊடகங்களுக்கு ஏற்பட்ட கதி. அதேபோல், எத்தனையோ அப்பாவித் தமிழர்கள் காணாமற்போகச் செய்யப்பட்டனர். சர்வதேசத்துக்கு அஞ்சாது - பின் விளைவுகளைப் பற்றி யோசிக்காது இந்தக் கொடுமை தொடர்ந்தது.

இந்த வருடம் ஜனவரி 8ஆம் திகதி ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இவ்வாறான செயற்பாடுகள் முடிவுக்கு வந்தன. அத்தோடு, இனிமேல் அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு புதிய அரசின் மீது சுமத்தப்பட்டது.

> நியூயோர்க்கில் உள்ள இலங்கைப் பிரதிநிதி நேற்றுமுன்தினம் இந்த முக்கியத்தும் வாய்ந்த பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ளார். அதன் பிரகாரம், காணாமற்போவதைத் தடுத்தல், காணாமல்போகச் செய்தமைக்குக் காரணமானவர்களைத் தண்டித்தல் போன்றவற்றுக்கான சட்டங்கள் உருவாக்கப்படவுள்ளன.

அந்த அடிப்படையில், அரசு மிகவும் வரவேற்கத்தக்க நடவடிக்கை ஒன்றை எடுத்துள்ளது. பலவந்தமாகக் காணாமற் போவதைத் தடுக்கும் சர்வதேச பிரகடனத்தில் கைச்சாத்திட்டிருப்பதுதான் அந்த நடவடிக்கை.

நியூயோர்க்கில் உள்ள இலங்கைப் பிரதிநிதி நேற்றுமுன்தினம் இந்த முக்கியத்துவம் வாய்ந்த பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ளார். அதன் பிரகாரம், காணாமற் போவதைத் தடுத்தல், காணாமல் போகச் செய்த மைக்குக் காரணமானவர்களைத் தண்டித் தல் போன்றவற்றுக்கான சட்டங்கள் உரு வாக்கப்படவுள்ளன. மெராத்தத்தில் கடத்தல் சம்பவம் ஒன்று இடம்பெற்றால் அதற்கு அரசே இனிப் பொறுப்பேற்கும்.

இந்த நாட்டில் சீரழிந்து போயுள்ள ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்புவற்கு இந்த அரசு பலதரப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஆனால், அந்த நடவடிக்கைகள் அனைத்தும் வெறும் எழுத்தில் மாத்திரம் இருக்கக்கூடாது. செயலில் காட்டப்பட வேண்டியது கட்டாயமாகும்.

மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற ஜனநாயக மீறல் செயற்பாடுகளால் இந்த நாடு சர்வதேச மட்டத்தில் மிக மோசமாக விமர் சிக்கப்பட்டது. இந்த விமர்சனத்தை இல்லாதொழித்து இந்த நாட்டுக்கு நற்பெயரைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது இந்த அரசின் கடமையாகும்.

எதிர்காலத்தில் ஜனநாயக மீறல்கள் இடம்பெறுவதைத் தடுப்பது மாத்திரமன்றி ஹிந்த ஆட்சியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத்தை - நீதியைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அதேபோல், எதிர்காலத்தில் காணாமற் போவதைத் தடுக்கப் போகும் இந்த அரசு, இதுவரை காணாமற்போனவர்களைக் கண்டுபிடிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தக் கோரிக்கையை முன்வைத்து காணாமற்போனவர்களின் உறவினர்கள் போராட்டங்கள் நடத்தி வருகின்றமையை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும். இதில் தவறு ஏற்படுமாயின் தமிழர்களின் நம்பிக்கையை இந்த அரசும் இழக்க நேரிடும். மேலும் ம்கிந்த பாணியில் நல்லாட்சி அரசும் நடக்க முற் பட்டால் சர்வதேசத்தின் நம்பிக்கையையும் அது இழப்பதற்கான வாய்ப்புகளும் அதிகளவில் உள்ளன என்பதை மறுக்க முடியாது.

## மக்களே அவதானமாகச் செயற்படுங்கள்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை என்றுமில்லாத அளவுக்கு நோயாளர்களால் நிரம்பி வழிவதைக் காணமுடிகிறது.

நோயாளிகளில் அநேகமானவர்கள் வெவ்வேறு வகையான காய்ச்சல்களால் பீடிக்கப்பட்டு இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மூலமாகத் தெரிய வருகின்றது.

டெங்குக் காய்ச்சல் ,வைரஸ் காய்ச்சல்,எலிக்காய்ச்சல் என காய்ச்சல்கள் பல வகையாகக் காணப்படுகின்றன. இவை நோயாளிகளிடமிருந்து ஏனையவர்களுக்கு எளிதில் தொற்றக்கூடியவை.

ஆகவே சகலரும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதில் அவதானமாக இருத்தல் வேண்டும் .

குறிப்பாக நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் போது அதிக கவனம் தேவையாகவுள்ளது. குறிப்பாக வைத்தியசாலைக்குச் சிறுவர்களை அழைத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

மழை காலங்களில் மிகப் பெரிய பிரச்சினையாக குடிதண்ணீர்ப் பிரச்சினையே உருவெடுக்கின்றது. நீரைக் காய்ச்சி அருந்துமாறு எத்தனை தடவைகள் கூறினாலும் ம்க்கள் அதற்குச் செவி சாய்ப்பது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. மேலும் நுளம்புகள் பெருகும் வகையில் வீட்டு வளவுகளை வைத்திருப்பதும் தவறான செயற்பாடாகும்.

மக்கள் அவதானமாகச் செயற்பட்டால் வைத்தியசாலையில் அதிகளவு நோயாளர்கள் குவிந்து வருவதை ஓரளவுக்காவது கட்டுப்படுத்த முடியும்.

**தி.மஞ்சுளா**
**கொக்குவில்**

## வீதி விளக்குகள் எரியாததால் அவலப்படும் பொது மக்கள்

வீதி விளக்குகள் எரியாததால் ஏழாலைப் பகுதி மக்கள் இரவு நேரங்களில் சிரமங்களை எதிர்கொள்வதோடு அச்சத்துடன் வீதிகளில் பயணிப்பதையும் காண முடிகின்றது. மல்லாகம் சந்தியில் இருந்து வடக்கு புன்னாலைக்கட்டுவன் சந்திப்பகுதிக்கு செல்லும் வீதி ஏழாலை ,குப்பிளான் ஆகிய இடங்களுடாகச் செல்கிறது. இந்தப் பகுதிகளில் ஏராளமான குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்த மக்கள் பயன்படுத்துகின்ற வீதி ஏற்கனவே மோசமாக சேதமடைந்து குண்டும் குழியுமாக காட்சியளிக்கின்றது.

மழை காலத்தில் இதில் பயணம் செய்வதை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. அந்த அளவுக்கு சிரமங்கள் ஏற்படுகின்றன. இந்த நிலையில் வீதி விளக்குகளும் எரியாததால் இரவு வேளையில் வீதியில் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பெண்களின் நிலை தான் பரிதாபகரமாக காணப்படுகிறது. தற்போது நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையில் இருட்டில் பெண்கள் எவ்வாறு செல்ல முடியும்?

இந்த வீதியை அண்மித்த மல்லாகம் ரயில் நிலையச் சூழலில் மின்சார வெளச்சம் காணப்படுகின்றது. . ஆனால் வீதியின் ஏனைய பகுதிகள் இரவு வேளையில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இதனுடன் தொடர்புடையவாகள் இந்த மக்களின் அவல நிலையைப் போக்குவதற்கு முன்வர வேண்டும்.

பிரதான வீதியொன்று வெளச்சமில்லாது இருளில் மூழ்கிக் கிடப்பதால் குறிப்பட்ட பிரதேசமே முழுமையாக பாதிக்கப்படுகின்றது என்பதை அவர்கள் ஒரு கணம் சிந்தித்துப் பாக்க வேண்டும்.

**சு.மகேந்திரன்,ஏழாலை**

## கட்டாக்காலி நாய்களால் அவலப்படும் குடியிருப்பாளர்கள்

சுன்னாகம் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரிகின்ற நாய்களால் குடியிருப்பாளர்கள் பெரும் இடையுறுகளை எதிர்கொண்டு வருகின்றனர் .இந்த நாய்கள் வீதிகளையும், வீட்டு வளவுகளையும் அசிங்கம் செய்து வருவதால் இப்பகுதி மக்கள் அருவருப்புடன் அவற்றைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது.

வீட்டு வளவுக்குள் புகுந்து அட்டகாசமும் செய்கின்றன. சிலவேளைகளில் வீட்டு விறாந்தைகளில் வைக்கப்பட்டுள்ள கதிரைகளில் இவை ஏறிப்படுப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இதனால் வீட்டு உரிமையாளர்கள் பெரும் சங்கடங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இரவு வேளையில் இவை காட்டமாகத் திரிவதும் ஒன்றுடன் ஒன்று பெரும் சத்தத்துடன் கடிபடுவதும் வழக்கமாக இடம்பெற்று வருகின்றன. இதனால் இப்பகுதியைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் நிம்மதியாகத் ·தூங்கவும் முடிவதில்லை.


இரவு முழுவதும் நாய்களின் ஊளைச்சத்தம் கேட்பது பெரும் இடையுறாக மாறியுள்ளது.

முன்னரெல்லாம் பிரதேச சபையினர் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களைப் பிடித்துச் செல்வார்கள். ஆனால் அதற்குமு இடமில்லாததால் நாய்கள் தமது இஷ்டம் போன்று சுதந்திரமாகத் திரிகின்றன. இதற்கு என்ன செய்வது என்று அறியாத நிலையில் மக்கள் உள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

**ம.பாஸ்கரன் ,சுன்னாகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# மதுவை அருந்தும் மனிதர்களே! ஒருகணம் சிந்தித்தால் என்ன?

ராஜராஜன்

உலகில் அரசுகளுக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தருகின்ற ஒரு முக்கியமான இடத்தை மதுபான விற்பனை வகிக்கின்றது. எமது நாட்டில் கூட இந்த நிலைதான் காணப்படுகின்றது. வரவு - செலவுத் திட்டத்தில் வரவு என்ற பக்கத்தில் மதுபான விற்பனையால் கிடைக்கின்ற வருமானம் எப்போதுமே குறைவடையாது பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

கவலைகளை மறப்பதற்கு மதுபானத்தை நாடுவதே ஒரே வழியென எம்மில் பலர் நினைக்கிறார்கள். அவ்வாறு அதனை நாடுவதையும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். எமது கவலைகளை மறக்கடிப்பதற்கான மந்திரசக்தி ஏதாவது மதுவுக்கு உள்ள தாவென ஆராய்ந்து பார்த்தால் இல்லை யென்றுதான் பதில் கிடைக்கும். மது ஒரு மருந்துப் பொருளுமல்ல. அதுவொரு போதைப்பொருள் மட்டுமே. மதுவினால் பயன் பெறுபவர்கள் அதனை விற்பவர்களும், அரசும் மட்டுமே. ஆனால், அதைப் பயன்படுத்துபவர்கள் ஒரு போதுமே நன்மை அடைவதில்லை. ஆரம்பத்தில் மனிதர்கள் மதுவை அருந்த ஆரம்பிக்கின்றார்கள். அதன் எல்லை மீறிய கட்டத்தில் மது மனிதர்களை விழுங்க ஆரம்பித்து விடுகின்றது என்று கூறுவார்கள். இன்று எந்தவொரு நிகழ்வை எடுத்துக் கொண்டாலும் அதைச் சிறப்பிக்கும் வகையில் மதுபானம் பரிமா றப்படுவதைக் காண முடிகின்றது. இதுவொரு நாகரிகமாகக் கூட மாறி வருகின்றது.

வெளிநாட்டு மதுபான வகைகள் அறிமுகம் ஆவதற்கு முன்னர் தென்னை மற்றும்பனை மரங்களின்பாளைகளிலிருந்து இறக்கப்படும் கள்ளையே பருகி வந்தனர். பனங்கள்ளில் மதுசாரம் குறைவு என்பதால் குடிப்பழக்கத்தின் ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் அதனையே நாடிச் சென்றனர். ஒருநாள் மாலை வேளையில் பனங்கூடல் ஒன்றின் அருகில் சிலர் காத்திருப்பதைக் காண முடிந்தது. காத்திருந்தவர்களில் சிலர் நாகரிகமான உடைகளுடனும் காணப்பட்டனர். அவர்கள் ஏன் அங்கே காத்திருக்கிறார்கள் என்பது ஆரம்பத்தில் தெரியவில்லை. சிறிது நேரத்தில் கள் இறக்கும் தொழிலாளி ஒருவர் மரத்திலிருந்து இறங்கி வருவதைக் கண்டதும்தான் விடயம் புரிந்தது. அந்தத் தொழிலாளிக்காகவே அவர்கள் காத்திருந்தனர். அந்த அளவுக்கு பனங்கள் அவர்களைக் கட்டிப் போட்டிருந்தது.

அப்போதெல்லாம் பனங்கள்ளில் ஆரம்பித்து, தென்னங்கள், சாராயம் என முன்னேறி வருவதைச் சாதாரணமாகவே காணமுடியும். தற்போது பியரில் ஆரம்பித்து முன்னேறிச் செல்பவர்களே அதிகம். ஏனென்றால் முன்னரைப்போன்று பனம்கள் இலகுவாகக் கிடைக்காததும், நாகரிக வளர்ச்சியும் இதற்கான பிரதான காரணமாகும்.

அன்று கள்ளுத் தவறணைகள் குறிக்கப்பட்ட இடங்களில் காணப்பட்டாலும், வீடுகளிலும் கள் விற்பனை அமோகமாக இடம்பெற்றது. கள் இறக்கும் தொழிலாளி வீட்டில் பச்சைத் தண்ணீரைக் கூட வாங்கிக் குடிக்காத உயர் குலத்தைச் சேர்ந்தவர்கள் எனக்கூறிக் கொண்டோர் கிடைக்கின்ற பாத்திரத்தில் கள்ளை வாங்கி ஆவலுடன் குடிப்பதைச் சாதாரணமாகக் காணமுடிந்தது.

ஆனால் இன்று கள் விற்பனையில் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. கூட்டுறவு முறையில் இயங்குகின்ற சீவல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களே கள்ளுத் தவறணைகளை நிறுவி அவற்றைப் பராமரித்து வருகின்றன. இந்த நிலையில் கள் அல்லாத ஏனைய மதுபான வகைகளை விற்பனை செய்கின்ற மதுபான விற்பனை நிலையங்களின் தொகை சடுதியாக அதிகரித்துக் காணப்படுகின்றது. வீதிக்கு வீதி இவற்றைக் காண முடிகின்றது.

> மனித உடலுக்குத் தீங்கை விளைவிப்பதில் மதுவும், புகைப்பொருள்களும் முன்னிலை வகிக்கின்றன. இதைத் தெரிந்து கொண்டும் மனிதர்கள் இவற்றின் மீதான மோகத்தைக் குறைப்பதாகத் தெரியவில்லை.

மதுபானப் பிரியர்கள் அலைந்து திரியக் கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கருதமுடியும். இந்த மதுபான சாலைகளில் விதம் விதமான வடிவங்களால் ஆன போத்தல்களில் மதுபான வகைகள் நிரப்பி வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது எவருக்குமே மனதில் சலனம் ஏற்படத்தான் செய்யும்.

மனித உடலுக்குத்தீங்கை விளைவிப்பதில் மதுவும், புகைப்பொருள்களும் முன்னிலை வகிக்கின்றன. இதைத் தெரிந்து கொண்டும் மனிதர்கள் இவற்றின் மீதான மோகத்தைக் குறைப்பதாகத் தெரியவில்லை. அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட எமது நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தில் மதுபான வகைகளுக்கு அதிக வரி விதிக்கப்பட்டது. இதனால் மதுபானப் பிரியர்கள் ஆடிப்போய் விட் டார்கள்.

மதுபானத்தை அருந்தி விட்டு ஆடுவதைவிட விலை அதிகரிப்பால் இவர்கள் தடுமாறுவதுதான் பார்ப்பதற்கு சுவாரஸ்யம் மிக்கதாகக் காணப்படுகிறது. மதுபான சாலை உரிமையாளர்களும் விலை அதிகரிப்புக் காரணமாக வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதாகத்தெரிவிக்கின்றனர். இதெல்லாம் சிறிது நாள்களுக்குத் தான் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.



மதுபானதாக மெடுத்தால் இவர்கள் எம்மைத் தேடி வரத்தானே வேண்டும் என்பது இவர் களது அசையாத நம் பிக்கை.

குளிர் நாடுகளில் உடலின் உஷ்ணத்தைப் பேணுவதற்காக மது அருந்தும் பழக்கம் ஏற்பட்டதாகக் கூறுவார்கள். சிகரெட் புகைக்கும் வழக்கமும் அவ்வாறுதான் ஏற்பட்டது. ஆனால் தகிக்கும் வெயிலில் உடலில் இருந்து வியர்வை வடிய வடிய சாராயத்தை அருந்திவிட்டு சிகரெட்டுக்க ளையும் புகைக்கும் எம்மவர்களைப் பார்க்கும்போது என்ன சொல்வது என்றே புரியவில்லை. இவர்களில் சிலர் போதை தலைக்கேறிய நிலையில் கண்ட இடங்களில் எல்லாம் வீழ்ந்து கிடப்பதைப் பார்க்கும் போது அனுதாபத்துக்குப் பதிலாக ஆத்திரம் தான் ஏற்ப டுகின்றது. தமது குடும்பம் குறித்து சிந்தனையே இல்லாமல் இவர்கள் இவ்வாறு நடந்து கொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. குடும்பத் தலைவர்களின் குடிப்பழக்கம் காரணமாக ஏராள மான குடும்பங்கள் வறுமை நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளன. சம்பாதிக்கின்ற பணம் அனைத்தையும் மதுவுக்குச் செலவிட்டு விட்டால் எஞ்சப் போவது ஒன்றுமே இல்லை. ஆனால் வறுமை மட்டுமே எஞ்சி நிற்கும்.

அரசில் உயர் பதவி வகித்த ஒருவர் கூறுவார். தவறணைக்குப் போய் அங்கு போடப்பட்டிருக்கும் பனம் குற்றி யில் அமர்ந்து கள் அருந்துவதில் கிடைக்கின்ற இன்பம் எதிலுமே கிடைக்காது. இப்போ தெல்லாம் நவீன கள்ளுத் தவறணைகள் என்ற பெயரில் மேசையும், கதிரையும் போட்டு கண்ணாடிப் பாத்திரத்தில் கள்ளைப் பரிமாறுகின்றார்கள். இது யாருக்கு வேண்டும். இன்றெல்லாம் கசிப்பு என்ற பெயரில் துரிதமாக உயிரைக் கொல்லும் ஒரு வகையான போதைதருகின்ற பானத்தைத் தயாரித்து விற்பனை செய்கின்றனர். அடித்தட்டு மக்கள் விலை மலிவு என்பதால் இதனை நாடிச் செல்கின்றனர். இதனால் கசிப்பு விற்பனை அமோகமாக இடம் பெற்று வருகின்றது. ஆனால் அதை அருந்துபவர்களின் குடும்பங்கள்தான் உணவுக்குக்கூட வழியின்றி நடுத்தெருவில் நிற்கின்றன.

பொதுவாகவே மது என்பது பொருளாதார ரீதியிலும், உடல் ரீதியாகவும் மனிதர்களைப் பாதித்து வருகின்றது.

மதுவை அருந்துவதால் ஒரு துளியளவு கூட நன்மை கிடைப்பதில்லை. மூளையை மழுங்கடித்து தன்னிலை மறக்கச் செய்து, அவமானத்தைத் தேடித்தருகின்ற மதுவை அருந்தத்தான் வேண்டுமா? என்பதை ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தானே கேட்டுக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாடுகள் தானா இவை?

**செ.உமாசுதன்**

இலங்கையின் வடக்கே தனித்துவமாக கலை, கலாசாரம்,மொழி, பண்பாடு,ஒழுக்க விழுமியங்கள் என அத்தனை இனத்துவ அடையாளங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த கட்டுக்கோப்பான ஒரு சமூகமாக இருந்தவர்கள் தமிழர்கள். தங்களின் பூர்வீக நிலத்திலே, தமிழர் தாயகத்திலே நியாயபூர்வமான உரித்துக்களையும் உரிமைகளையும் பெற்று சுதந்திரமாக வாழ முடியாத சந்தர்ப்பங்களை உணர்ந்து அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுத வழியிலும் அதனைப் பெறப் போராடியவர்கள். இதற்காக கடந்து சென்ற 60 வருடங்களையும் ஒப்பற்ற உயிர்களையும் இழந்து போனார்கள். பரிதவித்துப் போனோம்.சொந்த நிலங்களை சொந்த வீட்டைவிட்டு விரட்டப்பட்டார்கள். அகதி என்ற நாமம் இன்னமும் போகவில்லை.ஆங்காங்கே ஓடிக் கொண்டிருக் கிறார்கள்.



### அத்து மீறி அடாவடித்தனம்

மக்களின் உரிமை தொடர்பான வேட்கையையும் ஒற்றுமையையும் சிதைக்கும் பல சம்பவங்கள் இந்தக் காலப்பகுதியில் இடம்பெற்றன. நியாயமான போராட்டம் பயங்கரவாதம் என்ற நாமம் சூட்டப்பட்டு அடக்கப்பட்டது. பல தமிழ் உறவுகளை சிறைகளில் அடைத்தது. தமிழ்த் தாயின் பிள்ளைகளை வெள்ளை வான்களில் கடத்திக் காணாமல் போகச்செய்தது. பயங்கரவாதம் என்ற ஆயுதம் கொண்டு விசாரணை என்ற அரிதாரம் பூசி வீதிகளிலும், பொது இடங்களிலும், வீடுகளுக்குள்ளும்அத்துமீறிஅடாவடித்தனம் செய்து அராஜகம் புரிந்து காணாமல் போகச் செய்யப்பட்டது.உறவுகள் பரிதவிக்க பரிகசித்தது. அன்பான அம்மா, அப்பா, பாசமான அண்ணன், அக்காள்,பரிவான தம்பி தங்கை என்றிருந்த இன்பமான குருவிக் கூடுகளைக் கலைத்துவிட்டது.

உரிமையோடு உறவாடி இருந்தவர்களுக்குசாபமிட்டுஇராணுவமுகாம்களின் படிமீது மண்டியிட்டு உறவைத்தேடிப் புலம்பிப் புலம்பி சுய நினைவினை இழக்கச் செய்தது. மனித உரிமை ஆணைக் குழு,செஞ்சிலுவைச்சங்கம் என முறையிட்டுப் புலம்ப வைத்தது. காணமல் போன உறவுகளின் தேடுதல் எத்தனை ஆண்டுகளாகத் தொடர்கிறது? ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பலருக்கு மனுப் போடுதல், வாக்குமூலம் கொடுத்தலோடு உறவுகளின் தேடுதல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால்உறவுகளைத் தேடித்தருவதற்கான விசாரணை என்று வருபவனோ, கதிரையில் குந்தி மக்களின் சோகப் புலம்பலைக் கேட்டுச் சிரித்துவிட்டு, கையில் கொண்டுவந்த பைல் மட்டைகளில் ஏதோ கிறுக்கிவிட்டு, தீர்வு வருமெனக்கூறி வந்தவழி போய்விடுகின்றான். அழுகை யோடும் புலம்பலோடும் மனச் சுமையின் கனதியோடும் தொடரும் கேள்விகளுக்கு யார் பதில் கூறுவது..?? கொடுமை செய்தவனே தீர்ப்பைக் கூறவும், மரணச் சான்றிதழ் எடுங்கள் எனச் சொல்லவும் பார்த்திருக்க முடியுமா...??

### இம்முறையும் யாழ்ப்பாணம்.

இம்முறையும் யாழ்ப்பாணம் வந்திருக்கின்றனர் இந்தக் குழுவினர்.அழகாய் கோட்டும் சூட்டும் போட்டு, எத்தனை அமர்வோ அத்தனை அமர்வுக்கும் ஊர் ஊராய் திரிகிறார்கள். மாறாக சீரியசாய் இல்லை இவர்கள்.இதற்குள் புலனாய்வுக் காரர்களும் புறம்போக்குகளும் இவர்களோடு சேர்ந்து படமெடுத்துத் திரியினம். உறவுகளின் தேடுதலும் பரிதவிப்பும் இவர்களுக்குப் புரிகிறதா..? ஐந்து வருடம் 10 வருடம், 25 வருடமென உறவைத் தேடி அலையும் சோகமும் அழுது அழுது சோர்ந்து போன இவர் களின் உள் உணர்வுகளும் உண்மையில் இவர்களுக்கு புரிகிறதா என்றால் இல்லை. விசாரணை என்ற பெயரில் காலத்தை இழுத்தடித்து மனங்களை மரக்க வைக்கிறார்கள்.கேட்க முடியாத கேள்வியைக் கேட்டு புலன்களைச் சிதறடிக்கின்றனர்.

உறவுகளைத் தேடித் தரச்சொல்லிக் கேட்டால்.இப்போது தானே விசாரிக்கிறோம்.யார் மீது குற்றம் உள்ளது என

> உறவுகளைத் தேடித் தரச்சொல்லிக் கேட்டால், இப்போது தானே விசாரிக்கிறோம்.யார் மீது குற்றம் உள்ளது என நிரூபிக்கப்படுகிறதோ அவர் களுக்கு தண்டனை வழங் கப்படும் என்று புதுக்கதை சொல்கின்றனர்

நிரூபிக் கப்படுகிறதோ அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் என்று புதுக் கதை சொல்கின்றனர்.அதிலும் சட்டமும் கதைக்கின்றனர்.என்ன அது...? 1931 ஆம் ஆண்டின் சட்டப்பிரகாரம் ஒருவர் காணாமல் போய் ஒருவருடத்துக்கு மேலாகி விட்டால், மரணச் சான்றிதழ் எடுக்க வேண்டுமாம்.அப்போதுதான் அரசின் உதவிகள் கிடைக்குமாம்.அது உதவியல்ல உறவைத் தேடும் சொந்தங்களுக்கு உளச் சேதம்.

தீர்வு கிடைக்கும் என்ற மிகுந்த எதிர்பார்ப்போடு, தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாகவும் கருதி வருகை தந்த காணாமல் போன உறவுகளிடம் கேட்கப்பட்ட கேள்விகளின் எழுபத்தைந்து வீதமானவை அவர்களை புண்படுத்துவதாக அமைந்திருக்கின்றன. பிச்சைக் காசு எடுக்கிறியளா...?, மரணச் சான்றிதழ் எடுக்க விருப்பமோ..? அகதி முகாம்களில் உங்கள் உறவைத் தேடினீங்களா...? எத்தனை தரம் தேடினீங்கள்..? ஏன் அங்கை போனீர்கள்..? ஆமி முகாமிற்கு போனால் அவரின்ரை பெயரை எப்படித் தெரியும்...? இந்தியன் ஆமி வரேக்கை புலி எங்கை காட்டுக்கா போனது..? என மீண்டும் மீண்டும் ஒரே கேள்விகளையே கேட்டுக் கொள்கின்றனர்.

### ஞாபகம் எவ்வாறு வரும்?

அவனைத் தேடி எத்தனை வருசமாய் ஓடித்திரியிறன்.இப்ப பத்து வருசமாச்சுது. நீங்கள் கேட்டவுடனை காணாமல் போன திகதி எங்களுக்கு என்னெண்டு ஞாபகம் வரும்.எத்தனை தரம் விசாரணை எண்டு இஞ்ச வாறியள்.விவரங்களை பதியிறியள்.பிறகு போறியள்.உண்மையைச் சொல்லுங்கோ? இவ்வளவு காலமாய் என்ன செய்யிறியள்..? இப்ப பதியிறதையும் கொண்டு போய் எந்த தீக்கிடங்குக்கை போடப் போறியள்..? நாங்கள் பிள்ளையளை இழந்து எவ்வளவு துன்பப்படுகிறம் எண்டு உங்களுக்கு தெரியுமோ..? அவையும் உங்கடை பிள்ளை மாதிரித் தானேஎண்டுறதைஉணரவில்லையே? கடந்த அரசிலை தான் சொன்னியள், இந்தா விடுறம் எண்டு. ஒண்டும் சரிவரேல்லை.பிறகு 100 நாள் நல்லாட்சி அரசாங்கம் எண்டியள். நாங்களும் நம்பியிருந்தம், பிள்ளையளுக்கு விடிவு கிடைக்குமென்று.இதிலையும் ஒண்டும் நடக்கேல்லை. ஆனால் சொன்னதைவிட வேறை ஏதோ எல்லாம் நடந்து கொண்டிருக் குது.எப்ப தான் விடப்போறியள்..?

### காலத்தை இழுத்தடிக்க முடியுமா?

நீங்கள் சாட்சியம் பதியிற பேப்பரிலையும், அதை எழுதிற பேனயிலையும் உண்மை இருந்தால் இந்த வருசம் முடியிறதுக் குள்ளை பிள்ளைகளை எங்களிட்டைத் தந்திடுங்கோ. இல்லையெண்டால் நானும் செத்துப்போவன். உங்களுக்கு புண்ணியமாய்ப் போகும்.ஆயிரம் தடவை கை கூப்பி உங்களுக்கு நன்றி சொல்லுவன். அவன் எந்தக் களவும் குற்றமும் செய்யேல்லை.அவனை விடுவியுங்கோ. எங்களுக்கு உங்கடை உதவித்தொகை ஒண்டும் வேண்டாம். மகன் கிடைப்பான் எண்ட நம்பிக்கையை கடவுள் எனக்குக் கொடுத்திருக்கிறான். அந்த நம்பிக்கை யோடை தான் என்ரை உயிர் ஊசலாடுது. இந்த வருச முடிவுக்குள்ளை என்ரை [illegible] மட்டுமில்லை, எல்லாப் பிள்ளையளையும் விட்டிடுங்கோ என கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டார் சதாசிவம் பூலோகலட்சுமி. எங்கள் அன்பான அம்மாக்களின் கதறலும்,ஆழ்மன விசும்பலும் துன்பங்களின் மேலீடும் வந்தவர்களுக்கு புரிகிறதா...? இன்னும் எத்தனை அம்மா, அப்பா, அக்கா,தங்கைகள் உறவைத் தேடிக் கதறி அழுகின்றனர்.பாசத்தால் புலம்புகின்றனர்.இவர்களின் கேள்விகளுக்கு அரசின் பதில் என்ன..? உறவுகளின் கதறலையும் சோகங்களையும் கேட்டு விட்டு, அதனை நேரிலே பார்த்து விட்டு, பரிகசித்துவிட்டு விசாரணை என்ற பெயரில் இப்படியே காலத்தை இழுத்தடிக்க முடியுமா..?

கண்ணீரையும், கதறலையும், சோகங்களையும், கொட்டித் தீர்க்கும் உறவுகளின் பரிதவிப்பையும் இடையிடையே நிறுத்தி ரேப் றெக்கோடரில் பதிவு செய்வதும். கசற்றுகளை அடிக்கடி மாற்றி அடுக்கி வைத்து அழகுபார்ப்பதும் சரியான விடயங்களா..? இவை பதிந்து வைப் பதற்கான விடயங்களா..? விசார ணைக்கென வந்திருப்பவர்களும், அவர்களை அனுப்பியவர்களும் உண்மையில் மனச்சாட்சி உள்ளவர்கள் தானா?

சோதிடத்தைப் பற்றியும் மக்களின் நம்பிக்கையைப் பற்றியும் அலட்சியம் செய்யவும், பேசிக்கொள்ளவும் இவர்கள் அருகதை அற்றவர்கள்.கடவுள் நம்பிக்கையைப் பற்றி எங்களுக்குச் சொல்லித்தர வேண்டியதுமில்லை.போதி மரத்தடியில் இருந்தவரின் புத்திரராய் எங்களுக்கு உறவுகளை தந்து மன அமைதியைத் தாருங்கள்.விசாரணை என்ற பெயரில் உறவுகளைத் துன்பத்தில் உறையவிட்டு ஊர் ஊராய்ப் போய் உலாவராதீர். உறவுகளை எடுத்துவிட்டு இப்போது விசாரணை, அதன் பின் தீர்வு என்று சொல்லி மீண்டும் கதை விடாதீர். உறவுகளின் சாபத்தால் அழிந்து போகாதீர். அறிவுரை கூறும் தகுதியற்றவர்கள் என்பதைப் புரிந்து கொண்டு எதிர்கால நடவடிக்கை தொடர்பில் ஆக்கபூர்வமாக சிந்தித்து செயலாற்றுங்கள்.நம்பிக்கைகளில் நலிவை உண்டுபண்ணாதீர்.உதாசீனம் செய்யாதீர்.

காலத்தை இழுத்தடிக்காது இனியாவது விசாரணைகளை விடுத்து தீர்வை முன்வைப்பதற்கு அரசை முன்வரச் செய்யுங்கள். அப்படிச் செய்ய முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தலைப்பாகை, தாடி வைக்க சீக்கியருக்கு அமெரிக்க இராணுவம் அனுமதி

அமெரிக்க இராணுவத்தில் உள்ள சீக்கிய அதிகாரி ஒருவருக்கு தலைப்பாகை அணியவும், தாடி வைத்துக் கொள்ளவும் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கேப்டன் சிம்ரத்பால் சிங் என்பவருக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்க இராணுவத்தில் நீண்ட முடி, தாடி வைத்துக்கொள்ள அனுமதியில்லை. இதனால் இராணுவத்தில் சேர்ந்ததும் தனது தாடி, முடி அனைத்தையும் மழிக்க வேண்டியவரானார் சிங். சீக்கிய மத முறைப்படி இவை இரண்டும் முக்கியமானவை என்பதால் தான் அவற்றை வைத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என்று அவர் கேட்டு வந்தார்.

தற்போது, பணியில் இருக்கும் போது சிம்ரத்பால் சிங் தலைப்பாகை அணியவும் தாடி வைத்துக் கொள்ளவும் அமெரிக்க இராணுவம் அனுமதி அளித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் சாலைகளில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகளை அகற்றும் படைப் பிரிவை சிம்ரத்பால் வழிநடத்தினார். அதற்காக வெண்கல நட்சத்திரம் விருது அளித்து மதிப்பளிக்கப்பட்டார்.

தலைமுடி, தாடி வைத்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பது சிம்ரத்பால் சிங்குக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. "இது அற்புதமான தருணம். இரட்டை வாழ்க்கை முடிந்துவிட்டது. முன்பு வீட்டில் மட்டும்தான் டர்பன் (தலைப்பாகை) அணிய முடியும். என் இரட்டை வாழ்க்கை தற்போது ஒன்றாக இணைந்துவிட்டது.

தற்போது தற்காலிகமாகவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிரந்தரமாக அதனை வழங்காவிட்டால் வழக்குத் தொடரத் தயாராக இருக்கிறேன்" என்றார் சிம்ரத் பால்.

அமெரிக்க இராணுவத்தில் உள்ள மற்றொரு சீக்கியரான மேஜர் கமல்ஜீத் சிங் கல்சி கடுமையான முயற்சிகளுக்குப் பின்னர் 2009ஆம் ஆண்டு தாடி வைத்துக்கொள்ள அனுமதி பெற்றிருந்தார். (உ)

## அமெ. அதிபராவாரா நடிகர் வில் சிமித்?



உலகப் புகழ்பெற்ற ஹொலிவுட் நடிகர் வில் சுமித், தான் அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடக்கூடும் எனப் பூடகமாகத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவுக்கு உள்ளே மட்டுமன்றி உலகம் முழுவதிலும் செல்வாக்கு மிக்கவர் வில்சுமித்.

சமீபத்தில் அவர் அளித்துள்ள பேட்டியில் நடிப்பு, இசை போன்ற துறைகளைத் தவிர்த்து, வேறு செயற்பாடுகள் மூலமாகவும் தன்னால் உலகிற்கு மிகப் பெரும் பங்களிப்பைச் செய்ய முடியும் என்று தெரிவித்துள்ளார். உலகின் பிரபலமான திரை நட்சத்திரமாக இருப்பது என்பது மிகச் சிறிய சாதனைதான் என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் அதிபர் வேட்பாளராகக் கூடும் எனக் கணிக்கப்படும் டொனால்ட் ட்ரம்ப் போன்றவர்கள், முஸ்லிம்களுக்கு எதிராகத் தெரிவிக்கும் கருத்துக்கள் தன்னை தீவிர அரசியலில் வலுக் கட்டாயமாக ஈடுபடத் தூண்டுகின்றன என்று சிமித் தெரிவித்தார்.

"அரசியலில் இறங்கினால் அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கு மட்டும்தான் போட்டியிடுவேன்" என்று சுமித் கூறியுள்ளார். "பொறுப்புள்ள பதவியில் இருந்தால் தகுந்த குரலைக் கொடுக்கவேண்டும், பொறுப்புகள் அதிகம் இருந்தால் நித்திரைக்கு இடம் இருக்காது. நான் வெறும் பணக்காரனாக மட்டும் இருக்க விரும்பவில்லை" என்றார் சிமித்.

தன்னம்பிக்கை என்ற வார்த்தையின் உயிர் வடிவமாகப் பார்க்கப்படுபவர் வில் சிமித். எனவே அமெரிக்காவின் அடுத்த கருப் பின அதிபராக வில் சிமித் இருப்பதற்கான அனைத்து சாத்தியங்களும் உள்ளன என்கின்றன ஊடகங்கள். அதிபர் தேர்தலில் போட்டியிடும்போது ஒபாமா, சுமித்தின் உதவியை நாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ரி4)

# ஆபத்தில் சீனா

## உழைக்கும் தொழிலாளர் எண்ணிக்கை 9 கோடியால் வீழ்ச்சியைச் சந்திக்கும்

சீனாவின் மக்கள் தொகையில் வேலை செய்யக்கூடியவர்களின் எண்ணிக்கை இன்னும் சில தசாப்தங்களில் 9 கோடி வீழ்ச்சியடையுமென்று உலக வங்கி அறிக்கை தெரிவிக்கிறது. 2010ஆம் ஆண்டிலிருந்து 2040ஆம் ஆண்டு காலப் பகுதியில் 10 வீதத்தால் இந்த வீழ்ச்சி ஏற்படும்.

முதியோரின் எண்ணிக்கை உயர்வு சீனாவுக்கு நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்கும். தற்போது சீன மக்கள் எண்ணிக்கையில் 11 கோடியே 40 லட்சம் பேர் 65 வயதுக்கும் மேற்பட்டோராவர். எந்தவொரு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் இல்லாத அளவுக்கு இந்த எண்ணிக்கை சீனாவில் உயர்ந்து காணப்படுகிறது என அந்த அறிக்கையில் குறிப்பிடுகின்றது.

> "சீனாவில் 11 கோடிப் பேர் வயோதிபர்கள். அது பணக்கார நாடு ஆவதற்கு முன்னர் வயோதிப நாடாகிவிடும்."

உலக வங்கி அறிக்கையைத் தயாரித்த பிலிப் ஒகேபி, சீனா பணக்கார நாடு ஆவதற்கு முன்பு முதியவர்களை அதிகம் கொண்ட நாடாக மாறும் எனத் தெரிவித்தார். "குறைந்த தொழிலாளர் சக்தியும், அதிகரித்துள்ள முதியோர்களின் எண்ணிக்கையும் சீனாவின் பொருளாதாரத்தை நெருக்கடியில் தள்ளியுள்ளது" என்றார் அவர்.

சீன அரசு 1979ஆம் ஆண்டு தம்பதிக்கு ஒரு குழந்தை என்று கொண்டு வந்த குடும்பக் கட்டுப்பாட்டால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. (உ-ரி4)

கிறி





பிலிப்பைன்ஸில் மணிக்கு 185 கிலோ மீற்றர் வேகத்தில் கரையைக் கடக்க ஆரம்பித்த மெலார் சூறாவளி மெல்ல மெல்ல வலுவிழந்து வருவதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

# 43 பேர் சாவு

### ஆர்ஜென்ரினாவில் பேருந்து கவிழ்ந்ததில் பரிதாபம்

ஆர்ஜன்ரினா, டிசெ.16

ஆஜென்ரினாவில் காவலர்களை ஏற்றி வந்த பேருந்து பாலம் ஒன்றில் இருந்து தடுமாறி வீழ்ந்ததில் 43 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

பல்போவா ஆற்றுக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பேருந்தில் இருந்தவர்கள் 51பேர் என அதிகாரிகள் தெரிவித்தனர். 8 பேர் மருத்துவமனையில் காயங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் இருவரின் நிலை ஆபத்தாகவுள்ளது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன .

ஆற்றில் வீழ்ந்த பேருந்தை மீட்கும் முயற்சியில் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அதன் ஆழம் அதிகம் என்பதால் பெரும் பாரந்தூக்கிகளை வைத்து சடலங்களை மீட்கும் பணி இடம்பெற்றது. 30 சடலங்கள் ஆற்றின் அடியில் இருப்பதால், அவற்றை மீட்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பேருந்தில் பயணித்தவர்கள் ஆர்ஜென்ரி னாவின் பொலிஸார் என தெரிவித்தனர். இவர்கள் நாட்டின் எல்லையைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள்.

இந்தளவு எண்ணிக்கையான படை யினரை இழந்தது இதுவே முதல் முறை என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (உ-ரி4)

# மணிக்கு 185 கி.மீ. வேகத்தில் கரையைக் கடந்தது சூறாவளி

## *பிலிப்பைன்ஸில் மூவர் சாவு; பல லட்சம் பேருக்கு மின்சாரம் இல்லை*

மனிலா, டிசெ .16

எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே மத்திய பிலிப்பைன்ஸை தைபூன் மெலார் என்ற கடும் சூறாவளி தாக்கியதில் மூவர் உயிரிழந்தனர். பல லட்சம் பேர் மின்சாரம் இன்றி அவதிப்படுகின்றனர். பலத்த காற்றுடனும், கன மழையுடனும் சூறாவளி கரையைக் கடந்தது.

புயலினால் மரங்கள் விழுந்தன. வீட்டுக் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. 7 மாகாணங்களுக்கு மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ளதாக நாட்டின் தேசிய இடர் முகாமைத்துவ நிலையம் தகவல் வெளியிட்டுள்ளது.

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்காக சோடிக்கப்பட்ட மின் விளக்குகள், தகரக் கூரைகள், மரக்கிளைகள் என்பன பலத்த காற்றினால் சேதத்துக்குள்ளாகி வீதி எங்கும் பரவிக் கிடக்கின்றன. மீட்புப் பணியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

கடலோர வீடுகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த சூறாவளியால் 54 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை மணித்தியாலத்திற்கு 170 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியது. இதற்கு முன்னதாக நேற்றுமுன்தினம் 185 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியது.

புயல் தற்போது நலிவடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பைகோல் பிராந்தியத்தில் 720,000 மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். சேத விவரம் குறித்து அறிக்கைகள் உடனடியாக வெளியிடப்படவில்லை. ஆனால் வெள்ளப் பெருக்கால், உயிரிழப்புகள் எதுவும் இல்லை என அல்பே ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஆண்டொன்றுக்கு பிலிபைன்ஸ் சராசரியாக 20 புயல்களால் தாக்கப்படுகின்றது. பெரும் புயல்கள் ஆண்டிறுதியில் ஏற்படுகின்றன.

இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தாக்கிய கோப்பு சூறாவளிக்கு 54 பேர் உயிரிழந்தனர். பிலிப்பைன்ஸில் பல பிரதேசங்களில் மேலும் புயல்கள் தாக்கக்கூடிய அபாயம் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் தாத்தாக்களின் உலக சாதனை



இயேசுவின் பிறப்பைக் கொண்டாடும் கிறிஸ்மஸ் பண்டிகை நெருங்கிவரும் நிலையில் கிறிஸ்மஸ் தாத்தா பரவலாகக் கவனத்தை ஈர்த்து வருகிறார். கடந்த சனிக்கிழமை ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் 10 ஆயிரம் பேர் கிறிஸ்மஸ் தாத்தா வேடமிட்டு வீதியில் பொடி நடையாக ஓடினர். சிவப்பு நிற முழு அங்கி, கால்களை மூடிய சப்பாத்துக்கள், கழுத்தைச் சுற்றிய வெள்ளை நிறப் பட்டி, வெள்ளைப் பட்டியுடனான சிவப்புத் தொப்பி என்பவற்றை அணிந்து கொண்டு ஆயிரக்கணக்கானவர்கள் வீதிகளை நிறைத்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இவ்வளவு பெரும் எண்ணிக்கையான நத்தார் தாத்தாக்கள் ஒரே இடத்தில் கூடியமை இதுவே முதல் தடவை என்ற புதிய வரலாற்றை இந்த நிகழ்வு பதிவு செய்துள்ளது. இதற்கு முந்திய ஆண்டு இதே நிகழ்வு செய்த சாதனையை இந்த ஆண்டு முறியடித்துள்ளது. வழக்கமாக இந்த நிகழ்வு பெருமளவு ஆண்களையே கவர்ந்திழுத்து வந்தாலும் இந்தத் தடவை 6 சதவீதம் பெண்களும் பங்கெடுத்தார்கள் என்று ஏற்பாட்டாளர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். 1000 சிறுவர்களும் கலந்துகொண்டார்கள். நிகழ்வில் கலந்துகொண்ட ஒவ்வொருவரும் 12 யூரோக்களைச் செலுத்தி இருந்தனர். அதற்குள்ளேயே அவர்களின் கிறிஸ்மஸ் தாத்தா உடை மற்றும் அலங்காரங்களும் உள்ளடக்கப்பட்டன. எஞ்சிய பணம் பல தொண்டு நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சுவீடனிலும் இதுபோன்ற நிகழ்வு இடம்பெற்றது. சிறுவர் பாதுகாப்பு நிதியம் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றிற்கு நிதி சேகரிக்கும் நோக்கோடு இந்த 3 கிலோ மீற்றர் பொடி நடை ஓட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆயிரம் பேர் இதில் கலந்துகொண்டனர். கிறிஸ்மஸ் தாத்தாவின் மகுடத்தின் கீழ் எழைகளுக்கு உதவுவதற்காக இந்த ஓட்டத்தில் கலந்துகொண்டமை பெரும் மகிழ்ச்சி என்று பலரும் கருத்துத் தெரிவித்தனர். (உ-ரி4)

## சவூதியில் 20 பெண்கள் முதன் முதலில் தேர்தலில் வெற்றி

சவூதி அரேபியாவில் நடைபெற்ற நகராட்சித் தேர்தலில் அந்த நாட்டு வரலாற்றிலேயே முதன்முறையாக 20 பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர். எனினும் இது மொத்தம் உள்ள சுமார் 2,100 இடங்களில் ஒரு சதவீதம் மட்டுமே ஆகும்.

மன்னராட்சி நடைபெறும் சவூதியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்பு நகராட்சிச் சபைகள் மட்டுமே. இந்தச் சபைகளுக்கு கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேர்தலில் சுமார் 7 ஆயிரம் வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர். இதில் 979 பேர் பெண்கள்.

இந்தத் தேர்தலில் பெண்கள் வேட்பாளர்களாக போட்டியிடவும், தங்கள் வாக்குகளை பதிவு செய்யவும் முதல்முறையாக அனுமதிக்கப்பட்டது.

தேர்தல் முடிவை அந்த நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி 20 பெண் வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர். இதில் தலைநகர் ரியாத் நகரில் மட்டும் அதிகபட்சமாக 4 பேர் வெற்றி பெற்றனர்.

இதில் இஸ்லாமியர்களின் புனித நகரான மெக்கா நகராட்சிக்குட்பட்ட மத்ரகத் சபைக்கான தேர்தலில் சல்மா பின்ட் ஹிஸாப் அல்-ஒடீபி முதலில் வெற்றி பெற்ற பெண் என்ற பெயர் பெற்றார். இவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட 7 ஆண்கள் மற்றும் 2 பெண்களைத் தோற்கடித்துள்ளார்.

சவூதியில் பெண்களுக்குக் கடும் கட்டுப்பாடுகள் உள்ளன. குறிப்பாக பயணம் செய்யவும், பணிக்கு செல்லவும், திருமணம் செய்து கொள்ளவும் குடும்ப ஆண் உறுப்பினர்களின் அனுமதி வேண்டும். (உ)

## இஸ்லாமிய அரசுக்கு எதிராக இஸ்லாமிய நாடுகள் திரள்வு

### *34 நாடுகள் ஒரே அணியில்*

ரியாத்,டிசெ.16

இஸ்லாமியத் தீவிரவாதத்திற்கு எதிரான போரில் 34 இஸ்லாமிய நாடுகளை உள்ளடக்கிய கூட்டணி ஒன்றை சவூதி அரேபியா அறிவித்துள்ளது. இஸ்லாமியத் தீவிரவாதம் எனும் நோய்க்கு எதிராக இஸ்லாமிய உலகம் ஒன்று திரண்டுள்ளது என சவூதியின் துணை இளவரசரும், பாதுகாப்பு அமைச்சருமான முகமது பின் சல்மான் அறிவித்துள்ளார்.

"பல நாடுகள் தீவிரவாதத்தினால் பாதிப்படைந்துள்ளன. உதாரணமாக சிரியாவின் டயெஷ், ஈராக், சினாய், ஏமன், லிபியா, மாலி, நைஜீரியா, பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் என்பன மோசமான பாதிப்பை எதிர்கொள்கின்றன. இவற்றை மீட்க பலமான தாக்குதல் நடத்தப்படவேண்டும். இந்தக் கூட்டு முயற்சியில் எந்தச் சந்தேகமும் இல்லை" என்றார் அவர். இந்தக் கூட்டணியின் செயற்பாட்டு மையம் ரியாத் நகரே என்றார்.

சவூதி அரேபியாவுடன், ஜோர்தான், ஐக்கிய அரபு நாடுகள், பாகிஸ்தான், பெஹ்ரின், பங்களாதேஷ், பெனின், துருக்கி, சாத், டோகா, துனிசியா, ஜிபூட்டி, செனகல், சூடான், சியராலியோன், சோமாலியா, காபோன், கினியா, பலஸ்தீனம், கொமொரோசு, கட்டார், கோட் டி ஐவரி, குவைத், லெபனான், லிபியா, மாலத்தீவு, மாலி, மலேஷியா, எகிப்து, மொரோக்கோ, மவுரித்தேனியா, நைஜர், நைஜீரியா மற்றும் ஏமன் ஆகிய நாடுகளும் கூட இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளன.

2014ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான மும்முரமான தாக்குதலில் ஈடுபட்டுவருகிறது. அதன் நட்பு நாடுகளான கனடா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் இணைந்து செயற்படுகின்றன. ஐ.எஸ்.அமைப்புக்கு எதிரான 80 சதவீத தாக்குதலை இந்தக் கூட்டணி நாடுகளே மேற்கொண்டுள்ளன. இவற்றுடன் 10 மத்திய கிழக்கு நாடுகளும் ஐ.எஸ்க்கு எதிரான போரில் பங்களித்து வருகின்றன.

தற்போதைய இஸ்லாமியக் கூட்டணி, இஸ்லாமிய அமைப்புகளைக் கட்டுப்படுத்த சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்று ஆய்வாளர்கள் வரவேற்றுள்ளனர். "ஈரானும் அதன் நட்பு நாடுகளும் இந்தக் கூட்டணியில் இணைந்திருப்பதால் மாற்றங்களுக்கு சந்தர்ப்பம் உண்டு. ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் மட்டும்தான் ஐ.எஸ் அமைப்பினர் இருக்கிறார்கள் என்றில்லை. இஸ்லாமிய நாடுகளின் கூட்டணியால் வருங்காலத்தில் ஐ.எஸ். அமைப்பால் ஏற்படும் ஆபத்துக் குறையும்" என மத்திய கிழக்கு ஆய்வுகள் பற்றி லண்டன் பொருளாதார கல்லூரியின் பேராசிரியர் பவாஸ் தெரிவித்துள்ளார். (உ-ரி4)

> 97 இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில் 60 பேர் மாட்டினர். 12 நாடுகளில் தேடுதல் நடத்தப்பட்டது.

## ஆபாசப்பட ஆசாமிகள் மாட்டினர்

சிறுவர்களை வைத்து ஆபாசப் படங்களை எடுத்து விநியோகித்து வந்த 60 பேரை, 12 நாடுகளில் பொலிஸார் கைது செய்தனர்.

இது குறித்து மெக்ஸிகோ அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது:

சிறுவர்களை வைத்து ஆபாசப் படங்கள் எடுத்து, அவற்றை இணையத்தளம் மூலம் சர்வதேசக் கும்பல் விற்பனை செய்து வந்தது. அந்தக் கும்பலுக்கு எதிரான சர்வதேச நடவடிக்கையின் ஒரு பகுதியாக, அமெரிக்கா, ஆர்ஜென்டினா, பிரேசில், சிலி, கொலம்பியா, கோஸ்டரிகா, ஸ்பெயின், கௌதமாலா, மெக்ஸிகோ, பராகுவே, உருகுவே, வெனிசூலா ஆகிய நாடுகளில் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. 97 இடங்களில் நிகழ்த்திய சோதனையில், 60 பேர் கைதாகினர்.

இந்த நடவடிக்கைக்கு, அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான எஃப்.பி.ஐ. உதவி அளித்தது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## "அடுத்தது நீங்களே" ஒபாமாவின் எச்சரிக்கை இது

வொஷிங்டன், டிசெ.16

ஐ.எஸ்க்கு எதிரான தாக்குதலை இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது என அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்தார். கடந்த நவம்பர் மாதத்தில் மேலும் அதிகமான வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவத் தலைமையகத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக ஐ.எஸ்க்கு எதிராக இடம்பெற்ற தாக்குதல்களில் அந்த அமைப்பின் முக்கிய தலைவர்கள், நிதிக்குப் பொறுப்பானவர்கள் கொல்லப்பட்டுள்ளதோடு எண்ணெய்வளமும் அழிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

"2014ஆம் ஆண்டிலிருந்து இதுவரைக்கும் கிட்டத்தட்ட 9000 வான் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. ஐ.எஸ். அமைப்பினரின் 40 சதவீத அதிகாரம் ஈராக்கில் இருக்கும் அந்த அமைப்பினரால் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த வருடத்தின் நடுப்பகுதியிலிருந்து ஐ.எஸ். அமைப்பினர் வெற்றிகரமாகச் செயற்பட்டதாகத் தெரியவில்லை, இரு நாடுகளில் அவர்கள் வியாபித்திருப்பதும் இதற்கு ஒரு காரணம். அமெரிக்காவும் அதன் கூட்டுப்படைகளும் மிகவும் கடினமான போரில் பங்கேற்றுள்ளன. படையினரிடம் எச்சரிக்கை அவசியம்" என்றார் ஒபாமா.

"மறைந்திருக்கும் ஐ.எஸ். தலைவர்களும் தப்ப முடியாது. அவர்களுக்கு நாம் கொடுக்கக்கூடிய தகவல் அடுத்தது நீங்கள்தான் எமது இலக்கு என்பதுதான்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் ஒபாமாவின் திட்டங்கள் செயற்பாட்டுக்கு உகந்ததாக இல்லை என்று அரசியல் அவதானிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். ஐ.எஸ். அமைப்பினர் குறிப்பிட்ட அளவே தோல்வியை சந்தித்துள்ளனர். தனிப்பட்ட குழுக்களின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஐ.எஸ். அமைப்பின் வளர்ச்சி இதுவரை இல்லாத அளவுக்கு பெரியது. அமெரிக்காவில் உள்ளவர்களில் 70 சதவீதத்தினர் ஐ.எஸ். எப்போதாவது தம்மைத் தாக்கும் என்ற அச்சத்தில் உள்ளனர் என்கின்றனர் ஒபாமாவின் அரசியல் எதிரிகள். (உ)

> மறைந்திருக்கும் ஐ.எஸ். தலைவர்களும் தப்ப முடியாது. அடுத்த இலக்கு நீங்கள்தான் என்பதே எமது செய்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த சித்திரக் கலைஞரும் ஓவியருமான ரமணியின் அட்டைப்படக் கண்காட்சி

துு.துசியந்தன்




சித்திரத்துறையில் ஏற்பட்டு வரும் பெரிய மாற்றங்கள் கலைப் படைப்பு என்ற வரம்பையும் மீறி பல்வேறு துறையினூடாகப் பல்பரிமாணம் பெற்று வருகிறது. வெறும் கடதாசிகளிலும், சுவர்களிலும், துணிகளிலும் வரையப்பட்ட சித்திரங்கள் இன்று கிறபிக்ஸ், அனிமேசன் என்று வளர்ச்சி பெற்று விட்டது. இந்தச் சித்திரத் துறையில் ஏற்பட்ட மாற்றம் பார்வையாளரின் தன்மையிலும் ஒரு மாற்றத்தைக்கோரி நிற்கிறது.

**சித்திரக் கலையின் வடிவங்கள்**

சித்திரக்கலையின் பல்வேறு வடிவங்களுள் வெகுசன சித்திரமும் ஒன்றாகும். இது பொப் ஆட் என்று அழைக்கப்படும். இது பெரும்பாலும் வர்த்தகத்துறை சார்ந்த சித்திரங்களாக அமையும். உதாரணமாக, விளம்பரச் சித்திரங்கள், அட்டைப்படச் சித்திரங்கள் இதனுள் அடங்குகின்றன.

யாழ்ப்பாணத்தின் அட்டைப் படச் சித்திரக் கலையின் நீண்ட வரலாற்றில் மூத்த சித்திரக் கலைஞராக ரமணி என்று எல்லோராலும் அறியப்பட்ட சிவசுப்பிரமணியம் கருதப்படுகின்றார். இவரது அட்டைப்படங்களின் கண்காட்சி 2015 டிசெம்பர் இரண்டாம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைத்துறையினரால் அவர்களது காட்சியகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டு டிசெம்பர் ஐந்தாம் திகதி வரை நடைபெற்றது. நுண்கலைத்துறை மாணவியான சுஜனி உதயகுமாரின் தேடலின் தொகுப்பாக இது அமைந்தது.



ஓர் ஓவியரின் தொடர்ச்சியான படைப்புக்களைப் பார்ப்பதன் மூலம் அவரது உச்சப் படைப்பாற்றலின் வெளிப்பாடு எப் பொழுது நிகழ்கிறது என்பதை ஒரு பார்வையாளனால் உய்த்துணர முடிகிறது. அத்துடன் இந்த உச்ச வெளிப்பாட்டை ஏற்படுத்தி நிற்கும் ஓவியம் சார்ந்த அகபுறக் காரணிகளைப் பற்றிய ஆய்வும் ஒரு மகிழ்ச்சி தரும் அறிவியற் பயிற்சியாக அமைகின்றது.

இந்த அடிப்படையில் அமைந்த இந்தக் கண்காட்சி, ஓவியர் ரமணியின் அட்டைப்பட சித்திரங்களின் பல்பரிமாண இயல்புகளை வெளிப்படுத்திக் காட்டுகிறது. இவரது ஆரம்ப அட்டைப் படத்தில் இருந்து (1962 ஆம் ஆண்டு வரையப்பட்ட அட்டைப்படம்) ஆரம்பித்து அண்மைக்கால படைப்புக்கள் வரை காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.



**ஓவியர் மாற்குவின் வழித் தடத்தில்**

ஓவியர் மாற்குவின் வழித்தடத்தில் இயங்கிய விடுமுறைக்கால ஓவியக் கழகத்தின் வழித்தோன்றலான சிவசுப்பிரமணியம் (ரமணி) கொழும்பு அரச நுண்கலைக் கல்லூரியில் ஓவியத்துறை சார்ந்த படிப்பை மேற்கொண்டார்.

2016 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் சித்திரபாட தரம் 11 கலைத்திட்டத்தில் சிங்கள ஓவியரான சுமண திசாநாயக்கவின் சஞ்சிகை, அட்டைப்படச் சித்திரங்களுக்குச் சமனாக இவரது அட்டைப்படச் சித்திரங்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவரது அட்டைப்படச் சித்திரங்களின் பாணியைப் பற்றிக் குறிப்பிடுகிறவர்கள் யதார்த்த மற்றும் நவீன பாணியின் சமரசத்தைக் காட்டுகின்றது என்பர்.

அரச கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பாடசாலைப் புத்தகத்தின் அட்டைப் படத்தில் இருந்து பல்வேறு தரப்பினரின் புத்தங்களுக்கும் அட்டைப் படங்களை வரைந்துள்ளார். 1963 ஆம் ஆண்டு 'தவச' குழுமத்தின் 'இராதா' பத்திரிகைக்கு முதன் முதலில் விளக்கப் படங்களைவரைந்த இவர், அதனைத் தொடர்ந்து தினபதி, வீரகேசரி, மித்திரன் வாரமலர், தினகரன் போன்ற பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கும் சித்திரம்வரைந்துள்ளார்.



**50 ஆண்டுகளுக்கும் மேலாக**

கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கும் மேலாக புத்தக அட்டைப்படங்களை வரையும் ஓவியர் ரமணியின் அட்டைப் படங்களின் சிறப்பு, அந்த நூலுக்குரிய தெளிவான கருத்துச் சாரத்தை வெளிப்படுத்துவதோடு, கவர்ச்சிமிக்கதாக புத்தகத் தலைப்பை எழுதியிருப்பதும் ஆகும். அத்தோடு, யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் போர்க்காலப் பகுதியில் தரமான அச்சுப்பதித்தல், உபகரணங்கள் இல்லாத வேளையில் அப்போது நடைமுறையில் இருந்த அச்சுப் பதித்தல் முறைமைக்கு ஏற்ப தனி மற்றும் இரு வர்ணங்களிலும் அழகான அட்டைப்படங்களை வரைந்துள்ளார். ஓர் அட்டைப்படக் கலைஞருக்கு அச்சுச் சார்ந்த தொழில்நுட்ப அறிவு அவசியம் என்பதை இவரது படைப்புக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ஓவியர் ரமணியின் புத்தக அட்டை வடிவமைப்பின் பாணியை யதார்த்தம் சார்ந்தவை, நவவேட்கை வாதம் சார்ந்தவை என இரண்டாகப் பிரிக்க முடியும் என்றும், நவவேட்கை வாதம் சார்ந்த பாணியானது பிக்காசோ, சர்வடோர் டாலி போன்ற இருபதாம் நூற்றாண்டு ஓவியர்களின் படைப்புக்களின் காட்சிப் பண்பையும் அதேவேளை 1950 களில் இலங்கைக் கலையின் தேசிய அடையாளத்தைக் காட்டு தலையும், பாரம்பரியத்தை மீட்டெடுப் பதையும் நோக்கமாகக்கொண்டெழுந்த பாரம்பரிய அலங்காரம் சார் ஓவியப் பாணி மற்றும் கிராமிய வாழ்க்கை சார்ந்த கலைப் போக்கின் பண்பினையும் கலப்பாக அமைகிறது என இந்தக் கண்காட்சியின் சிறப்பிதழில் கலாநிதி தா. சனாதனஸ் குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் முத்து. இராதாகிருஷ்ணனினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தக் கண்காட்சியானது யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் எம்மவர்களின் படைப்புக்களை ஆவணப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்துதல் என்ற சிறப்பான பணியின் ஓர் அங்கமாக அமைகின்றது. இத்தகைய கண்காட்சிகள் பல்கலைக்கழகத்துக்குள் மட்டும் நின்று விடாது வெளியிலும் நடத்தப்பட வேண்டும் என்பது என்போன்றவர்களின் விருப்பாகும்.

> **ஓர் ஓவியரின் தொடர்ச்சியான படைப்புக்களைப் பார்ப்பதன் மூலம் அவரது உச்சப் படைப்பாற்றலின் வெளிப்பாடு எப்பொழுது நிகழ்கிறது என்பதை ஒரு பார்வையாளனால் உய்த்துணர முடிகிறது.**

*கட்டுரையாளர் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல படைப்புக்களை மக்களுக்குக் கொடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதுதான் சிறந்த விடயம்...

## மனம் திறக்கிறார் வாழ்நாள் சாதனையாளர் விருதைத் தனதாக்கிக்கொண்ட ஜேசுராசா

செவ்வி கண்டவர்கள்:-
கு.சக்தீனா, பி. கேமசியா

ஒரு மனிதன் தான் விரும்பும் துறையைத் தெரிவு செய்யும் பொழுது அத்துறையில் தனது எதிர்காலத்தை செதுக்குபவனாக மாறுகின்றான். இருந்த போதும் அந்தத்துறையில் ஆத்மார்த்தமான ஈடுபாடும் அதன் மீதான ஆர்வமும் அதிகரிக்கும்போதுதான் எந்தத் துறையிலும் வெற்றி காணமுடியும் எனத் தனது அனுபவ பாடத்தைச் சொல்கிறார் திரைப் படத் துறையில் வாழ்நாள் சாதனையாளர் விருதைத் தனதாக்கிக் கொண்ட ஜேசுராசா.

**சர்வதேச திரைப்பட விழா**

யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி அண்மையில் இடம்பெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் மேற்படி வாழ்நாள் சாதனையாளர்விருதைப்பெற்றுக்கொண்ட இவரை உதயன் சார்பில், அவரது இல்லத்தில் சந்தித்து பேசும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது.

இலக்கியத் துறையில் ஆர்வத்துடன் தனது கலைப்பயணத்தை தொடங்கியது முதல் திரைப்படத்துறையில் உள்நுழைவு என இன்று வரை கலைத்துறையில் தனது ஈடுபாடு மற்றும் பங்குபற்றுதல் தொடர்பில் தனது 73 வருட கடந்த காலம் குறித்து உரையாடினார். சாதனை உணர்வின் பூரிப்போடு தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

இலக்கியத்தில் நான் கொண்ட ஈடுபாடு வாசிப்பில் தான் ஆரம்பமாகியது. சென். ஜோன்ஸ் ஆண்கள் பாடசாலையில் கற்ற நான், பாடசாலைப் புத்தகங்கள் தவிர மாலை நேரங்களில் வாசிகசாலைக்குச் சென்று புத்தகங்கள், பத்திரிகைகள் என்பவற்றைத் தேடிப் படிப்பேன். அதிலும் முன்னைய காலத்தில் சிறுவர்களுக்கே உரித்தான பாணியில் வெளிவந்த அம்புலிமாமா, கண்ணன் மற்றும் முன்னோடிகள் போன்ற நூல்களை விரும்பிப் படிப்பேன்.

**வாசிப்புப் பழக்கம் எழுதத் தூண்டியது**

இவைதவிர நான் வளர்ந்து வரும் காலப் பகுதியில் மு.வரதராசன், சாண்டில்யன் , கல்கி ஆகியோரின் நாவல்கள் எனது வாசிப்பை ஊக்கப்படுத்தின. அவர்களின் நூல்கள்மூலம்வாசிப்புபழக்கம்மட்டுமன்றி அற விழுமியங்கள், இலட்சியக் கருத்துக்கள் என்பவற்றையும் கற்றுக் கொண்டேன். இந்த வாசிப்புப் பழக்கம் தான் நான் ஏதாவது எழுத வேண்டும், இந்த



எழுத்தாளர்களைப் போன்று நானும் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைஉண்டுபண்ணியது. இவரது படைப்புக்களான தூவானம், பதிவுகள், பனிமழை, அறியப்படாதவர்கள், நினைவான தொலைவும் இருப்பும், திரையும் அரங்கும் போன்றவை அவர் நினைத்ததை படைப்பாக்கியதற்கான சான்றுகள்.

வாசிப்புத்துறைகுறித்தஆர்வத்துக்கு நிகராக திரைப்படத்துறை மீதான ஆர்வமும் அவருக்கு இருந்துள்ளது. தமிழ்த் திரைப் படங்களில் முன்பு பிடிப்பு அதிகம் இருந்ததில்லை. தபால் திணைக்களத்தில் பணியாற்றிய அவர் 1967 ஆம் ஆண்டு காலப் பகுதி தனது ஆர்வத்தை சர்வதேச விருது பெற்ற படங்களை நேரம் செலவு செய்து பார்ப்பதில் ஈடுபடுத்திவிட்டிருந்தது - என்கிறார். தமிழிலும் நல்ல படங்கள் வரத் தொடங்கின. உதாரணமாக யாருக்காக அழுதான், அந்த நாள் ஞாபகம், அவள் அப்படித் தான், தண்ணீர்; தண்ணீர் போன்ற கருப் பொருள் வித்தியாசமான சில நல்ல படங்களையும் பார்த்தேன்.

1979ஆம் ஆண்டளவில் ஏ.ஜே.கனகரட்ணம் என்பவர் யாழ். திரைப்பட வட்டம் என்கின்ற ஓர் அமைப்பைத் தனது தலைமையின் கீழ் யாழ்ப்பாணத்திலே தொடங்கினார்.இதன் தொடர்ச்சியாக 1982ஆம் ஆண்டு வரைக்கும் ஒவ்வோர் மாதமும் ஒரு படம் என்கின்ற அடிப்படையிலே திரைப் படங்களை திரையிட்டனர். கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதராலயங்களில் போய் படங்களை எடுத்துவந்து 14 மில்லி மீற்றர் அளவான திரையில் காட்டுவோம். 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2006ஆம்ஆண்டுவரைக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சனி அல்லது ஞாயிறு தினங்களில் ஐரோப்பிய திரைப் படங்களைத் திரையிட்டோம்.

குறிப்பாக,தமிழில் வெளிவந்த ஒரு சிறுமி வேலைக்காரி ஆக்கப்படும் துன்பத்தை அழகாக சித்திரிக்கும் குட்டி, ஜானகி விஸ்வநாதனின் கனவு மெய்ப்பட வேண்டும், முஸ்லிம் மக்களின் வாழ்வை சித்திரிக்கும் நதிக்கரை மற்றும் சென்னையில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்வைச் சித்திரிக்கும் குக்கூ போன்ற திரைப்படங்கள் தமிழ் மக்களின் வித்தியாசமான வாழ்க்கை முறைமையை யதார்த்தமாக படம் பிடித்துக்காட்டின. இவ்வாறான படங்களை நாம் எமது பல்கலைக்கழக திரைப்படச் சங்கத்தில் காட்டுவோம். பின்பு அவை தொடர்பில் கலந்துரையாடுவோம். இதற்கு பேராசிரியர் சிவச் சந்திரன் ஒத்துழைப்பு வழங்கினார்-என்றார்.

**நல்லகதைப் பொருளோடு திரைப் படங்கள்**

இதனைத் தொடர்ந்து இப்பொழுது அண்மையில் வெளிவந்த தென்னிந்திய திரைப் படங்களான வாகை சூடவா, தென் மேற்கு பருவக்காற்று, அழகர்சாமியின் குதிரை, ராட்டினம் போன்றவையும் மிகவும் சிறப்பான நல்லகதைப்பொருளோடுவெளிவந்தபடைப்புக்களாக உள்ளன என்று தெரிவித்து, ஒரு கலைஞனாக நல்ல படைப்புக்களை ஏற்றுக் கொண்டு அவற்றை வரவேற்கும் மனப் பக்குவத்தை வெளிப்படுத்தினார்.

> இலக்கியத் துறையில் ஆர்வமுடன் தனது கலைப் பயணத்தை தொடங்கியது முதல் திரைப் படத்துறையில் உள்நுழைவு என இன்று வரை கலைத் துறையில் தனது ஈடுபாடு மற்றும் பங்குபற்றுதல் தொடர்பில் தன் கடந்த காலத்தை 73 வயதில் அன்போடு உரையாடினார். சாதனை உணர்வின் பூரிப்போடு பகிர்ந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற திரைப்பட விழா பற்றியும் அந்த விழாவில்அவர்பெற்றுக்கொண்ட வாழ்நாள் சாதனையாளர் விருதுஅவருக்குகொடுத்த உணர்வுகளின் அனுபவம் பற்றியும், கேட்டோம். அதற்கு புன்னகையுடன், நான் பெற்றுக் கொண்ட வாழ்நாள் சாதனையாளர் விருது என்பது எனது உழைப்புக்கும் முயற்சிக்கும் கிடைத்த வெகுமதி என்று தான் கூறலாம். விருது பெறுவது என்பதற்கு அப்பால் எவ்வளவு தூரம் நல்ல படைப்புக்களை மக்களுக்கு கொடுக்க முடியுமோ அதனைக் கொடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்பது தான் சிறந்த விடயம். நான் கொடுக்கும் படைப்புக்கள் மக்களிடம் நல்ல மாறுதல்களை கொண்டு வர வேண்டும் என்று கூறும் அவர் - நல்ல படைப்புக்களை கொடுத்திருக்கிறேன் என்ற மன நிறைவை பேச்சின் தொனியில் வெளிப்படுத்தினார்.

**தேர்ந்தெடுக்கும் துறையை நேசிக்க வேண்டும்**

அத்துடன் தன் அனுபவத்தின் பட்டறிவைக் கொண்டு எதிர்கால இளைஞர்களுக்கும் தன் கருத்தை சொல்லாமல் இருக்கவில்லை. எந்தத் துறையில் தன்னை ஒருவன் ஈடுபடுத்திக்கொள்கிறானோ, அந்தத்துறையை அவன் முதலில் நேசிக்க வேண்டும். இல்லையென்றால் தனக்குப் பொருத்தமான துறை எது என்பதைச் சரியான முறையில் தெரிவு செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு செய்கின்றபோது தான் அந்த விடயம் தொடர்பில் சரியான செயல் நேர்த்தியை கொடுக்க முடியும். ஒரே தடவையில் அனைத்தும் செம்மையாக அமையும் என நம்பி விடமுடியாது. பயிற்சியுடன் கூடிய ஆர்வம் தேவை. எமது முயற்சி வளர்ச்சியடையும் போதுதான், எமது துறையில் நாம் சிறந்த இடத்தைப் பிடிக்க முடியும் - என்கிறார்.

தன்னுடைய அனுபவத்தின் ஆழத்திலிருந்து முதுமையிலும் தன் மனதை அனுபவங்களாலும் படைப்புக்களாலும் இளமையாக வைத்திருந்தார் என்பதை அவருடனான சந்திப்பின் இறுதிக் கணங்களில் உணர்ந்து கொண்டோம். நாம் அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டோம். இருந்தபோதும் ஒரே தடவையில் அனைத்தும் செம்மையாகி விடாது. நன்றாக எழுதுபவன் தாராளமாக வாசிக்கும் பழக்கமுடையவன். எனக்குக் கிடைத்த விருது என்பது என் உழைப்பும் முயற்சியுமே என்ற அவரது வார்த்தைகள் எம்மைப் பின் தொடர்ந்தன.





## ‘உரைகல்’ நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி 4ஆம் அணியின் ஆசிரிய மாணவன் சண்முகநாதன் கஜேந்திரனின் ‘உரைகல்’ நூல் வெளியீட்டு விழா, அண்மையில் கனடா ஸ்காபரோ செல்வச்சந்நிதி ஆலய அரங்கத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட, யாழ்ப்பாண தேசிய கல்வியியற்கல்லூரி ஓய்வு நிலை தகைசார் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் நூலை வெளியிட்டு வைத்தார். யாழ்ப்பாண மக்களாலும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியாலும் பேணப்பட்டு வந்த கட்டுக்கோப்பான ஒழுக்க விழுமியங்களை இந்நூல் சிறப்பித்துக் கூறுகின்றது.

புலம்பெயர்ந்த தமிழராக இருந்தாலும், செல்லுமிடமெல்லாம் தமிழர் தம் ஒழுக்க விழுமியங்களின் சிறப்புக்களை எவரும் அறிந்து பேண வேண்டும் என்பதற்கு இணங்க தாய்மண்ணின் மணங்கமழ நூலாசிரியர் இந்த நூலை வெளியிட்டுள்ளமை சிறப்புக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.ப.வேந்தன்



# உள் மனக்கேடுகள் கொளுத்துவோம்

அண்மையில் புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு (iom) நிறுவனத்தின் அனுசரணையுடன் சங்கமி மகளிர் தொண்டு நிறுவன கலைஞர்களால் செயற்றிறன் அரங்கத்தினரின் நெறிப்படுத்தலில் கிராமங்கள் மற்றும் புறநகர்ப் பகுதிகள் எங்கும் பரவலாக நிகழ்த்தப்பட்டு வரும் நாடகம் ஒன்றைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

சர்வதேச பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிக்கும் செயல் வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்த நிகழ்வில், பெண்களுக்கெதிராக தற்போது இடம்பெற்றுவரும் சமூகப் பிறழ்வுகளை மிக நேர்த்தியாகவும், முகத்தில் அறையும் விதத்தில் இறுக்கமாகவும் மிக அழகாக சொல்லியுள்ளது இந்த நாடகம்.

'இது கூத்தல்ல, நிஜம்' எனும் தலைப்பில் ஈழத்தின் நாடகத்துறையில் நிகழ்காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்களில் ஒருவரான தே.தேவானந் அவர்களின் எழுத்துரு மற்றும் நெறியாள் கையில் உருவாக்கப்பட்ட இந்த நாடகத் தில் நடிகர்கள் தமது சிறப்பான நடிப்பால் தமது ஆற்றுகையை வழங்கியிருந் தார்கள்.

போரினால் ஒரு காலை இழந்த குடும்பத் தலைவன், தனது மனைவி மற்றும் பதின்ம வயது நிரம்பிய மகளுடன் மீள்குடியேறுவதிலிருந்து கதை நகர்ந்து செல்கிறது. இயலாத கணவனின் அன்றாடப் பணிகள், குடும்பத்தை நகர்த்திச் செல்வதற்காக வேலைக்குச் செல்லல், வேலை செய்யும் இடத்தில் எதிர்கொள்ளும் சிக்கல்கள், கணவனின் நண்பனின் நடத்தையால் பாதிக்கப்படும் மகள் என ஒரு குடும்பப் பெண்ணின் வலிகள், அவளுக்கான தேவைகள், சமூக அக்கறைகள் என பலவற்றை யதார்த்தமான காட்சிப் படிமங்களூடாக







வெளிக்கொணர்ந்திருந்தனர்.

கால் இல்லையென்பதால் கணவனுக்கு ஏற்படும் தாழ்வு மனப்பான்மையை, மனைவியை ஏவல் செய்விக்கும் காட்சியினூடாகவும், அனுதாபத்தின் மூலமாக அக்கறைமுலாம் பூசிக்கொண்டு நண்பனை போதைக்கு அடிமையாக்கி நண்பன் மகளை அடைய நினைப்பது என கருவின் காத்திரமான விடயங்களை நாகரிகமாக காட்சிப்படுத்தியிருந்தவிதம் சாதாரண நாடக பாணியிலிருந்து விலகி, ஓர் உலகத்தரத்திலான இடத்தில் வைத்து நோக்கக்கூடிய ஒன்றே எனலாம். இதற்கு எடுத்துக்காட்டாக, சிறுமியின் கையிலுள்ள பலூன்கள் ஒவ்வொன்றும் அவளுடைய ஆசை, கனவு, கற்பனை, என்பதாயும், அவை தந்தையின் நண்பனால் குத்திஉடைக்கப்படுவதாயும் காட்சிப்படுத்தியிருந்த விதம் ஒன்றே போதுமெனலாம்.

பெண்ணின் பலவீனங்களையும், அவளது சூழலையும்புரிந்துகொண்டுஅவளை பயன்படுத்த நினைக்கும் சில சமுதாய விலங்குகள், குடும்பப் பின்னணி பற்றி எவையுமே தெரிந்து கொள்ளாமல் பெண்களைப் பற்றி அவதூறு பேசும் ஊரவர்கள் சிறுமி என்றும் பாராமல் அவள் பெண் எனும் ஒரே காரணத்துக்காகவே அவளை அடைய நினைக்கும் கொடூரம் என சமூகத்தில் இடம்பெற்று வரும் பல பிறழ்வுகளை அற்புதமான காட்சியமைப்புக்களோடு அழகாகவும், கலைநேர்த்தியுடனும், முக்கியமாக முகத்தில் அறையாவண்ணம் நாசூக்காகவும் படிமங்களாக்கியிருந்தனர்.

கிராமம் ஒன்றில் இதனை மேடையேற்றும்போது, பல குழந்தைகள் தங்கள் வீடுகளின் அயலில் இவைகள் இடம்பெறுவதை அடையாளம் கண்டு கொண்டதாய் கூறினர். அத்தோடு அதற்கான தீர்வையும் அவர்கள் கூறிய போது ஆற்றுகையாளர்கள் தாம் எடுத்துக்கொண்ட செயலில் முழுமையடைந்து விட்டதாகவே எண்ணத் தோன்றியது.

சமூக நாடகத்தின் ஒரு பகுதியாக அல்லது சேர்வையாக பாஞ்சாலி சபதம் கூத்தைப் புகுத்தி அந்தக் கதையையும், நவீன சமூகக் கதையையும் ஒரே நேர்கோட்டில் சந்திக்க வைத்து பிரச்சினையின் முடிச்சை ஒன்றாக்கியிருந்த விதம் நவீன நாடகத்தின் போக்கின் புதிய முயற்சி என்றே கொள்ளலாம்.

> “பெண்ணுக்கெதிரானவன் முறையென்பது இதிகாச காலத்திலிருந்து இன்றைய காலம் வரைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கும் அவலத்தை பார்வையாளனுக்கு கூறுவதற்கு கதை சொல்லி நன்றாகவே உத்திகளைக் கையாண்டிருந்தார்.”

பெண்ணுக்கெதிரான வன்முறையென்பது இதிகாச காலத்திலிருந்து இன் றைய காலம் வரைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கும் அவலத்தை பார்வை யாளனுக்கு கூறுவதற்கு, கதை சொல்லி நன்றாகவே உத்திகளைக் கையாண்டிருந்தார்.

கதையின் நாயகியான ராணியை, துகிலுரியும் காட்சியில் தன்னைக் காப்பாற்றும்படி சுற்றியிருந்த எல்லோரையும் கெஞ்சும் அந்த துன்பியலில் அவளுடைய அவலக்குரலைக் கேட்டு பார்வையாளர்கள்(பெரியவர்கள்) மௌனமாய் இருந்தபோதிலும், முன்வரிசையில் இருந்த சிறுவர்கள் பலர் எழுந்து அவளைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்ட செயலில் அடுத்த தலைமுறையின் ஆரோக்கியப் போக்கை காணக்கூடியதாய் இருந்தது.

நாடக முடிவில் நாடகம் பற்றிய ஒரு கலந்துரையாடல் பார்வையாளர்களுக்கும் ஆற்றுகையாளனுக்கும் இடையே இடம்பெற்றபோது பலர் தமது வாழ்வியல் கோலத்தை கண்முன்னே கண்டதாய்க் கூறினர். பல மெய்ச்சம்பவங்களைக் கோர்த்து கலையாக்கி படைக்கப் படும் போது பார்வையாளன் பங்குதாரனாகவும், ஆற்றுகையாளன் அதுவாகவும் மாறி விடக்கூடிய சாத்தியங்கள் நிறையவே நிகழ்ந்து விடுகின்றன.

நாடக முடிவில் பெண்ணுக்கெதிரான வன், முறை எண்ணங்கள், தீய சிந்தனைகள், உள் மன அழுக்குகள் அனைத்தையும் கொடும்பாவி கட்டி எரிக்கும் காட்சியில் ஆண்பெண்பேதமின்றி அனைத்துப் பார்வையாளனும்பங்காளனாய் மாறிச் செயலில் ஈடுபட்டமை ஆரோக்கியமான பாதைக்கான அடியெடுத்து வைத்தலாகவேபட்டது.

நறுக்கெனும் வசனங்கள், அற்புதமான காட்சியமைப்பு, கதைக்குப் பலம் சேர்ப்பதான காட்சிப்பொருள், பட்டென்று ஒட்டிக்கொள்ளும் பின்னணி இசை, பாடல் யதார்த்தங்கள் பேசிய கதை நடை என அத்தனைகளும் மிக நேர்த்தியாக சாதாரண பார்வையாளனையும் சென்று சேரும்படி தயாரித்திருந்தமை மிக அருமை.

தேனுடன் மருந்தைக் கலந்து கொடுப்பது போல, கலையினூடாக கருத்தைச் சொன்ன விதம் பாராட்டுக்குரியதே.

தற்போது எமக்கு மத்தியில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சமூகப் பிறழ்வுகள், அவலங்கள் என்பவைகளை நாம் எந்த வித குற்றவுணர்ச்சியும் இல்லாமலே கடந்துபோய்க்கொண்டிருக்கிறோம். அது தெரிந்தோ தெரியாமலோ எமது அடுத்த தலைமுறையையும் பற்றிவிட்டுப்போய் விடுகிறது. இவை பற்றி எவருமே கவலைப்படுவதாய் இல்லை. இந்த நாடகத்தைப் பார்த்த ஒரு பெரியவர், “எங்களுக்கும் சமூகத்தில நடக்கிற அவலங்களைப் பார்க்க கோபம் வருகுதுதான்; கவலையாகக் கிடக்குது தான்; ஆனால், அதைக் கேட்கப்போனா எங்கட வீட்டுக்குமெல்லே பிரச்சினை வரும்”-என்றார்.

எத்தனை பெரிய அபத்தம் இது. ஆனாலும் நாம் இதையேதான் செய்து கொண்டு மிருக்கிறோம். இந்த சமூக ஒதுங்குதலே சமூகப் பிறழ்வுகளுக்கான காரணங்களாய் அமைந்து விடப் போகிறது. சமூகத்தை அரிக்கும் கறையான்களாய் இருக்கும் தீய எண்ணங்களை, அழுக்குகளை முதலில் கொடும்பாவி கட்டி எரித்தலில் நாம் தொடங்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அழுத்தும் நிஜங்கள்

## கலாபூசணம் நடராஜா இராமநாதனின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு

■ செ.மகேஷ்

அனுபவங்களும் பார்வைகளும் எண்ணங்களும் உணர்த்தும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கதை வடிக்கத்தூண்டும் காரணங்கள் நிறைகின்றன. கதை வடிப்பதற்கு வாசிப்பும் எழுத்தும் அவசியமென்பதை ஒவ்வொரு எழுத்தாளரும் உணர்ந்தும் உரைத்தும் வந்துள்ளனர். அத்தகைய நோக்கங்களில் பிறந்த சிறுகதைகளின் தொகுப்பாகவே கலாபூசணம் நடராஜா இராமநாதன் வெளியிட்டுள்ள 'அழுத்தும் நிஜங்கள்' சிறு கதைத் தொகுப்பையும் பார் க்கலாம். முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினர் இந்தநூலை வெளியிட்டுள்ளனர்.





"சுருங்கச் சொல்லுதலும், சுருக்கெனச் சொல்லுதலும் சிறுகதைகளை வாசிக்கத் தூண்டும் உத்திகளாகும். நீண்ட வர்ணனைகளுக்கு இங்கு இடமில்லை. சிறுகதைகள் குதிரைப் பந்தயம் போலத் தொடக்கமும் முடிவும் சுவைமிக்கனவாக இருத்தல் வேண்டும்" என்பார் செட்ஜ்விக் என்கிறார் மேழிக்குமரன். "புதினம் புளியமரம் என்றால், சிறுகதை தென்னமரம்" என்பார் ராஜாஜி. தரமான எழுத்துக்கள் பல நோபல் பரிசை வென்றிருக்கின்றன. கலாபூசணம் நடராஜா இராமநாதன் தொகுத்து அண்மையில் வெளியிட்டுள்ள அவரது சிறுகதைத் தொகுப்பான 'அழுத்தும் நிஜங்கள்' பதினான்கு சிறுகதைகளைக் கொண்டுள்ளது. நூலில் உள்ளடங்கியுள்ள சிறுகதைகள் பலவும் பல்வேறு வகைதேர்ந்த இலக்கியப் பார்வையாளர்களால் பரிசுக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்ற சிறுகதைகளோடு பத்திரிகைகளில் வெளிவந்து வாசகர்களின் கவனத்தை ஈர்த்த காலத்தைக் காட்டும் சம்பவங்களின் இலக்கியப் படையல்களைக் கொண்டதாகவும் தொகுப்புப் பரிமளிக்கிறது.

நூலுக்குத் தலைப்பாகி விளங்கும் சிறுகதைதான் "அழுத்தும் நிஜங்கள்." அதன் கருவாகி வடிவமைந்துள்ள ஆணாதிக்க சமூகத்தில் பெண்களின் மீது திணிக்கப்படும் பழைமைவாதிகளின் அழுத்தங்கள் என்பதைக் கதாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். அவ் வழுத்தங்கள் மாறா நிலையில் இன்னமும் பெண்களை வருத்தும் வகையை கூவும் பெட்டைக் கோழியை வெட்டிக் கொல்லும் கொடிய சடங்கின் மூலம் விரித்துரைத்திருக்கும் உத்தி சிறப்பாகவுள்ளது.

"வெளியில் தெரியா பிம்பம்" சிறுகதையின் கதாபாத்திரங்களான சிதம்பரி அப்புவும், சுரேனும் மனதைத் தொடும் வகையில் மரங்களை வளர்ப்போம் என்ற கருத்தை வலியுறுத்தி முன்னடப்பதைப் பார்க்கின்றோம். மரங்கள், செடிகள், கொடிகள் எல்லாமே உயிருள்ளவை என்பதும், அவைகளின் பரம்பலே மனித வாழ்க்கைக்கு ஆதாரமானவை என்பதும், இச்சிறுகதை மூலம் அழுத்தி உரைக்கப்படுகிறது. மரம் தறிக்கும் தொழிலைச் செய்யும் சிதம்பரியின் செய்கையில் மறைந்திருக்கும் "மரங்களை வளர்ப்போம்" என்ற செய்தி சுரேனின் மனதுக்குத் தரும் மகிழ்வு கதைக்கு உரமிடுகிறது.

வெள்ளைப்பூனை எனும் கதையில், மாமரத்தில் மகிழ்ந்து விளையாடிய இரண்டு அணில்களில் ஒன்றைப் பூனை பிடித்து உண்ணும் காட்சி விவரிக்கப்படுகிறது. ஒருபுறம் உயிர்காக்கத் துடிக்கும் அணிலின் வேதனையையும் மறுபுறம் தனது பசியைப் போக்கிடப் பிடித்த அணிலை உணவாக்கத்துடிக்கும் வெள்ளைப்பூனையின் வேகத்தையும் விவரிக்கின்றது. இங்கே கண்ட காட்சி எழுத்தாளரின் உணர்வுகளுக்குச் சோதனையானதால் துடிக்கும் அணிலைக் காப்பாற்ற அவர் பூனையைத் துரத்துவதைக் காணுகின்றோம்.

அந்தச் சம்பவம் இயற்கையின் இயல்பான நிகழ்வுகளில் ஒன்றெனினும் இந்தக் கதை மூலம் எழுத்தாளர் விவரிக்கும் காட்சி வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டுகிறது. இந்தத் தொகுப்பிலே உள்ள கதைகள்

> "சிறுகதைகளை வாசிக்கத் தூண்டும் உத்திகளாகும் நீண்ட வர்ணனைகளுக்கு இங்கு இடமில்லை. சிறுகதைகள் குதிரைப் பந்தயம் போலத் தொடக்கமும் முடிவும் சுவைமிக்கனவாக இருத்தல் வேண்டும்."

யாவுமே வாசிக்கத் தூண்டும் நல்ல தமிழ் வாக்கியத் தொடர்களால் உருவாகி வாசகர்களை நூலின் இறுதிவரை இழுத்துச் செல்லுகிறது. மனந்தொடும் வாழ்க்கை அனுபவங்கள் சிறுகதைகளாகித் தொகுப்புக்குச் சிறப்புச் சேர்க்கின்றன. நாடகம், கவிதை ஆகிய துறைகளிலும் ஈடுபாடு கொண்ட எழுத்தாளர் இராமநாதன் நடிகராகவும் பாடகராகவும் திகழ்பவர். ஈழத்து இலக்கிய உலகு, கலாபூசணம் நடராஜா இராமநாதனின் 'அழுத்தும் நிஜங்கள்' என்னும் இந்தக் கனதியான முதலாவது தொகுப்பை வாசித்து இரசித்துப் பேணும் என நம்பலாம்.

# இசை இறுவட்டு வெளியீடு

■ தமிழினியன்

யாழ்.மறைமாவட்ட புதிய ஆயர் பேரருள் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் ஆயர் நிலைத் திருப்பொழிவின் நினைவாக ஏ.ஆர்.விஜயகுமாரின் தயாரிப்பில் உருவான ஏ.ஆர்.வி. புரடக்சனின் 10ஆவது வெளியீடான "என் வாழ்வின் ஒளி நீ" எனும் இசை இறுவட்டு திருமறைக்கலா மன்றத்தினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றக் கலைத்தூதுக் கலையகத்தில் கடந்த 7 ஆம் திகதி திங்கட்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபர். அருட்திரு ஜே.ஏ. ஜேசுதாஸ் தலைமையில் மாலை 4 மணிக்கு இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக யாழ். மறை மாவட்ட புதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து சிறப்பித்திருந்தார்.



முதலாவது இறுவட்டை ஆசிரியர் ஏ.ஆர்.விஜயகுமார் யாழ்.மறை மாவட்ட புதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட்


ஆர்.ஜெயகாந்தனின் இறை வணக்கப் பாடலுடன் நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து வரவேற்புரையை பி.எக்ஸ். கலிஸ்சும் நிகழ்வுக்கான ஆசியுரையை அருட்தந்தை ஸ்ரீபன் அடிகளாரும் "என் வாழ்வின் ஒளி நீ" எனும் இசை இறுவட்டுக்கான வெளியீட் டுரையை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோண்சன் ராஜ்குமாரும் ஆற்றினார்கள். தொடர்ந்து இசை இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஞானப்பிரகாசம் ஆண்டகையிடம் சமர்ப்பித்தார். தொடர்ந்து "என் வாழ்வின் ஒளி நீ" எனும் இசை இறுவட்டிலுள்ள முதலாவது பாடல் ஒலிபரப்புச் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினரான ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் உரை இடம் பெற்றதைத் தொடர்ந்து ஆசிரியர் ஏ.ஆர்.விஜயகுமாரின் கடந்த ஒன்பது படைப்பு க்களில் தோள் நின்ற கலைஞர்களுக்கான நிகழ்வு கௌரவிப்பு இடம்பெற்றது.

அடுத்து திருமதி சுதர்ஷினி கரன்சனின் மாணவிகளின் நடனத்தைத் தொடர்ந்து, ஆசிரியர் அவர்களின் பதிலுரையும் "என் வாழ்வின் ஒளி நீ" என்னும் அவரது பத்தாவது இசை இறுவெட்டு வெளியீட்டு உருவாக்கத்துக்கு உதவிய கலைஞர்கள் அனைவரும் ஆயரினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். கே. செல்மர் எமிலின் நன்றியுரையைத் தொடர்ந்து மன்றக் கீதத்துடன் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

1431 - இங்கிலாந்தின் 6 ஆவது ஹென்றியரசர் பிரான்சின் அரசராக முடிசூடிக் கொண்டார்.
1598 - கொரியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நீண்ட எழுவருட "நொறியங்முனை" கடற்படை போரில், கொரியா தீர்க்கமான வெற்றி.
1631 - இத்தாலி வெசுவெஸியஸ் எரிமலை வெடிப்பில் 6 கிராமங்கள் அழிவு, 4,000 பேர் சாவு.
1707 - ஜப்பான் பிஜி எரிமலை வெடிப்பு- ஆகப்பிந்திய பதிவு.
1811 - மிசோரி மட்றிட் பகுதியில் புவியதிர்ச்சியால் பரந்த அளவிலான அழிவுகள்.
1835 - நியூயோர்க் நகரில் தீயால் 600 கட்டடங்கள் நாசம்.
1857 - நேபாளத்திலும், இத்தாலியிலும் புவியதிர்ச்சி.
1862 - நேபாள இராஜ்ஜியம் அதன் அரசமைப்பை ஏற்றுக்கொண்டது.
1884 - லியோபோல்ட் 2 ஆம் அரசரின் ஹொங்கோ - சுதந்திர நாடாக பெரிய பிரித்தானியாவால் அங்கீகாரம்.
1897 - உள்ளக எரியூட்டல் இயந்திரத்துடனான முதலாவது நீர்மூழ்கிக் கப்பல் இயக்கிக் காட்டப்பட்டது.
1903 - அமெரிக்காவில் முதன் முறையாக நியூயோர்க் நகர் மொகஸ்ரிக் அரங்கில் பெண் கட்டியக்காரர்
1907 - ஈயூஜின் எச் பரர் முதலாவது வானொலிப் பாடகர்
1913 - வாரம் ஒன்றுக்கு, 150 டொலர் சம்பளத்தில் திரைப் படத்துறையில் சார்ளி சப்ளின் இறங்கினார்.
1920 - 8.5 அளவிலான புவியதிர்ச்சியில் சீனாவின் ஹன்சு மாநிலத்தில் 200,000 பேர் சாவு என மதிப்பீடு
1939 - தென்னாபிரிக்கா எதிர் நியூசிலாந்து கிரிக்கெட்டில் 271 நிமிடங்களில் 38 பவுண்டரிகள் 2 சிக்ஸர் உட்பட 251 ஓட்டங்களை பிரமட்ன்ட் பெற்றுக் கொண்டார்.
1953 - வெள்ளை மாளிகையின் முதலாவது ஊடகவியலாளர் மாநாடு (ஐசனோவர் ஜனாதிபதி - 161 செய்தியாளர்கள்)
1962 - லோறன்ஸ் ஒப் அரேபியா திரையிடப்பட்டது.
1962 - அரசமைப்பு ஊடாக நேபாளம் இந்து இராஜ்ஜியமாக மாற்றம்.
1969 - சாவுத் தண்டனையை நீக்கி பிரித்தானியா நாடாளு மன்றம் தீர்மானம், 343 இல் 185 பேர் ஆதரவு.
1971 - பாகிஸ்தானிலிருந்து பிரிந்து பங்களாதேஷ் (கிழக்கு பாகிஸ்தான்) சுதந்திர நாடாகப் பிரகடனம்
1971 - டாக்காவில் நிலை கொண்டுள்ள இந்தியப் படையினரிடம், மேற்கு பாகிஸ்தானியப் படையினர் சரண்
1972 - பங்களாதேஷ் அரசமைப்பு நடைமுறையில்.
1976 - லைபீரியன் எண்ணெய்க் கப்பல் விபத்தில் 180,000 பீப்பாய் எண்ணெய் கடலில்.
1998- பாலைவன நரி நடவடிக்கை (OPERATION DESERT FOX) ஈராக்கிய நிலைகள் மீது, ஐக்கிய அமெரிக்காவும், ஐக்கிய இராஜ்ஜியமும் குண்டு வீச்சு.
1999 - மருத்துவர்கள் வேலை நிறுத்தம் சந்திரிகா அரசுக்கு நெருக்கடி அதிகரிப்பு.
2005 - விளையாட்டுத்துறை நிபுணரும், முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளரு மான நாட்டுப் பற்றாளர் ஏ.எஸ்.குணரத்தினம் தனது 68 ஆவது வயதில் கொழும்பில் காலமானார்.
2009 - 20 வருட கடூழியச் சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், பத்திரிகையாளர் திஸநாயக்கவின் மேன் முறையீட்டை அரசு ஆட்சேபிக்காதெனத் தெரிவிப்பு.
- தனித் தெலுங்கானா விவகாரம் ஆந்திர மாநிலத்தில் கொந்தளிப்பான நிலைமை.
2009 - யாழ். வருவதற்கு ஈரப்பெரிய குளம் சோதனைச் சாவடியில் 5 ஆயிரம் பயணிகள் காத்திருப்பு
2009 - இலங்கைப் போர்க்குற்றம் தொடர்பில் ஐ.நா. தனித்து விசாரணையென அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் பிலிப் ஜே.குரோலி தெரிவிப்பு.
2010 - வெளிநாட்டுப் பயணத்தை முடித்துத் திரும்பியவேளை விமான நிலையத்தில் வைத்து புலனாய்வுப் பிரிவினரால் ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
- தேங்காய் இறக்குமதிக்கு இலங்கை அரசு அனுமதி.
2012 - இந்தியாவில் பேருந்தில் பெண் ஒருவர் மீதான கூட்டு வன்புணர்வில் அந்தப் பெண் மரணமானார். இதனால் இந்தியாவிலும் உலகளாவிய ரீதியிலும் கொந்தளிப்பு.

## பாகுபாடு பார்க்கலாமா?



ஒரு காட்டில் ஒரு பஞ்ச வர்ணக்கிளியும், ஒரு காகமும் வாழ்ந்து வந்தன. கிளியோ எப்போது பார்த்தாலும் காகத்தைப் பார்த்து "கறுப்பா,கறுப்பா என அழைத்து அவமதித்தது. அதற்கு காகம் வருத்தத்துடன் " கடவுள் என்னைப் படைக்கும்போது மின்சாரம் இல்லாமல் இருட்டாக இருந்ததோ என்னவோ, அதற்கு நான் என்ன செய்ய? என்று சலித்துக்கொண்டது.

ஒருநாள், அந்தக் காட்டுக்கு வந்த ஒரு வேட்டைக்காரன் மரத்தின் மீது அமாந்திருந்த பல வர்ணங்களாலான கிளியை லபக் கென்று பிடித்து வீட்டுக்கு எடுத்துச் சென்று விட்டான். அச்சமயம் காகமோ நல்ல வேளை நான் கறுப்பு என்பதால் தப்பித்தேன் எனப் பெருமைப் பட்டது. இருந்தாலும், இத்தனை நாள் கிளியிடம் பழகி விட்டோமே என்று நினைத்து, வேட்டைக் காரனைத் தொடர்ந்து கண்காணித்து வந்தது.

கிளியை, வேட்டைக்காரன் கூண்டில் அடைத்து அக்கா சொல்லு.அண்ணா சொல்லு. என்று பாடம் நடத்திப் பாடாய்ப் படுத்திக்கொண்டிருந்தான். வசம்பைச் சுட்டுக் கிளியின் நாக்கில் வைத்து நாக்கைப்பேசுவதற்கு ஏற்றவாறு பதப்படுத்திக் கொண்டிருந்தான். கிளியோ வலி தாங்காமல் அலறியது. இதைப்பார்த்த காகம் மனம் வருத்தமுற்றது.

அன்று அமாவாசை நாள் .வேட்டைக்காரனின் மனைவி வாசல் சுவரில் படையல் சோறு வைத்து "கா!கா!கா! எனக்கூவி காகத்தை அழைத்தாள்.

அப்போது அங்கு வந்த காகம் , சிலிர்த்துக்கொண்டவாறு கிளியைப் பார்த்து சொன்னது.."கிளியே பார்த்தாயா? தன் மொழியில் உன்னைப்பேச வைக்க மனிதன் கூடு வைக்கிறான். ஆனால் , என்மொழியில் கூவிக் கூப்பிட்டு எனக்குச்சோறு வைக்கிறாள் அவனது மனைவி! என்று கூறிவிட்டு , காகம் சாப்பிட ஆரம்பித்தது.

பிறகு கொஞ்ச நேரம் கழித்து எவரும் இல்லாத நேரம் பார்த்து கிளியின்கூண்டைத் திறந்து விட்டு "நண்பா வெளியே வா" என அழைத்தது. கிளியும் வெளயேறி வந்தது. இரண்டும் காட்டை நோக்கிப் பறந்தன.

கிளி காகத்தை நோக்கி, "நண்பா! என்னை மன்னித்து விடு .அறியாமல் நிறப்பாகுபாடு பார்த்து உன்னை மனம் நோகச் செய்து விட்டேன். இனி மேல் இது போல் பாகுபாடு பார்க்க மாட்டேன்" என்று மனதார வருத்தப்பட்டது.

*எஸ்.நிலானி*
*தரம்-3*
*யா.ஏழாலை சைவ சன்மார்க்க வித்தி.*




## சைவப் பூனை



இராத்திரி நேரம் பூனை யொன்று
இரகசியமாக நடந்ததாம்,
பாத்திரங்களை உருட்டி அதிலே
பாலிருக் கான்னு பார்த்ததாம்.
குவளை யொன்றில் பாலும் இருக்கக்
குடிக்கும் ஆசை வந்ததாம்,
கவலை யின்றிக் குடிச்ச பூனையின்
களைப்புத் தீர்ந்து போனதாம்
அந்த நேரம் இரண்டு எலிகள்
அங்கு வந்து நின்றனவாம்
இந்தப் பூனை எம்மைத் தின்னும்
என்று பயந்து நொந்தனவாம்
எலியைப் பார்த்த பூனை உடனே
எட்டிப் பாய வில்லையாம்,
புலியைப் போன்ற மீசை நடுவே
புன்ன கைதான் வந்ததாம்!

உயிர்பிழைத்த எலிகள் ஓடி
உள்வ ளைக்குள் நுழைந்தனவாம்,
வயிறு வலிக்கச் சிரித்துக் கதையை
வக்கணை யாகச் சொன்னதாம்.
பூனை சைவம் ஆகி விட்ட
புதியவிவரம் கேட்டதும்
தேனைக் குடித்த நரிகள் போலத்
திரிந்து எலிகள் துள்ளினவாம்
அடுத்த நாளில் எலிகள் பூனை
அருகில் சென்று துணிவுடன்
துடுக்குத் தனமாய்க் குறும்பு செய்து

துன்புறுத்தப் பார்த்தனவாம்
கறுத்த பூனை பாய்ந்து நாலு
கறுத்த எலியைத் தின்றதாம்,
வருத்த மான மற்ற எலிகள்
வாடி ஓடிப் பிழைத்தனவாம்
அதனைக் கேட்ட மூத்த எலிகள்
அர்த்தத் தோடு சிரித்தனவாம்
பதறும் இளைய எலிகளுக்குப்
பக்கு வம்தான் கூறினவாம்
வயிறு முட்டத் தின்ற பூனை
வாழும் சைவ மாகவே,
வயிறு காய்ந்த பின்பு நம்மை
வளைத்துத் தின்னப் பாயுமே!

பு.சந்தோஷ்
தரம் 2
மல்லாகம் விசாலாட்சி வித்தி.

## பொது அறிவு

1. நண்டின் தலை எங்குள்ளது?
   -மார்பின் கீழ் அமைந்துள்ளது.
2. சுயஸ் கால்வாய் எப்போது திறக்கப் பட்டது?
   - 1869
3. விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் எங்கு உள்ளது?
   - தும்பா
4. இந்திய யானையின் சராசரி ஆயுள் எவ்வளவு ஆண்டுகள்?
   - 77 ஆண்டுகள்
5. நாளமில்லாச் சுரப்பிகளில் சுரக்கக்கூடியது என்ன?
   - ஹார்மோன்கள்
6. நத்தை எந்த வகையைச் சேர்ந்தது?
   - மெல்லுடலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.குமாரசாமி சர்மா



# யாழ்ப்பாணத்தில் கானமும் லயமும் சங்கமம்

இசையால் வசமாகா இதயம் எது என்பது எந்த அளவுக்கு உண்மையோ, அதுபோல, திருமதி சுகன்யா ராம்கோபால் குழுவினர் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நிகழ்த்திய லயராக சமர்ப்பணம் எனும் கானமும் லயமும் இசை நிகழ்வுகள் மிகவும் பிரமாதமாக அமைந்தன. தமிழ்நாடு கட வித்துவான் விநாயகராமின் முதற்றர கடவித் துவாம்சினி திருமதி சுகன்யா ராம் கோபால், முதன்முறையாக எமது ஈழ மண்ணில் கடங்கள் பத்து சங்கமிக்க, கடம் பிரதான வாத்தியமாகவும் ஏனைய மென்டலின், வயலின், மிருதங்கம், மோர்சிங் முதலான வாத்தியங்கள் பக்க வாத்தியங்களாகவும், பக்காவாக முழங்க இசை நிகழ்ச்சி வழங்கியமை வெகு அற்புதமாகச், சிறப்பாக அமைந்தது.

செல்வமஹால் மண்டபத்தில் கடந்த 07ஆம் திகதி திங்கள் மாலை 5 மணிக்கு பல நூற்றுக்கணக்கான மண்டபம் நிறைந்த இரசிகர்கள், ஆர்வலர்கள், கலைஞர்கள், இசைபயிலும் மாணவர்கள் எனப் பலதரப்பட்ட இசை இரசிகர்கள் கேட்டு மகிழும் வண்ணமாக, மென்டலின் சிவகுமாரின் லலித ஷேத்ரா இரண்டாம் ஆண்டு விழாவாக வி.சிவகுமாரால் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. செல்வமஹால் மண்டபம் வெகு அழகாக மின் ஒளிபரப்ப, ஒலி அமைப்பு சிறப்பானதாக அமைய, மிகவும் வசதிகள் பற்பல கொண்டதாக மேடை அமைப்பு, மிகவும் கவர்ச்சி கொண்ட னவாக இரசிகர்கள் அமர்ந்து இருந்து பார்ப் பதற்கு இருக்கைகள் மிக அற்புதமாக அமைக்கப்பட்டிருந்தமை பாராட்டக் கூடிய சிறப்பு அம்சங்களாகும். மேலும் செல்வமஹால் மண்டபம் முதல் தரமான மண்டபமாக யாழ்ப்பாணத்தின் நடுநாயகமாக அமைந்துள்ளதாலும், இசை நிகழ்வுகள் நடத்துவதற்குச் சிறந்த மண்டபமாக உள்ளதாலும் அதன் உரிமையாளர்கள் இவ்வாறான சிறந்த நிகழ்வுகளுக்குச் சலுகை அடிப்படையில் குறைந்த வாடகையில் மண்டபத்தை வழங்கினால் எம் மக்களுக்கு மிகவும் பிரயோசனமாக, வசதியாக அமையும்.

திருமதி சுகன்யா ராம்கோபாலின் லயராக சமர்ப்பணம் எனும் நிகழ்வு எமக்கு மிகவும் புதுமையானது. பொதுவாகக் கட வாத்தியம் ஒரு பக்கவாத்தியமாக வாசிப்பதை நாம் கண்டுள்ளோம். ஆனால் இங்கு அவர் அதனை கடங்கள் பத்துடன் நடுவில் அமர்ந்திருந்து பிரதான வாத்தியமாக கம்பீரமான தோற்றத்துடன் வெகு அழகுடன், அற்புதமாகச் சிறப்பாகக் கடங்கள் யாவற்றையும் கையாண்டு பொழிந்து, பொழிந்து, தூள்பறக்க இனிமையாக வாத்திய விருந்து அளித்தமை இசை இரசிகர்கள் யாவரையும் வெகுவாகக் கவர்ந்து மண்டபம் பலத்த கர ஓசையினால் பாராட்டி வாழ்த்தியமையைக் காணக்கூடியதாக அமைந்தது.

இந்த நிகழ்வில் மென்டலின் வி.சிவகுமார், வயலின் திருமதி பரத்வீனா மஞ்சுநாத், மிருதங்கம் நீ.ராமகிருஷ்ணன் மோர்சிங் திருமதி பாக்கியலக்ஷ்மி பாலகிருஷ்ணா என வெகு அற்புதமாகக் கவர்ச்சிகரமாக தமது வாத்தியக் கருவிகளை மெருகூட்டி வாசித்தமை கலா ரசிகர்களிடம் பெரும் பாராட்டைப் பெற்றது.

இசை நிகழ்வின் ஆரம்பத்திலேயே கலைஞர்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, பாராட்டிக் கௌரவிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும். திருமதி சுகன்யா ராம்கோபால் நிகழ்ச்சிகளை வழங்கும்போதே ராகங்கள் பற்றிக்கூறி, அவை பற்றிய சில விளக்கங்கள் தெரிவித்தமை பலருக்கும் இசையை இரசித்துப் பார்ப்பதற்கு மிகவும் உறுதுணையாக அமைந்தது. கம்பீரநாட்டை இராக மல்லாரியுடன் ஆரம்பித்த நிகழ்வு உடனேயே பலரையும் பரவசப்படுத்தி விட்டது. மிகவும் கம்பீரமாக விரைந்த நடையுடன் கணீர் என ஒலித்த கடஓசை பிரமாதமாக அமைந்தது.

> “தனி ஆவர்த்தன நிகழ்வு மிகவும் தூள் பறக்க அமைந்தது. மிருதங்க வித்துவான் மிருதங்கத்தை வெகுலாவகமாக விளாசித் தள்ளியமையும், கடவாத்திய கலைஞர் அதற்கும் மேலாக கடத்தைப் பொழிந்து வாசித்தமையும் வெகு அற்புத நிகழ்வாகும்.”

குந்தலவராளி ராகத்தில் திருமதி சுகன்யா, கடத்தை பேசுவதுபோன்று நாத ஒலி பேச வாசிக்க, அதனுடன் இணைந்து மிருதங்க வித்துவான் நீ.இராமகிருஷ்ணன் வெகுகச்சிதமாக வாசித்து பாராட்டுக்களைப் பெற்றனர். பின்னர் சாருகேசி இராகத்திலும், தொடர்ந்து வலர்ஜி இராக ஆலாபனை என்பவற்றை யாவும் மிகவும் இனிமையாக வாசித்து சிறப்புப் பெற்றனர். சுத்ததன் யாசி இராகத்தில் பிரதான கீர்த்தனை இராகம், தானம், பல்லவி என அற்புதமாக வாசித்து அதில் கற்பனா சுரங்கள் பற்பல செய்து அவ ற்றை மாறி மாறி கடம், மிருதங்கம், வயலின், மென்டலின் என்பன மீட்டியமை வெகுபிரமாதமாக அமைந்தன.

தனி ஆவர்த்தன நிகழ்வு மிகவும் தூள் பறக்க அமைந்தது. மிருதங்க வித்துவான் மிருதங்கத்தை வெகுலாவகமாக விளாசித் தள்ளியமையும், கடவாத்திய கலைஞர் அதற்கும் மேலாக கடத்தைப் பொழிந்து வாசித்தமையும், வெகு அற்புத நிகழ்வாகும். இந்த நிகழ்வை எமது மக்கள் இலவசமாகப் பார்க்கக் கிடைத்தமை மிகப்பெரிய பாக்கியமாகும். இந்த நிகழ்வை அமைத்துக் கொடுத்த மென்டலின் வி.சிவகுமார், லலித ஷேத்ராவினருக்கும், மண்டபத்தை இலவசமாக வழங்கிய செல்வமஹால் மண்டப உரிமையாளர்களுக்கும், இந்தியாவிலிருந்து வந்து இசைவிருந்தளித்த கலைஞர்கள் யாவருக்கும் எமது அன்பான நன்றிகள்.

கட்டுரையாளர், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்.





## வவுனியாவில் சர்வதேச மனித உரிமைகள் தினம்

சர்வதேச மனித உரிமைகள் தினம் நேற்று வவுனியாவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி ஆர்ப்பாட்டம் இடம்பெற்று தொடர்ந்து ஆர்ப்பாட்டப் பேரணி முத்தையா மண் டபத்தை நோக்கி நகர்ந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து ‘மூச்சிழுக்கும் ஆத்மா’ என்ற ஒளிப் பேழை வெளியிட்டு வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவநெறி இறுவட்டு

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சைவ ஆலோசனைச் சபையின் சிவநெறி இறுவட்டும் ‘கரகம்’ ஆவணப்படமும் அண்மையில் வெளியிடப்பட்டன. கரவெட்டிப் பிரதேசசெயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இவற்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் வெளியிட்டு வைக்க அருண் ரெக்ஸ் உரிமையாளர் த.அருட்செல்வன் பெற்றுக் கொண்டார்.

இவ் வெளியீட்டு விழாவில் இறுவட்டுக்களின் வெளியீட்டுரையை சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கமும், ஏற்புரையை ஓய்வுபெற்றஅதிபர் சிவசிதம்பரமும் நிகழ்த்தினர். ஆசியுரைகளை சுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன் தேவஸ்தான குருக்கள் முத்தமிழ் குருமணி சகலாகம சங்கிரகர் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள், கரவெட்டி கோயிற்கடவைசித்திவிநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ பூரண.சுதாகரக் குருக்கள் ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான வே.சிவயோகன் மற்றும் க.தர்மலிங்கம், பிரதேசகலைஞர்கள் உட்படபிரதேச செயலக ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (108)

# மாசறு பெண்ணே!

சி.ப.வேந்தன்

"சினிமா என்பது ஒரு கலை. யார் என்ன சொன்னாலும் தடுத்தாலும் இந்தத் துறையில் நான் தொடர்ந்து இயங்கிக்கொண்டே தான் இருப்பேன்" என்கிறார் இளம் பெண் இயக்குநராக அவதாரம் எடுத்திருக்கும் சோபிகா.






'மாசறு' குறும்படம் இவரது முதல் படைப்பு. போரினால் கணவனை இழந்து இரண்டு குழந்தைகளுடன் தனிமையில் சமூகத்தின் அத்தனை சவால்களுக்கும் முகம் கொடுத்து வாழ்வோடு போராடும் ஒரு பெண்ணின் கதையை காட்சிப் படிமங்களூடே விரித்துக் காட்டியிருக்கும் இந்த முதல் படைப்பின் மூலம் பலரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறார் இந்த இளம் பெண் படைப்பாளி.

கலைத்துறை சார்ந்து எந்தப்பின்புலமும் இல்லாது எப்படி உங்களால் இதில் பிரவேசிக்க முடிந்தது எனக் கேட்டதற்கு, 'ஆர்வம்தான்; அது மட்டும் இருந்தாலே போதும், எதையும் இங்கே சாதித்து விடலாம்' என நம்பிக்கை வார்த்தை தெளிக்கும் இவர் வளர்ந்து வரும் இளம் இயக்குநருக்கான வேல்ஸ் விருதையும் பெற்றிருக்கிறார்.

'உண்மையிலே சினிமா என்றால் என்னண்டு கூட எனக்குத் தெரியாது. அது எப்பிடி உருவாகும். அதுக்கு என்ன தேவை எண்டு எதுவுமே தெரியாது. ஆனா, அதிலை எனக்குச் சரியான விருப்பம், ஆர்வம் இருந்தது. அதை எங்க போனா தெரிஞ்சு கொள்ளலாம் எண்டும் எனக்குத் தெரியாது. அப்பதான் 'மனசுக்குள் ஒரு மழைச் சாரல்' எண்ட முழு நீளப் படத்தை நண்பர் வினோதன் செய்து கொண்டிருந்தார். அவரிட்ட உதவியாள ராய் போய் நிண்டு கொஞ்சம் கொஞ்சமா சினிமா பற்றியும், அதின்ர வடிவம் பற்றியும் ஓரளவு தெரிஞ்சு கொண்டன்' என்கிறார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

ஏற்கனவே நான் பள்ளிக்கூடத்தில படிக்கேக்கை கதை எழுதுறது, நிறைய கதைகளை வாசிக்கிறது எண்டு செய்திருக்கிறன். அந்த ஆர்வம் இங்கேயும் கதை எழுதுறது. அதை எப்பிடி திரைக் கதையா மாத்திறது அதை எப்படி காட்சி வடிவம் ஆக்கிறதெண்டு தேடித்தேடி அறிஞ்சு கொள்ளத் தொடங்கினன். அப்பத்தான் இந்த முழுநீளப் படத்தின் தயாரிப்பாளர் உதயரூபன் ஒரு குறும்படம் செய்யிறத்துக்கு எனக்கு வாய்ப்புத் தந்திருந்தார்.

இந்த வாய்ப்பு எனக்கு ஒரு வரமாகவும் சவாலாகவும் இருந்தது. இந்த படைப்பை உருவாக்கினதில எனக்கு ஆத்ம திருப்தியும்நிறையசந்தோசமும்கிடைச்சிருக்கு. இதுக்குப் பிறகு இன்னுமின்னும் நிறைய செய்ய வேணுமெண்ட எண்ணமும் நிறைய வந்திருக்கு. எனக்கூறும் சோபிகா ஈழத்தில் தற்போது உருவாகிக்கொண்டிருக்கும் பல சினிமாக்களின் மீது கோபமும் வெறுப்பும் கொள்வதாகக் கூறுகிறார்.

சினிமா என்பது நிறையப்பேர போய்ச் சேருகிற ஒரு ஊடகம். அதைப் படைக்கிற எல்லாருக்கும் சமூகப் பொறுப்பெண்டுறது கட்டாயம் வேணும். ஆனா, இங்க படம் எடுக்கிற ஆக்கள், நிறையப்பேர், ஏன் படம் எடுக்கிறம் எண்டு தெரியாமலேயே எடுக்கினம். இந்தியச் சினிமாபோல ஹீரோயிசமும் காதலும் குத்தாட்டமும் எண்டு எங்கட கலாசாரத்துக்கு ஒத்துவராத விசயங்களையும் இரவல் மொழிகளையும் பாவிச்சுப் படம் எடுக்கினம். இதுகளை இல்லாமற் செய்ய வேணும். எங்களிட்ட சொல்லுறத்துக்கு நிறையக் கதைகள் இருக்கு, எங்களுக்கெண்டு தனித்துவமான மொழி இருக்கு, கலாசாரம் இருக்கு, ஏன் அதையெல்லாம் விட்டுட்டு மற்ற வைகளச் செய்ய வேணும் என ஒரு கலை ஞருக்குரிய சமூக அக்கறையோடு பேசும் அவரது வார்த்தைகளில் நிஜமான கோபம் தெரிகின்றது.

மாசறு அழகான தலைப்பு வைத்திருக்கிறீர்களே! இந்தத் தலைப்பே உங்கள் படத்தின் கதையைச் சொல்லிவிடுகிறதே எனக்கேட்டதற்கு, 'ஓம்! உண்மைதான் அப்பிடித்தான் நாங்களும் நினைச்சனாங்கள்; ஆனா! நிறையப்பேர் இதுக்கென்ன அர்த்தம் என்டு எங்களிட்ட கேட்டவை. ஒரு பக்கம் வேதனையாய் இருந்தாலும் இதன் மூலமா எண்டாலும் கொஞ்சப் பேரிட்ட அந்த வார்த்தையை நாங்கள் கொண்டு போய்ச் சேத்திட்டம் எண்டு சந்தோசமாகவும் இருந்தது - என்றார் அவர்.

> "யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில பாட்டு, பரத நாட்டியம் என்றதுக்கு கொடுக்கிற ஆதரவு நாடகம் சினிமா எண்டதுகளுக்கு கொடுக்காயினம். அதை ஒரு பிழையான விடயமாகவே பார்க்கினம்."

சினிமா வரலாற்றில பெண்கள் இயக்குநராக ஆவதென்பது மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகிறது. அந்த வகையில இங்கே சினிமாவில ஒரு இயக்குநராக எப்படி உங்களால் தொழிற்பட முடியுது. சவால்கள் எப்பிடியிருக்கு எனக் கேட்ட தற்கு "ஓம் பிரச்சினை இல்லாமலில்லை. எனக்கு வீட்டில நல்ல ஆதரவு கிடைச்சாலும், அக்கம் பக்கத்திலை இதைப் பிரச்சினையாகத்தான் பார்த்தவை. சினிமா எண்டுறது ஒரு கலை; எவர் என்ன சொன்னாலும் தடுத்தாலும் இந்தத் துறையில் தொடர்ந்து இயங்கிக் கொண்டுதான் இருப்பன். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில பாட்டு, பரதநாட்டியம் என்றதுக்கு குடுக்கிற ஆதரவு, நாடகம் சினிமா எண்டதுகளுக்கு கொடுக்காயினம். அதை ஒரு பிழையான விடசயமாவே பாக்கினம். ஒண்டு ரெண்டு பேர் விடுற பிழையலால ஒட்டுமொத்தமா படமெடுக்கிற எல்லாரையும் பிழையாய்க் கதைக்கினம். இந்த மனநிலை மாற வேணும். இதுவும் ஒரு உன்னதமான கலை எண்டதை எல்லாரும் விளங்கிக் கொள்ள வேணும். அதுக்கு கலைஞர்களும் ஒழுக்கத்தைக் கடைப் பிடிக்கவேணும். அதே நேரம் மக்களும் இதுக்கு சரியான ஆதரவு தர வேணும். இப்படிச் செய்தா எங்களாலயும் எங்கட தனித்துவ அடையாளங்களைக் கொண்டு உலகத் தரத்திலான நல்ல சினிமாக் களை எடுக்கலாம் என ஆவேசப்படும் சோபிகாவின் கண்களில் ஈழத்துச் தமிழ்ச் சினிமாவின் தூரத்துக் கனவு தெரிகிறது.







தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் பேராசிரியர் க. கைலாசபதியின் 33 ஆவது நினைவு ஆய்வரங்கும் கலை நிகழ்ச்சிகளும் கடந்த 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது. இதில் மாலையில் இடம்பெற்ற கலைநிகழ்வில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர் பேராசிரியர் சி. தில்லைநாதன் தலைமையுரை ஆற்றுவதையும், நாடகம் மற்றும் பாடல்கள் நிகழ்வுகள் இடம்பெறுவதையும், கவிஞர் சடகோபன், கவிஞர் இராகலை பன்னீர், மாத்தளை ஜெஸீமா ஹமீட், த.வி.ரெங்கன், மு. மயூரன், தி. சுகந்தன் ஆகியோர் கவியுரைப்பதையும் பார்வையாளரில் ஒரு பகுதியினரையும் காணலாம்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைப்பூ கட்லெட்




நறுக்கிய வாழைப்பூ – 1 கப்
வெங்காயம் – 1 கப்
ரஸ்க்தூள் – 1 கப்
நறுக்கிய இஞ்சி 1 கரண்டி
எண்ணெய் 250 கிராம்
நறுக்கிய கொத்தமல்லி, உப்பு சிறிது

**செய்முறை:**
வாழைப்பூ, வெங்காயத்தைத் தனித்தனியாக வதக்கி, அதனுடன் ரஸ்க் தூள், நறுக்கிய இஞ்சி, கொத்தமல்லி, உப்புச் சேர்த்துப் பிசைந்து, கட்லெட்களாக தட்டி, காய்ந்த எண்ணெயில் போட்டு பொரித்தெடுக்கவும்.

# கிரைண்டர் வாங்கும் போது...



கிரைண்டரின் சில வகைகளில் மூடியின் அழுத்தத்தில்தான் மா அரைபடும் என்பதால், மூடி சரியாக, இறுக்கமாக இருக்கிறதா எனப் பார்த்து வாங்கவும்.
கிரைண்டர் வைப்பதற்கு சமையலறையில் மேடை வசதியில்லை எனில், சந்தையில் கிடைக்கும் அதற்கென்ற பிரத்தியேக ஸ்ராண்டுகளை வாங்கிப் பயன்படுத்தலாம். கையாள்வது சுலபமாக இருக்கும்.
கிரைண்டருடன் கோதுமை மா பிசைய, தேங்காய் துருவ தரப்படும் அட்டாச்மென்ட்களும் வாங்குபவர்கள், அந்த மொடலைத் தெரிவு செய்து வாங்கவும்.
டிரம்மை தனியாக வெளியே எடுக்கும் வகையிலான கிரைண்டரில், டிரம் வைக்கும் ஸ்ராண்ரில் புஷ் சரியாக இருக்கிறதா என்று ஒவ்வொரு முறையும் செக் செய்து கொள்ளவும்.
கிரைண்டருக்கென குறிப்பிடப்பட்டுள்ள கொள்ளளவுக்கு அதிகமாக அல்லது குறைவாக தானியங்கள் போட்டு அரைத்தால், தேய்மானம் ஏற்படும்.



எப்போதும் கிரைண்டரில் உளுந்து அரைத்த பின்னரே அரிசியை அரைக்கவும். அப்போதுதான் வழு வழுப்பு நீங்கிச் சுத்தம் செய்ய எளிதாக இருக்கும்.
கிரைண்டரின் குழவிக்கல் தேய்ந்துவிட்டால் மா அரைக்க நேரமாகும் என்பதால், புதிதாக கற்களை மாற்றிக் கொள்ளவும்.
கிரைண்டரில் உள்ள தள்ளுபலகை தளர்வாக இருந்தால், மா சரியாக அரைபடாது என்பதால், இறுக்கமாக மாட்டப்பட்டிருக்கிறதா என்று அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ளவும்.
கிரைண்டர் குழவி மாட்டும் ஸ்ராண்டை உலர்ந்த துணியால் துடைத்துவிட்டால் துருப்பிடிக்காமல் இருக்கும்.
மா தள்ளும் பலகை டிரம்மில் படாதபடியும், கல்லில் படாதபடியும் சிறிது இடைவெளி விட்டு இருந்தால் பலகை விரைவில் தேய்வதைத் தவிர்க்கலாம்.
ஒவ்வொரு முறை கிரைண்டர் குழவிக் கல்லை கழுவும் போதும், அதன் கைப்பிடியில் உள்ள வாரின் உள்ளே தண்ணீர் சென்றுவிடாதபடி கழுவ வேண்டியது அவசியம்.
கிரைண்டர் ஆட்டும்போது சத்தம் அதிகம் வந்தால், பேரிங் பழுதடைந்திருக்கும். உடனடியாக பேரிங்கை மாற்றவும்.
கிரைண்டரில் உள்ள பொலிஷ் மங்காமல் இருக்க சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். வாரம் ஒரு முறை தேங்காய் எண்ணெய் கொண்டு துணியால் துடைக்கலாம்.
கிரைண்டருக்கும் சுவருக்கும் சிறிதளவு இடைவெளி இருக்க வேண்டும். அந்த அறையில் தடை இணைப்பு கொடுக்கப்பட வேண்டும்.
கிரைண்டர் பயன்பாட்டில் இருக்கும் போது, அதிக மின்சாரம் இழுக்கக் கூடிய மற்ற மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 80 | 120 | 120 | 100 | 120 | 120 |
| கத்தரி | 150 | 170 | 150 | 160 | 140 | 140 | 90–100 |
| கரட் | 200 | 180 | 280 –320 | 180 | 300 | 320 | 270 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 40 | 35 |
| பயிற்றை | 250 | 200 | 260–320 | 240 | 240 | 240 | 250 |
| பாகல் | 300 | 320 | 300 | 300 | 240 | 240 | 350 |
| கருணைக்கிழங்கு | 80 | 90 | 80 | 80 | 80 | 80 | 90 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 100 | 100 | 120 | 120 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 100 | 140 | 120 | 120 | 120 |
| பூசணி | 40 | 60 | 50 | 50 | 40 | 40 | 40 |
| தக்காளி | 200 | 240 | 200 | 200 | 220 | 220 | 220 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 | 50 | 50 | 40–50 |
| கீரை | 40 | 40 | 50 | 40 | 40 | 40 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | – | 30 | 30 | 15 |
| பச்சை மிளகாய் | 800 | 600 | 800 | 700 | 500 | 500 | 800 |
| புடோல் | 120 | 120 | 100 | 120 | 80 | 80 | 120 |
| கோவா | 100 | 160 | 80 | 140 | 140 | 140 | 170 |
| வெண்டி | 140 | 160 | 140 | .120 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 300 | 280 | 280 | 240 | 240 | 240 | 220 |
| லீக்ஸ் | 200 | 160 | 180 | 180 | 180 | 180 | 160 |
| தேங்காய் | 50 | 45 | 50 | 50–60 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 80–120 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 160 | 200 | 200 | 90 |
| வல்லாரை | 30 | 30 | 10 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 300 | 320 | 350 | 320 | 400 | 400 | 300 |
| இராசவள்ளி | 250 | 180 | 250 | – | 180 | 180 | 200 |

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 700 | 500 |
| நண்டு | 250 | 400 | 300 | 300 | 300 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 600 | - |
| பாரை | 450 | 500 | - | 500 | 450 | 400 |
| சுறா | 500 | 500 | - | 600 | 550 | - |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 350 | 400 |
| விளை | 650 | 400 | 400 | 450 | 400 | 400 |
| முரல் | 300 | 350 | 300 | 300 | 350 | - |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 300 | 250 |
| கிழாக்கன் | 450 | 800 | 300 | 350 | - | - |
| ஓரா | 350 | 400 | 300 | 350 | - | - |
| திரளி | 250 | 250 | 100 | 300 | 100 | 300 |
| நகரை | 200 | 250 | 100 | 300 | 150 | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 120 | 100 | - |
| ஒட்டி | 250 | 200 | 200 | 300 | - | - |
| திருக்கை | 150 | 300 | - | 300 | 200 | 100 |
| பாலை | 400 | 200 | - | 300 | 250 | - |
| வாளை | 100 | 100 | 200 | 300 | 400 | 200 |
| கொய் | 100 | 150 | 80 | 100 | 150 | |
| மதனம் | 150 | 200 | 300 | 200 | 250 | 200 |

## நாளை

மார்கழி -01
வியாழக்கிழமை 17.12.2015
திதி: ஷஷ்டி மு.ப. 11.09
நட்சத்திரம்: [illegible]
இராகுகாலம்: 01.52 - 03.22 வரை
சுபநேரம்: 07.52 - 09.22
திருவெம்பாவை பூஜாரம்பம்

## இது புதுசு



# யாழுக்கு வந்துவிட்டது பேபி கரியர்

குழந்தையைக் கையில் வைத்துக்கொண்டே வேலை செய்வதற்கான கரியர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. "பேபி கரியர்" என்று அழைக்கப்படும் இதை, குழந்தைக்கு ஒரு வயது வரும் வரைக்கும் பாவிக்க முடியும். அழுக்கானால் தோய்த்துப் பாவிக்கலாம், இது குழந்தை அமரக் கூடிய விதத்தில் சொகுசாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் வரவு யாழுக்கு புதியது. இது 1000 - 1200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆயிரம் பெண்களுக்கு உதவிய நயன்தாரா!

தமிழகத்தில் அண்மையில் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தொழிலதிபர்கள் பெரும் உதவிகளைச் செய்து வரும் நிலையில், சினிமாக் கலைஞர்கள் பலரும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றனர்.

ஏற்கெனவே அதிக கலைஞர்கள் தமிழக முதலமைச்சரின் வெள்ள நிவாரண நிதிக்காக லட்சக்கணக்கில் பண உதவிகளைச் செய்துள்ள நிலையில், நடிகை நயன்தாரா, குறிப்பாக ஆயிரம் பெண்களுக்குப் பெரிதும் உதவக்கூடிய வகையிலான உடைகள் மற்றும் சுகாதாரம் சம்பந்தப்பட்ட பொருள்களை அனுப்பி உள்ளார்.

## பேஸ் புக்கில் பிடித்தவை...

இப்ப சொல்லுங்கடா, விவசாயம் பார்க்க வருவீங்களா? வரமாட்டீர்களா?



பெரியோர்களே... தாய்மார்களே..! முக்கிய அறிவிப்பு. காணவில்லை.. தமிழகத்தில் பெருமழையால் கடந்த ஒரு வாரமாக



சாதியையும், மதத்தையும் காணவில்லை.. இதை யாரும் தேடித்தர வேண்டாம் என அன்போடு கேட்டுக் கொள்கிறோம்...!

பிள்ளை போனால் இன்னொன்னு வெத்துக்கலாம் டிவி போனா மானாட மயிலாட பார்க்க முடியுமா? அதுக்கு தான் இந்த சேட்டி.





**சித்து..!!** @chitram_twitts · Dec 7
இணையத்தில் வெறுக்கும் முதல் **தமிழ்** வார்த்தை "என் மேல நம்பிக்கை இல்லையா"



**திருப்பதி** @c8e3c3a719d944a · Dec 1
ஒரு காலத்தில் நல்லா ஆங்கிலம் பேசறவங்கள வியந்து பார்த்து, இப்ப நல்லா **தமிழ்** பேசறவங்கள வியந்து பார்க்கற நிலைமைக்கு ஆளாகிட்டோம் #தமிழ்



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எதிர்கால நலனைக் கருத்தில் கொள்வீர்கள். சமயோசித செயலால், தொழில், வியாபாரம் சார்ந்த சிரமங்கள் விலகும். உபரி வருமானம் கிடைக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**இடபம்:** உதாசீனமாகப் பேசுபவரிடம் இருந்து விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில், குளறுபடி சரியாகும். அளவான பணவரவு கிடைக்கும். அதே நேரம் ஆடம்பர எண்ணத்தால், செலவு வரம்பு மீறும். கவனம்.

**மிதுனம்:** உறவினர்களுக்கு உதவுவதால் குடும்பத்தில் அதிருப்தி வரலாம். தொழில், வியாபாரத்தில், வேலைப்பளு அதிகமாக இருக்கும். குடும்பச் செலவுகளுக்காக பணத் தேவை அதிகரிக்கும்.

**கடகம்:** வேலைகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம், அபரிமிதமான வளர்ச்சி அடையும். கொடுக்கல், வாங்கல் முன்னேற்றம் பெறும். குடும்பத்தினர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**சிங்கம்:** உங்களின்செயலுக்குப்பாராட்டுக்கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். வெகுநாள்விரும்பியபொருளைவாங்குவீர்கள். குடும்பத்தில் சுப மங்கல நிகழ்வு உருவாகும்.

**கன்னி:** திட்டமிட்ட பணி நிறைவேற அதிக உழைப்பு அவசியம். தொழில், வியாபாரத்தில், அளவான பணவரவு கிடைக்கும். போக்குவரத்தில் கவனமாக இருக்கவும். பணியாளர்கள் சலுகைகளைப் பெற பொறுமை காக்க வேண்டும்.

**துலாம்:** குடும்பச் சூழ்நிலையை உணர்ந்து, செலவழியுங்கள். தொழில், வியாபார நடைமுறை, மந்தகதியில் இயங்கும். சேமிப்புப் பணத்தைச் செலவுக்கு எடுக்க வேண்டி வரும். கண்களின் பாதுகாப்பில் கவனம் வேண்டும்.

**விருச்சிகம்:** நண்பர்களின் உதவியால் உற்சாகம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில், விற்பனை இலக்கு நிறைவேறும். உபரி பண வரவு கிடைக்கும். உறவினர் இல்ல சுப நிகழ்வுகளில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** எவருடனும் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், பணிச்சுமை அதிகரிக்கும். சுமாரான பணவரவு கிடைக்கும். கடனில் ஒருபகுதியைச் செலுத்துவீர்கள். உடல் நிலையில் கவனம் தேவை.

**மகரம்:** தாமதமான பணியைத் திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டு. பணவரவு திருப்திகரமான அளவில் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்களை உபசரிப்பீர்கள்.

**கும்பம்:** நண்பர்களுக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபார நடைமுறை, சராசரி அளவில் இருக்கும். சேமிப்புப் பணம், அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படும். பெண்கள், நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**மீனம்:** உங்கள் செயலில், உண்மை அன்பின் தன்மை பிரதிபலிக்கும். தொழில், வியாபாரத்தில், அதிக மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை அளவு செழிக்கும். உறவினர்களின் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி வளரும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 1 | |
| 4 | 8 | | 1 | 5 | | 7 | | |
| 6 | | | 4 | | | | | |
| | 1 | | | | | 6 | 2 | |
| | | | 2 | | | | | |
| | | 5 | | 7 | 3 | | | |
| 1 | | 9 | 5 | 8 | | | | |
| 3 | 4 | | | | | | 8 | |
| | | | 7 | | | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 7 | 5 | 8 | 6 | 4 | 9 | 3 |
| 5 | 9 | 6 | 4 | 3 | 1 | 2 | 8 | 7 |
| 3 | 8 | 4 | 7 | 9 | 2 | 6 | 1 | 5 |
| 8 | 3 | 5 | 9 | 1 | 4 | 7 | 2 | 6 |
| 2 | 7 | 9 | 3 | 6 | 5 | 1 | 4 | 8 |
| 4 | 6 | 1 | 8 | 2 | 7 | 3 | 5 | 9 |
| 7 | 1 | 2 | 6 | 5 | 8 | 9 | 3 | 4 |
| 6 | 5 | 3 | 2 | 4 | 9 | 8 | 7 | 1 |
| 9 | 4 | 8 | 1 | 7 | 3 | 5 | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்[illegible] ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். [illegible] நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




## வாழ்வை அறிந்தவன்

வாழ்வை அறிந்தவன் சம்சாரி
வாழப் பயந்தவன் சந்நியாசி
கண்ணீர் வடிப்பவன் மூடனடா
காலத்தை வென்றவன் வீரனடா
எடுத்ததற்கெல்லாம்
பயந்தவன் முன்னே
எலியும் புலியாகும் ! – கொடுமை
எவர் செய்தாலும்
எதிர்ப்பவன் முன்னே
புலியும் எலியாகும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழம்தான்...

போராடியபோது அதற்குப் பதிலீடாகத்தான் மாகாணசபை முறைமை தரப்பட்டது என்று குறிப்பிட்டார். இதற்குப் பதிலளித்துக் கருத்துத் தெரிவிக்கையிலும், வடக்கு மாகாண வரவு - செலவுத் திட்டக் கொள்கை உரை மீது கருத்துத் தெரிவிக்கையிலுமே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் சமஷ்டிக்காகப் போராடவில்லை. தமிழர்களின் மிதவாத அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழத்தைத் தீர்வாக முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்டது. அதன்போது அதற்கு ஆதரவாக மக்கள் பெருவாரியாக வாக்களித்தனர். இந்தக் கொள்கையிலிருந்து பல இயக்கங்கள் தோன்றிப் போராட்டம் நடத்தின.

இருப்பினும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மாத்திரம்தான் இறுதி வரை - எடுத்த கொள்கையிலிருந்து எள்ளவும் பிசகாது போராடியது. சில படுபாவிகள் செய்த வேலையினால் அந்த அமைப்பின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டன.

தமிழீழம்தான் எங்கள் மக்களுக்கான தீர்வு. அந்தத் தீர்வின் ஊடாகத்தான் எங்கள் மக்களுக்கு விடிவு கிடைக்கும் - என்றார்.

(த-5-ரி5)

## ஷனோனுக்கும்...

இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஆலோசகர் தோமஸ் ஷனோனுக்கும் அப்பம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுத்ததைத் தொடர்ந்து அவரது அமைச்சரவையில் சுகாதார அமைச்சராக இருந்தவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தவருமான மைத்திரிபால சிறிசேன அப்பத்தை உண்டுவிட்டே ஆட்சியிலிருந்து வெளிவந்து பொது வேட்பாளராகத் தன்னைப் பிரகடனப்படுத்தியிருந்தார்.

அந்தவகையில் அப்பம் இலங்கையின் ஆட்சிமாற்றத்துடன் தொடர்புடைய உணவு அடையாளமாக இராஜதந்திர வட்டாரத்தில் பிரபலமானது. இந்தநிலையில் இவ்வருடம் ஜனவரி 8ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையடுத்து ஜனவரி இறுதியில் வருகை தந்த இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியவிவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நிஷாபிஸ்வால் தொடக்கம் இங்கு வருகைதந்த அனைத்து அமெரிக்க இராஜதந்திரிகளும் அப்பம் உண்பதைத் தமது நிகழ்ச்சி நிரல்களில் உட்படுத்திக் கொண்ட நிலையில் தற்போது வருகை தந்துள்ள அமெரிக்காவின் உயர் அதிகாரி ஷனோனும் இராஜதந்திர முக்கியத்துவம் மிக்க அப்பத்தை நேற்றுக் காலை உண்டுள்ளார். (த-சி)

## 15 அரசியல்

நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் தொடர்பான கட்டளை ஒன்று கடந்த செப்ரெம்பரில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து வரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அது கிடைக்கவில்லை. இந்த நிலையில் இன்று அந்த வழக்கு விசாரணைக்கு வருகின்றது. இன்று அவர்கள் விடுதலை செய்யப்படுவார்களா என்பது குறித்து உறுதியான தகவல் எதுவுமில்லை.

(த-4)

## மரண அறிவித்தல்கள்

### முருகர் (கன்னர்) அப்புத்துரை



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் அளவெட்டியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் (கன்னர்) அப்புத்துரை நேற்று (15.12.2015) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்.
077 662 2078 , 021 205 9628
கணேஸ்வரம், கருகப்புலம்,
அளவெட்டி.

### கந்தையா பரமானந்தம்

(முன்னாள் இ.போ.ச சாலைப் பரிசோதகர் - வவுனியா)



கலட்டி, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் காலையடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமானந்தம் 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ராசலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற யசோதா மற்றும் விஜிதா, வாகீசன், கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் சுகன்யா, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனும் அனிஷா, அபினாஷ், மிதுஷா, மைத்திரி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம், புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம் மற்றும் பரமேஸ்வரி, மனோகரன் காலஞ்சென்ற திருச்செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயலட்சுமி காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் ராசலட்சுமி, சந்தானலட்சுமி, கலாலட்சுமி, திருக்கேதீஸ்வரன், கோணேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2015) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சம்பில்த்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காலையடி,
பண்டத்தரிப்பு.

(66897)
(14,16)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திராணி திருநீலகண்டன்



புங்குடுதீவு, 5 ஆம் வட்டாரத்தை, பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி, விதானையார் வீதி, 2 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்தி ராணி திருநீலகண்டன் (13.12. 2015) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை- கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் திருநீலகண்டனின் (திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்) பாசமிகு மனைவியும் பாலேந்திரன் (ஜேர்மனி), பாலரூபன் (ஜேர்மனி), சுலோசனா, காலஞ்சென்ற பாலசபேசன் மற்றும் பாலகுகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுதாயினி (ஜேர்மனி), கார்த்திகா (ஜேர்மனி), சிவகாந்தன்(வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் நல்லூர்), மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிரதன், ஆகாஷ், கம்ஷிதா, கயூஷா, கவிஷா, திலக்ஷிகன்(யாழ் இந்துக்கல்லூரி), பானுஷியன்(சென்ஜோன்ஸ் கல்லூரி), யான்சிகா, அபிகிருஷ்ணா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், நல்லம்மா, தங்கம்மா, காலஞ்சென்ற பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் யோகம்மா(நோர்வே), இராசலிங்கம், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் மார்க்கண்டு (ஜேர்மனி), ஆனந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2015) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தல் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 14 விதானையார் வீதி,
2 ஆம், ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
077 9789221, 021 222 1126

தகவல்:
குடும்பத்தினர்.

(66892) (12.15)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புவனேஸ்வரி (பூவதி) குணரட்ணம்



யாழ்.சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், தையிட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும், வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி குணரட்ணம் 14.12.2015 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குணரட்ணத்தின் அன்பு மனைவியும், சற்குணேஸ்வரி (ராணி), சிவகுணபாலன் (சத்திவேல் - லண்டன்), வசந்த குணபாலன் (வசந்தன் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், குகநேசன், ஆனந்தபவானி, சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமியும், கார்த்திகன், மதுசணன், டிலக்ஷனா, குழலினி, அபிசாந், பூமிகா, தரணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.12.2015 திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
ராணி - இலங்கை- +94212221829
சத்திவேல் - பிரித்தானியா - +4474 5533 5515
வசந்தன் - கனடா- +141 6264 7304

(67952)(11,15,17)

தகவல்:
குடும்பத்தினர்.

### குமரையா சிவராசலிங்கம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமரையா சிவராசலிங்கம் நேற்று (15.12.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமரையா சிவக்கொழுந்து தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்ற அருணாசலம் - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் வெள்ளிமலர் அவர் களின் பாசமிகு கணவரும் தனலஷ்மி (ஆசிரியை - யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்), சந்தானலஷ்மி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அகிலன் (மானிப்பாய் - இலங்கைவங்கி), விக்கினேஸ்வரா(கனடா) ஆகியோரின் அன்பு மாமாவும் தரணிபன், கோபிகன், அஷ்னேகா, விஸ்னேக் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.12.2015) செவ்வாய்க்கிழமை பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர் சார்பாக
லி.அகிலன் (மருமகன்)

(66898)
(14,15)

### திருமதி அன்னபூரணி கனகசபாபதி (நயினாதீவு)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணி கனகசபாபதி 14.12.2015 காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியர் கனகசபாபதி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், சுகந்தி (ஆசிரியை - யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம்), பிரதீபன் (பொறியிய லாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நடேசராசன் (வைத்தியர் - ஆயுர்வேத மத்திய மருந்தகம்- வேலணை), துஷிதா (கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சந்திரசேகரம், காலஞ்சென்றவர்களான இராசபூரணி, இராசசேகரம் மற்றும் செல்வபூரணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாசனிதேவி, சாம்பசிவம், அரியரட்ணம் (கனடா), மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சரவணபவனின் (ஆசிரியர்) சகோதரியும், யானுகா, திவ்யா, ஜீவகாஷ், சஷ்மிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், காலஞ் சென்றவர்க ளான காமாட்சிசுந்தரம் கனகம்மா மற்றும் செல்வரட்ணம் தவமணி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.12.2015) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

64,மணியகார ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
021 205 2394

தகவல்:
குடும்பத்தினர்.

(66890)(11,15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்

வெற்றி, ஏனைய உலகுக்கு முன்னுதாரணமாக அமையும். இந்த முயற்சிகளில் சகாவாக இருப்பது குறித்து அமெரிக்கா பெருமையடைகின்றது.

- இவ்வாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஆலோசகரும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்நிலைப் பதவிகளிலொன்றான அரசியல் விவகாரங்களுக்கான கீழ்நிலைச் செயலாளர் பதவியைப் பொறுப்பேற்கவுள்ளவருமான தோமஸ் ஷனோன் தெரிவித்தார்.

தனது இலங்கைப் பயணத்தின் போது நேற்றுத் திருகோணமலைக்குச் சென்றிருந்த அவர் அமெரிக்காவின் உதவிகள் குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு நான் பயணம் மேற்கொண்டுள்ள இரு நாள்களில் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த உள்ளூராட்சி அதிகாரிகள், சமூகங்கள், சிவில் அமைப்புகள் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை நேரடியாகப் பார்வையிட முடிந்தமை குறித்து மகிழ்ச்சியடைந்துள்ளேன்.

உங்கள் நாடு சமூக மற்றும் பொருளாதார ரீதியில் சாதித்துள்ள விடயங்களால் நான் கவரப்பட்டுள்ளேன்.

அமெரிக்கா உங்களுடன் இணைந்து பணியாற்றுவது மற்றும் உங்களுடைய முன்னேற்றத்துக்கு உதவுவது குறித்து பெருமிதம் கொள்கின்றது.

கடந்த 60 வருடங்களுக்கு மேலாக அமெரிக்காவின் வெளிநாட்டு உதவி இலங்கை மக்களில், அவர்களது சமூகங்களில் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

எமது திட்டங்கள் இலங்கையின் பரந்துபட்ட பகுதிகளிலும் பல தரப்பட்ட துறைகளிலும் காணப்படுகின்றன. விவசாய அபிவிருத்தி, சூழல் மற்றும் இயற்கை வளங்கள், சுகாதாரம், கல்வி, ஜனநாயகம், ஆட்சிமுறை, பொருளாதார வளர்ச்சி மற்றும் மனிதாபிமான உதவி உட்பட பல துறைகளில் எமது திட்டங்கள் காணப்படுகின்றன.

இந்தக் கூட்டாண்மை என்பது கடந்த ஆறு தசாப்தங்களில் மலேரியாவைக் கட்டுப்படுத்துதல், ரயில் பாதைகளை நவீனமயப்படுத்துதல், போசாக்கை அதிகரித்தல் போன்ற பல குறிப்பிடத்தக்க விடயங்களில் சாதித்துள்ளது.

இலங்கையில் பேரழிவை ஏற்படுத்திய 2004 சுனாமித் தாக்கத்தின்போது, இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு யுஎஸ் எயிட் உதவியது. அறுகம்பை பாலம், மீன்பிடித்துறைமுகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள், நீர் விநியோக அமைப்பு முறை என்பவற்றை திருத்துவதற்கு உதவியது. அந்தப் பேரிடரினால் காவு கொள்ளப்பட்ட உயிர்களையும், அதனால் ஏற்பட்ட நிரந்தர அழிவுகளையும் எம்மால் மறக்க முடியாத அதேவேளை எதிர்காலத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான உங்களது துணிச்சலால் நாங்கள் கவரப்பட்டுள்ளோம்.

இலங்கையின் மோதல்களின் போதும் அதன் பின்னரும், ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்களுக்கு உணவு, உறைவிடம், சுகாதாரம் உட்பட அவர்கள் உயிர் வாழ்வதற்கு அவசியமான உதவிகளை வழங்கியுள்ளோம்.

அமெரிக்கா தொடர்ந்தும் நீண்ட கால முன்னேற்றத்துக்கு அவசியமான விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்தும். நாங்கள் சமநிலையான பொருளாதார வளர்ச்சி குறித்துக் கவனம் செலுத்துவோம்.

குறிப்பாக குறைந்த அபிவிருத்தியைக் கொண்டுள்ள பிரதேசங்களில், அதிகளவு வேலைவாய்ப்பையும், உயர்ந்த வருமானத்தையும் ஏற்படுத்துவோம்.

நாங்கள் சிவில் சமூகத்தினர், பொதுமக்களுடன் மேலும் மேம்பட்ட விதத்தில் இணைந்து பணியாற்றுவோம். இதன் அர்த்தம் வலுவான நீதித்துறை, வலுவான சிவில் சமூகம், அனைத்து இலங்கையர்களுக்கும் சேவையாற்றக்கூடிய செயற்திறன் மிக்க அரசு ஆகியவையே இவற்றின் அர்த்த மாகும்.

நாங்கள் தொடர்ந்தும் கிழக்கின் சமூகங்களுக்கு உதவி வழங்குவோம். நாங்கள் 3.2 பில்லியன் ரூபா பெறுமதியான திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

கிழக்கில் நாங்கள் போரின் மிக மோசமான எச்சங்களாக உள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கும் உதவி வருகின்றோம். மேலும் நாங்கள் போரால் பாதிக்கப்பட்ட மக்களைக் குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்கும் உதவி வருகின்றோம். இதற்காகக் கூடாரங்கள் முதல் சுகாதாரம் வரையான பல தரப்பட்ட சேவைகளை வழங்கி வருகின்றோம்.

இது, இதுவரை நீண்டதொரு பயணமாக உள்ளது. இலங்கை மக்கள் சமாதானம், செழிப்பு, நல்லிணக்கம் ஆகியவற்றை நோக்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தைத் தொடர்கையில் அமெரிக்கா உறுதியான விதத்தில் அதற்கு உதவும். இரு நாடுகளினதும் மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தையும் சிறந்த வாழ்க்கையையும் இணைந்து உருவாக்கலாம்.

நீங்கள் முன்னெடுத்துள்ள மிகப் பெரிய பணிக்காக நான் உங்களைப் பாராட்டுகின்றேன். இலங்கையில் என்ன நடைபெறுகின்றதோ அது சர்வதேச அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும். உங்கள் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதிலும், மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் நீங்கள் அடையும் வெற்றி, ஏனைய உலகுக்கு முன்னுதாரணமாக அமையும். இந்த முயற்சிகளில் சகாவாக இருப்பது குறித்து அமெரிக்கா பெருமையடைகின்றது - என்றார். (த-சி)

மரண அறிவித்தல்

திருமதி ஜெகதீஸ்வரி வசந்தகுமார்



கைதடி மேற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி வசந்தகுமார் கடந்த (14.12.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற கணக்காளர் - மத்திய வங்கி) - நாகமுத்து தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற நடராசா மற்றும் நேசம்மா தம்பதியினரின் மருமகளும், வசந்தகுமாரின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சிதம்பரநாதர் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) மற்றும் சிவகுமார் (UK), பவளமலர் (உருத்திரபுரம்), முருகதாசன் (UK), அருட்செல்வி (ஆசிரியர் - கிளி/முருகானந்தாக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும் ஈஸ்வரன் (கனடா), சத்தியசோதி (கனடா) ஆகியோரின் சிறிய தாயாரும் அருள்மதி (கனடா), குணசீலன் (கனடா) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரியான் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவசூரியபதி
கைதடி மேற்கு, கைதடி.

தகவல்: கணவர்.
(ந.வசந்தகுமார்)
T.P: 077 918 5128
(67965)

## வடக்கின்

வரவு-செலவுத்திட்டத்தை, மாகாண சபை யில் சமர்ப்பித்து கொள்கை விளக்க உரையாற்றுகையிலேயே, முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் காணப்பட்ட நிலைமைக்கும் இப்போதைய நிலைக்கும் எந்த மாற்றமும் இல்லை. வெளிநாட்டுத் தூதுவர்கள் இங்கு தினமும் வந்து நிலைமைகளை அவதானிக்கின்ற போதும், எந்த முன்னேற்றமும் - மாற்றமும் ஏற்படவில்லை. மத்திய அரசின் திட்டங்கள் எல்லாமே தென்பகுதியினருக்கு நன்மை பயப்பனவாகவே இங்கு அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தற்போதைய அரசின் செயற்பாடுகளை மேம்போக்காகப் பார்த்தால், நல்லெண்ண சமிஞ்ஞையை வெளிப்படுத்துவது போன்று இருக்கின்றது. ஆனால் மறைமுகமாக மாகாணத்தைக் கட்டுப்படுத்த - முடக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக கிராம இராச்சியம் திட்டத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது முன்வைத்துள்ளார். இது தொடர்பில் அவர் என்னுடன் நேரடியாகப் பேசவில்லை. அவரது செயலாளர் ஊடாக, பிரதம செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. அரசியல் மட்டத்தில் மேற்கொள்ளாமல், அதிகார - நிர்வாக மட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றார் பிரதமர். இது எமக்கு விசனத்தைத் தருகின்றது.

குறித்த திட்டம் தொடர்பில் என்னிடம் கருத்து அறியுமாறு பிரதம செயலாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். கிராமிய அபிவிருத்தி என்பது, நேரடியாக - முழுமையாக மாகாணத்துக்கு உட்பட்ட விடயம். மாகாண அதிகாரங்களைப் பிரித்தெடுத்து, கிராம மக்களுடன் இணைந்து செயலாற்றும் விதமாக சில குழுக்களை அமைத்து, கிராம மட்டத்திலிருந்து 20 பேரைச் சேர்த்து அந்தக் குழுக்களில் போடுவதும் அதனைப் பரிசீலிப்பதற்காகப் பிரதமர் ஒரு குழுவைப் போடுவதும், அந்தக் குழுவின் ஊடு பிரதமர் தொடர்பாக இருந்து, அவற்றினூடான கிராம மட்டத்தில் மக்களுக்கு ஒரு அபிவிருத்தியைப் பெற்றுத் தருவது போன்ற விடயத்தை அதில் குறிப்பிட்டிருக்கின்றார்.

மத்தி நேரடியாக கீழ் மட்டத்தில் சம்பந்தப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கையாகவே இது இருக்கின்றது. மத்திய அரசுக்கு நிதி அதிகம். அதனைப் போரினால் பாதிக்கப்பட்ட எங்கள் கிராமங்களுக்குக் கொடுத்து, அந்த மக்களை தங்களது கைக்குள் போட்டுக் கொண்டு, அவர்கள் தங்களின் உரிமைகள் - எதிர்காலம் பற்றி சிந்திக்காமல் இருக்கச்செய்கின்றவேலையாகத்தான் இது இருக்கின்றது.

மாகாணத்தின் அதிகாரங்களை மத்திக்கு மையப்படுத்துகின்ற இந்த நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று முதலமைச்சர் குறிப்பிட்டார். (த-5-ரி5)

## கையில்

இவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். குறிப்பாக ஆளுங்கட்சி உறுப்பினர்களாக அ.பரஞ்சோதி, ஜி.ரி.லிங்கநாதன், ச.சுகிர்தன் ஆகியோர் மேற்படி கருத்தை முன்வைத்தனர்.

ஆளுங்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி குறிப்பிடுகையில், எங்களுக்கு தரப்பட்ட அதிகாரங்களை நாங்கள் ஒழுங்காகப் பயன்படுத்தவில்லை. ஒரு குழந்தை பசியால் அழுகின்றது. அதற்கு உண்பதற்கு பிஸ்கட் இருக்கின்றது. அந்தக் குழந்தை அந்த பிஸ்கட்டை உண்ணாமல், அந்த பிஸ்கட் போதாது என்று சொல்லுவதைப் போன்று நமது நிலையும் இருக்கின்றது. நியதிச் சட்டங்களை நாம் உருவாக்கியிருக்க முடியும். அதனை நாம் செய்யவில்லை. நியதிச் சட்டங்கள் உருவாக்கப்பட்டிருந்தால் திணைக்களங்கள் ஆரம்பித்திருக்க முடியும். பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கியிருக்கலாம். நாம் 60 வருட காலமாக சமஷ்டியைக் கேட்டுப் போராடினோம். அதற்குப் பதிலாக வழங்கப்பட்டது தான் இந்த மாகாணசபை. இது போதாதுதான். ஆனாலும் கிடைத்த அதிகாரங்களை நாங்கள் பயன்படுத்தவில்லை - என்றார்.

மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினரான ஜி.ரி.லிங்கநாதன் தெரிவிக்கையில், நாங்கள் எங்களிடம் உள்ள பல குறைகளை மறைத்து பிறரைக் குற்றம் சுமத்தியுள்ளோம். நான் கடந்த இரண்டு வரவு - செலவுத்திட்டத்தின் போதும் குறிப்பிட்ட விடயம், வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகின்ற போது எங்களையும் அழைத்து தயாரியுங்கள் என்று சொல்லியிருந்தேன்.

ஆனால் இந்த முறையும், அவ்வாறில்லாமல், யாரோ தயாரித்த வரவு - செலவுத் திட்டத்தைக் கொண்டு வந்து இங்கு தந்திருக்கின்றார்கள். இதற்கு தனிப்பட்ட ரீதியில் நான் ஆதரவு இல்லை. ஆனாலும் கட்சியின் கூட்டுப் பொறுப்புக் கருதி. இத்துடன் எனது உரையை முடித்துக் கொள்கின்றேன் - என்றார்.

ஆளுங்கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன், நாங்கள் நியதிச் சட்டங்களை உருவாக்கவில்லை. மேலும், இந்த மாகாண சபையில் எதிர்க்கட்சி பொறுப்புடன் செயற்படவில்லை. அவர்கள், எண்ணிக்கையில் குறைவாக இருக்கின்றனர். எங்களுடன் இணைந்து செயற்படுகின்றனர். ஆனால் அவர்கள் தங்களது கடமைகளைச் செய்யவில்லை. இந்தச் சபையின் நாணயக் கயிறு அவர்களிடம்தான் இருக்கின்றது. சபை சிறப்பாகச் செயற்படவேண்டும் என்றால், அவர்கள் எங்களுக்குப் பிழைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும் - என்றார். (த-5-ரி5)

## அதிகார

அரசின் ஆட்சியில் சுட்டிக்காட்டி நாம் மாற்றாவிட்டால் காலம் முழுவதிலும் இந்த விடயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை முதலமைச்சர் சமர்ப்பித்து கொள்கை உரையாற்றிய பின்னர், அதற்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது 13 ஆவது திருத்தச் சட்டம் பெரும்பாலும் இந்தியாவின் அரசமைப்பை ஒத்தது. ஆனால் நிதி ஒதுக்கீடு விடயத்தில் பெரிய வேறுபாட்டைக் கொண்டிருக்கின்றது. இந்தியாவின் அரசமைப்பில் மக்களின் வரியை, மத்திக்கும் - மாநிலத்துக்கும் பங்கிடும் வகையில் நிதி ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருக்கின்றது. இலங்கை அரசமைப்பில், மாகாணத்துக்கு நிதி பங்கிடுவதற்கான அதிகாரம் மாத்திரமே நிதி ஆணைக் குழுவுக்கு இருக்கின்றது. இது எங்களது அரசமைப்பில் உள்ள பெரிய குறைபாடு.

இலங்கையில் மத்திய அரசு கொடுக்கும் நிதியை மாகாணங்களுக்குப் பிரிப்பதற்கான அதிகாரம் மாத்திரம்தான், நிதி ஆணைக் குழுவுக்கு இருக்கின்றது. ஆனால் இங்கு, அந்த வரம்பைத் தாண்டி, மாகாணங்களுக்கு குறித்தொதுக்குகின்றனர். இந்த முறை அதனையும் தாண்டி, இந்த விடயத்துக்கு இவ்வளவு, இந்த மாவட்டத்துக்கு இவ்வளவு என்று நிதி ஒதுக்கியிருக்கின்றனர்.

இது நிதி ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கும் அரசமைப்பு அதிகாரங்களைத் தாண்டி, நிர்வாக ரீதியில் அவர்கள் செயற்பட்டிருக்கின்றனர். நிதி ஆணைக் குழுவின் இந்த வரம்பு மீறிய செயற்பாடு அரசமைப்புக்கு முரணானது.

நாங்கள் கொண்டு வந்த அரசு என்று சொல்லிக் கொண்டிருக்கின்றோம். இந்த ஆட்சியிலாவது இதனைச் சீர் செய்யாவிட்டால், இனி ஒரு போதும் இதனைச் சீர் செய்ய முடியாது - என்றார். (த-5-ரி5)

## குறை நிரப்பு

குறிப்பிட்டு முதலமைச்சர் சமர்ப்பித்த குறை நிரப்பு வரவு - செலவுத் திட்டத்தை மாகாணசபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்ட அமர்வு நேற்று ஆரம்பமாகியது. இதன்போதே முதலமைச்சர் மேற்படி குறை நிரப்பு வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார்.

மாகாண அலுவலர்களுக்கு மத்திய அரசினால், அரச ஊழியர்களுக்கான 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வை நடைமுறைப் படுத்துவதற்காகவே, 2015 ஆம் ஆண்டின் குறை நிரப்பு வரவு - செலவுத் திட்ட நியதிச் சட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. மீண்டுவரும் செலவீனத்தின் அடிப்படையில் இது ஒதுக்கப்படுகின்றது.

இதனை விட, மூலதனச் செலவில், பிரமாணங்களின் அடிப்படையிலான ஒதுக்கீடுகளின்படி செயலாளர்களுக்கும் கட்ட வேண்டிய நிலைமை இருக்கின்றது. இவற்றின் அடிப்படையிலேயே குறை நிரப்பு வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகின்றது என்று குறிப்பிட்டார்.

இந்தச் சம்பள அதிகரிப்பு ஆசிரியர்களுக்கு மட்டுமா அல்லது அனைத்து அரச அதிகாரிகளுக்குமா என்ற கேள்வியை எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் எழுப்பினார். அதற்குப் பதிலளித்த முதலமைச்சர், அனைத்து மாகாண சபை அரச ஊழியர்களுக்குமானது என்றார்.

இறுதியில் எந்த எதிர்ப்பும் இன்றி ஏகமனதாக குறை நிரப்பு நியதிச் சட்டம் 5 ஆம் இலக்கச் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (த-5-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமற்...

சர்வதேசத்தில் இருந்து வரும் விசாரணையாளர்கள் காணாமற் போனவர்களைக் கண்டுபிடிப்பார்கள் என்று நம்புகின்றீர்களா?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் காணாமற்போனோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம.

சங்கானை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இறுதிப்போரின்போது இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்ட எனது மகள் எங்கு உள்ளார் என்று இதுவரை கண்டுபிடிக்கப்பட வில்லை. சர்வதேச விசாரணையை மேற்கொள்ளவேண்டாம் என்று விட்டு நீங்கள் ஏன் விசாரணைகளை மேற்கொள்கின்றீர்கள்? என தந்தை ஒருவர் ஆணைக்குழுவின் தலைவரிடம் கேள்வி எழுப்பினார்.

காணாமற்போனவர்களில் யாரையாவது இதுவரை கண்டுபிடித்துக் கொடுத்துள்ளீர்களா? திருகோணமலையில் ஒரு இரகசிய முகாம் உள்ளது என்று கூறப்படுகின்றது. அந்த முகாமை ஏன் விசாரணைக்கு உட்படுத்தவில்லை? குற்றவாளிகள் வெளிநாடு சென்றுள்ளார்கள் என்றால் அவர்கள் அரசின் உதவியுடன் தானே சென்றிருப்பார்கள் என்றும் அந்தத் தந்தை கேள்விகளை அடுக்கினார்.

இதற்குப் பதிலளித்த ஆணைக்குழுவின் தலைவர் பரணகம, திருகோணமலையில் இரகசிய முகாம் உள்ளது என்று கூறுபவர்கள் அந்த இரகசிய முகாம்களுக்கு எதிராகச் சாட்சியங்கள் கூறினால் விசாரணைக்கு உட்படுத்தப்படும்.

காணாமற்போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கு எங்களிடமே திறமையான விசாரணையாளர்கள் இருக்கும்போது சர்வதேச விசாரணையாளர்கள் எதற்கு? அப்படி இங்கு வரும் சர்வதேச விசாரணையாளர்கள் காணாமற்போன வர்களைக் கண்டுபிடிப்பார்கள் என்று நினைக்கின்றீர்களா? –என்றார்.

இதன்போது குறித்த தந்தை, காணாமற் போனவர்கள் கண்டுபிடிக்கப்படாமல் போனாலும் குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட்டிருப்பார்கள் – என்றார்.

இதன்போது ஆணைக்குழுவின் தலைவர் குற்றவாளிகளை தண்டிப்பதற்கு இந்த ஆணைக்குழுவும் அவர்களைவிடக் கடுமையாகச் செயற்படும். குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கு சர்வதேச தொழில் நுட்பவாதிகளையும் இணைத்துதான் இந்த ஆணைக்குழு தற்போது செயற்படுகின்றது. விசாரணைகள் முடிந்ததன் பின்னர் இந்த அறிக்கை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்படும். அதனை வைத்துச்சட்டமா அதிபர் விசேட நீதிமன்றங்களை அமைத்து அங்கேயே குற்றவாளிகள் விசாரிக்கப்படுவர். குறித்த நீதிமன்றத்தால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்–என்றார்.

இதேவேளை, காணாமற்போனவர்கள் விடுதலைப் புலிகள் என்றாலும் அவர்களும் கண்டுபிடிக்கப்படவேண்டியவர்கள் தான். அப்படி விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தீவிரமாகச் செயற்பட்டவர்கள் இராணுவத்தால் பிடிக்கப்பட்டிருந்தால் அவர்கள் கடுமையான முறையில் கையாளப்பட்டிருப்பார்கள் என்று காணாமற் போனோர் விசாரணை ஆணைக்குழுவின் தவைலவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

கணவனைக் காணவில்லை என்று கூறிப் பெண் ஒருவர் தனது சாட்சியத்தைப் பதிவு செய்ய வந்திருந்ததார். இறுதிப் போரின்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த எனது கணவரை இராணுவமே கொண்டுசென்றது. அவரைக் கொண்டு செல்லும் போது நேரில் பார்த்த அவரது நண்பர்கள் என்னிடம் வந்து கூறினார்கள்.போர் முடிவடைந்து நாங்கள் முகாமுக்குப் போன பின்னர் எனது கணவர் காயப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலைக்கு இராணுவத்தால் கொண்டு வரப் பட்டார். நான் வைத்தியசாலைக்குச் சென்று கேட்டேன். அப்போது யாரும் அந்தப் பெயரில் வரவில்லை என்று வைத்தியசாலையில் கடமையாற்றியவர்கள் என்னிடம் கூறிவிட்டார்கள். எனது கணவரை மீட்டுத் தாருங்கள் என்று அந்தப் பெண் ஆணைக்குழு முன்னிலையில் கேள்வி எழுப்பினர்.

இதன்போது பதிலளித்த ஆணைக்குழுவின் தலைவர்.

காணாமற்போனவர்களை கண்டறியும் ஆணைக்குழுவே இது. காணாமற்போனவர்கள் விடுதலைப் புலிகள் என்றாலும் அவர்களும் தேடி கண்டு பிடிக்கப்படவேண்டியவர்கள். கட்டாயமாக கண்டுபிடிக்கப்படுவார்கள். இராணுவத்தினர் நேர்மையானவர்கள் என்று நாங்கள் கூறவில்லை. உங்களது கணவர் விடுதலை புலிகள் இயக்கத்தில் தீவிரமாகச் செயற்பட்டு அதன் பின்னர் இராணுவத்தில் பிடிக்கப்பட்டிருந்தால் அவர் இராணுவத்தினரால் கடுமையான முறையில் கையாளப் பட்டிருப்பார்–என்று கூறினார். (த–21)

## ரயிலில்...

துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி உதயநகரில் நேற்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உதயநகர் கிழக்கைச் சேர்ந்த இராமசாமி பழனியாண்டி (வயது–69) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இதனால் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார். வடக்கில் ரயிலில் மோதுண்டு சாவடைவது இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. சில வாரங்களுக்கு முன்னர் யாழில் பொறியியலாளர் ஒருவர் உயிரிழந்ததோடு கடந்த ஞாயிற்றுக் கிழமை மீசாலையில் ஒருவர் ரயிலில் மோதிக் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (த–4–ரி3)

**விற்பனைக்கு**

பலசரக்கு கடை உபகரணங்கள் விற்பனைக்குண்டு. அலுமினிய சோக்கேஸ், மரசோக்கேஸ், குளிர்சாதனப்பெட்டி, டீபிறிசர், இலத்திரனியல் தராசு.
(வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில்) 077 98 63089

**வேலைக்கு ஆள்கள் தேவை**

யாழ். நகரில் உள்ள அலுவலகத்துக்கு டிசைனிங், DTP தெரிந்த ஆண், பெண்கள் தேவை.
முழு நேரமாகவோ, பகுதி நேரமாகவோ வேலை செய்யலாம்.
சுன்னாகம் அலுவலகத்துக்கும் அலுவலக உதவியாளர் தேவை. (பெண்)
தொடர்பு (67958)(10.15.17)
077 0444 743, 077 2585 392

**சிங்களம்** 3 மாத சனி ஞாயிறு பயிற்சிநெறி

அரச, தனியார் ஊழியர்கள், தொழில்தேடுவோர், இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள், வயதுவந்தோர் இணையமுடியும்!
இது ஒரு முழுமையான தமிழ்மூல சிங்களப்பயிற்சிநெறி என்பதால் சரளமாக சிங்களம் பேசவும், எழுதவும் பரீட்சைகளை எதிர்கொள்ளவும் முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 19.12.2015 சனிக்கிழமை
பிரிவு1. மாலை 03.00 பிரிவு2. மாலை 04.00
வாரநாள் (செவ்வாய் வியாழன்) பிரிவுகள் ஆரம்பம்–17.12.2015
1. மாலை 3.30 பிரிவு2. மாலை 04.30
SAAMSON Experts in Language Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 1570 486 021 320 3313

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சுகந்தி நடேசராசன்
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி அன்னபூரணி கனகசபாபதி**
அவர்கள் இறைபதம் எய்தியயை இட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஆசிரியர் கழகம்
யா/பெரியபுலம் ம.வி.
(67959) (10.17)

**கண்ணீர் அஞ்சலி**



தேசிய கல்வி நிறுவகப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியின் வெளிவாரி விரிவுரையாளரான **ச.லலீசன்** அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **நவமணி சந்திரமௌலீசன்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனையும் பிரார்த்திக்கின்றோம்
தேசிய கல்வி நிறுவக பட்டப்பின்கல்வி டிப்ளோமா பாடநெறி
இணைப்பாளரும் விரிவுரையாளர்களும்
யாழ்ப்பாண பிராந்திய நிலையம்.

**கண்ணீர் அஞ்சலி**

**திருமதி வாசஸ்பதி செல்வராஜா**



சாவகச்சேரி கௌரவ மாவட்ட நீதிபதி
திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்களின்
பாசமிகு தாயார்
**திருமதி வாசஸ்பதி செல்வராஜா**
அவர்கள் 12.12.2015 அன்று காலமானார். அன்னாரின் பிரிவினால் ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
பதிவாளர்/ உத்தியோகத்தர்கள்.
மாவட்ட / நீதிவான் நீதிமன்றம் சாவகச்சேரி.
(f/15807) (11.15.17)

**துயர் பகிர்கின்றோம்**

தோற்றம் 21.11.1942 மறைவு 14.12.2015



எமது நண்பன்
**கனகசபாபதி பிரதீபன்**
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி அன்னபூரணி கனகசபாபதி**
அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
நண்பர்கள் 1991 உ.த. வர்த்தகம் [illegible]
யாழ். இந்துக்கல்லூரி
(67963) (10.17)

**4ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



திருமதி
**இராஜேஸ்வரி சுப்பிரமணியம்**
(பத்தமேனி, அச்சுவேலி)
தோற்றம் 29.04.1945
மறைவு 29.12.2011

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் நான்கு ஆனாலும் அம்மா
உங்கள் நினைவலைகளுடன்
வாழும் எம் நெஞ்சங்கள் ஆறவில்லை தாயே
தாங்கள் ஆத்மா சாந்தியடைய
வண்ணை கலட்டி அம்மனை
வேண்டி நிற்கின்றோம்...

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள் மற்றும்.
குடும்பத்தினர்.
குணசேகர் (கண்ணன்)
077 999 8254
சூசையப்பர் வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

**என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்
நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**



பூவுலகில் 03 . 02 . 1921
விண்ணுலகில் 30 . 12 . 2011

**அமரர் தியாகர் அருணாசலம் (நயினாதீவு)**
திதி : பூர்வபக்க ஷஷ்டி (16.12.2015)

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்து உள்ளத்து ளெல்லாம் உளன்"

அன்னையின் தாள் பணிந்து பாமாலையால்
பக்தியுடன் பூசித்து அவள் தாளினை
பற்றுடன் பற்றி ஆண்டுகள் நான்கானாலும்
தங்களின் தூய அன்பின் நினைவுகள்
என்றும் எம் உள்ளங்களில்.

117/4, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(67961)(10.17)

**31ஆம் நாள் நினைவுகளுடன்...**



மண் மகிழ 27 . 01 . 1948
கண் நெகிழ 19 . 11 . 2015

சமூகசேவிதி
அமரர்
**திருமதி கனகரத்தினம் இரஞ்சிதமலர்** அவர்கள்

"மாதமொன்றாவ தம்மா – எம்
வசந்தத்தை நாம் தொலைத்து – இம்
மானிடத்தில் நாம் வாழும் வரை
உங்கள் இனியநினைவுகள் – எம்
மனங்களில் நிழலாடுமம்மா!


அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 17.12.2015 வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு சாட்டி புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 19.12.2015 சனிக்கிழமை பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

அன்னையை அறிந்த அனைவரும் தயவுசெய்து இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கந்தன் கருணை,
வேலணை-5
தகவல்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய, ஆஸ்திரேலிய தலைவர்கள் புனேயில் ரெய்னாவை 12.5 கோடிக்கு எடுத்தது ராஜ்கோட்




புனே, ராஜ்கோட் அணிகளுக்கான வீரர்களின் நேரடித் தெரிவு நேற்று இடம்பெற்றது. இதில் புனே அணி 12.5 கோடிக்கு (இந்திய ரூபாய்களில்) டோனியை எடுத்தது. அதே அணி ஸ்ரீவ் சிமித்தையும் தெரிவுசெய்திருந்தது. இதனால் இந்திய அணித் தலைவரான டோனியும் ஆஸ்திரேலிய அணித் தலைவரான சிமித்தும் ஒரே அணியில் விளையாட உள்ளனர்.

கடந்த ஐ.பி.எல். தொடரில் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு 2 வருடம் தடை விதிக்கப்பட்டது. பதில் அணிகளாக புனே. ராஜ்கோட் அணிகள் தெரிவுசெய்யப்பட்டன. இந்த அணிகளுக்கான வீரர்களின் நேரடித் தெரிவு நேற்று இடம்பெற்றது. புனே அணி முதலாவதாக வீரரைத் தெரிவுசெய்யும் உரிமையைப் பெற்றமையால் அந்த அணி டோனியைத் தனது தெரிவாகக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதற்கேற்றாற் போல் புனேயும் டோனியைத் தெரிவுசெய்தது. டோனியுடன் ரகானே, அஸ்வின், ஸ்ரீவ் சிமித், பிளாசிஸ் ஆகியோரும் புனேயில் இடம்பிடித்துள்ளனர். இதன்மூலம் இந்திய அணித் தலைவரான டோனியும், ஆஸ்திரேலிய அணித் தலைவரான ஸ்ரீவ் சிமித்தும் ஒரே அணியில் விளை யாடவுள்ளமையும் சுவாரஸ்யமான சம்பவமாக மாறியுள்ளது. இந்த அணிக்கு தலைவராக டோனியும் உப தலைவராக ஸ்ரீவ் சிமித்தும் நியமிக்கப்பட வாய்ப் புக்கள் உள்ளன.

டோனியை புனே தெரிவுசெய்ததும் ராஜ்கோட் அணி ரெய்னாவை தனது முதல் தெரிவாக 12.5 கோடிக்கு(இந்திய ரூபாய்களில்) எடுத்தது. இதன்மூலம் ரெய்னா அந்த அணிக்குத் தலைவராகவும் வாய்ப்புக்கள் உள்ளன.

ரெய்னாவுடன் ஜடேயா, மக்கலம், பல்க்நெர், பிராவோ ஆகியோரையும் ராஜ் கோட் தெரிவு செய்திருந்தது. இந்தப் புதிய தெரி வுகளின் மூலம் இதுவரை காலமும் இந்திய அணியிலும், சென்னை அணியிலும் ஒன் றாகப் பயணித்த டோனி, ரெய்னா, ஜடேயா, அஸ்வின் கூட்டணி முடிவுக்கு வந்துள்ளது. (ம)



## மீண்டும் வருவாரா பீற்றர்சன்?

தென்னாபிரிக்க கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் ரி-20 தொடரில் டொல்பின்ஸ் அணிக்காக களமிறங்கிய பீற்றர் சன், 80 இற்கும் அதிகமான சராசரியில் மொத்தமாக 401 ஓட்டங்களைக் குவித்து இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்த்துள்ளார்.

அடுத்த வருடம் இந்தியாவில் ரி-20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பீற்றர்சனை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. இதனால் சமீபகாலமாக இங்கிலாந்து அணி தோல்வியை நோக்கியே சென்றுகொண்டிருக்கிறது. குறிப்பாக ஒருநாள், ரி-20 அணிகளில் தளம்பல் நிலை காணப்படுகிறது. தென்னாபிரிக்க கழகங்களுக்கு இடையிலான ரி-20 தொடரில், பீற்றர்சன் 172 என்ற ஸ்ரைக் ரேற்றில் 80 இற்கும் அதிகமான சராசரியில் மொத்தமாக 401 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதன்மூலம் அவர் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் அணிக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## நியூசி. – இலங்கை ஒருநாள் தொடரில் சவுத்தி, போல்ட் இருவருக்கும் ஓய்வு

### ஆடுகளம் சுழலுக்கு சாதகமாக்கப்படுகிறதா என எதிர்பார்ப்பு



இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடரில் முதல் இரு ஆட்டங்களில் நியூசிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர்களான போல்ட், சவுத்தி இருவருக்கும் ஓய்வுகொடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஆடுகளம் சுழலுக்கு சாதகமாக அமைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அணி, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. 2 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டத்தில், நியூசிலாந்து 122 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. 2ஆவது டெஸ்ட் 18 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதைத் தொடர்ந்து 5 ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட தொடரும், இரண்டு ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரும் நடைபெறவுள்ளன. இந்த நிலையில் முதல் 3 ஒரு நாள் ஆட்டங்களுக்கான நியூசிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது. முதல் இரு ஆட்டங்களிலும் நியூசிலாந்து அணியில் இருந்து வேகப்பந்து வீச்சாளர்களான போல்ட், சவுத்தி இருவருக்கும் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஆடுகளம் சுழலுக்கு சாதகமாக அமைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றாவது ஆட்டத்தில் சவுத்தி அணியில் இணைகிறார்.

அணியின் விவரம் - மக்கலம் (தலைவர்), பிரேஸ்வெல், குப்தில், கென்றி, மக்கெல்நாதன், வில்லியம்சன், ரெய்லர், மில்னின், நிக்கோலஸ், ராஞ்சி, சான்நெர், சவுத்தி, வாக்னெர். (ம)

## கிண்ணம் வென்றார் கார்ல்சன் ஆனந்துக்கு 9ஆவது இடம்

இங்கிலாந்தில் நடைபெற்ற செஸ் தொடரில் நோர்வேயின் கார்ல்சன் கிண்ணத்தைக் கைப்பற்ற இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் 9ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இறுதிச் சுற்றில் கார்ல்சன், ரஷ்ய வீரர் அலெக்சாண்டரை எதிர்த்து இந்த வெற்றியைப் பதிவுசெய்தார். கார்ல்சனுக்கு கடும் சவாலாக இருப்பார் என்று பலராலும் கருதப்பட்ட ஆனந்த் 9ஆவது இடத்தையே பிடித்திருந்தார். (ம)



## யுனிஸ் மீது யுனிஸ்கான் பாய்ச்சல்

பாகிஸ்தானின் தொடர் தோல்விகளுக்கு காரணம் அந்த அணியின் பயிற்சியாளரான வக்கார் யுனிஸ் என்று சாடியுள்ளார் யுனிஸ்கான்.

சமீபத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களை பாகிஸ்தான் இழந்தது. இந்த நிலையில் பாகிஸ்தான் பயிற்சியாளர் வக்கார் யுனிஸ் மீது பாகிஸ்தான் வீரர் யுனிஸ்கான் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

பாகிஸ்தான் அணியின் உடைமாற்றும் அறையில் நல்ல சூழ்நிலை இல்லை. அப்படி இருந்தால் அவர்களால் எப்படி சிறப்பாக விளையாட முடியும். வீரர்களிடம் நன்றாகப் பழகி ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு பயிற்சியாளரைச் சாரும். அவர் தனது கடமையைச் செய்யவில்லை. கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் இருந்த பாகிஸ்தான் அணி தற்பொழுது இல்லை. முதலில் வீரர்களிடையே புரிந்துணர்வு ஏற்பட வேண்டும் என யுனிஸ்கான் தனது விமர்சனங்களை முன்வைத்துள்ளார். (ம)



## வருடத்தின் சிறந்த வீரர்; விருது செரினா வில்லியமுக்கு



அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதைத் தட்டிச் சென்றுள்ளார். வீராங்கனை ஒருவர் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை வெல்வது 32 ஆண்டுகளின் பின்னர் இம்முறை இடம்பெற்றுள்ளது.

சர்வதேச அந்தஸ்துப் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் அமெரிக்கன் தொடரைத் தவிர மற்றைய அனைத்தையும் செரினா வில்லியம்ஸ் கைப்பற்றியிருந்தார். அது மட்டுமல்லாது தான் எதிர்கொண்ட 56 ஆட்டங்களில் 53 ஆட்டங்களில் வெற்றிபெற்றுள்ளார். இதன்மூலம் சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார். தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தில் உள்ள கெலப்பை விட (6ஆயிரத்து 60 புள்ளிகளுடன் கெலப் உள்ளார்.) கிட்டத்தட்ட 4 ஆயிரம் புள்ளிகள் வித்தியாசத்தில் (9ஆயிரத்து 945 புள்ளிகளை செரினா பெற்றுள்ளார்) முதலிடத்தில் நீடிக்கிறார். இந்த மிகப் பெரும் சாதனைகளாலேயே செரினாவுக்கு இத்தகைய கௌரவம் கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

32 ஆண்டுகளுக்கு பிறகு வீராங்கனை ஒருவர் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடைசியாக 1983ஆம் ஆண்டில் மேரி டெக்கர் இந்த விருதைப் பெற்றிருந்தார். இது தொடர்பாக செரினா தெரிவிக்கையில் - நான் கைப்பற்றிய கிராண் ஸ்லாம் கிண்ணங்களை விடவும் இந்த விருதை மிகப் பெரும் கௌரவமாகக் கருதுகிறேன். இது எனது கடின உழைப் புக்குக் கிடைத்த மிகப்பெரும் பரிசு. இந்த வருடம் அற்புதமாக அமைந் தது. அடுத்த வருடத்தையும் சிறப்பாக ஆரம்பித்து சிறப்பாக நிறைவுசெய் வேன் என நம்புகிறேன் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில், கிண்ணம் வென்ற நாவாந்துறை சென்.மேரிஸ் அணியையும், 16வயதுப் பிரிவு தேசிய அணியில் இடம்பிடித்த சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் சாந்தன், யாழ். மத்திய கல்லூரியின் ரெம்சன் இருவரையும், 19வயதுப்பிரிவு அணி யினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்ற யாழ். கால்பந்தாட்ட லீக்கின் வீரர்களையும் யாழ். கால்பந்தாட்ட லீக் கௌரவித்துள்ளது. (ம-23)

## மோசமான பந்துவீச்சும் தற்காப்பு ஆட்டமும் தோல்விக்கு காரணம் என்கிறார் மத்தியூஸ்



பந்துவீச்சில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தாமையும் அளவுக்கு அதிகமான தற்காப்பு ஆட்டமும்தான் நியூசிலாந்துக்கு எதிரான தோல்விக்கு காரணம் என்று தெரிவித்துள்ளார் இலங்கை அணித் தலைவரான மத்தியூஸ்.

இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 122 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட்டில் வென்றாலேயே தொடரை குறைந்த பட்சம் சமநிலை செய்யலாம் என்ற நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தோல்வி தொடர்பாக மத்தியூஸ் தெரிவிக்கையில்; சகல துறைகளிலும் இலங்கை அணி சவாலை ஏற்படுத்தவில்லை. பந்துவீச்சாளர்கள் முதல் நாளில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. முக்கியமான இலக்குகளை வீழ்த்தவில்லை. அதேபோல் எங்களது துடுப்பாட்ட வீரர்கள் அளவுக்கு அதிகமான தற்காப்பு ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். தாக்குதல் பாணி அவர்களிடத்தில் இல்லை. களத்தடுப்பிலும் பிடியெடுப்புக்களை கோட்டை விட்டனர். இவைதான் தோல்விக்கு முக்கிய காரணிகளாக அமைந்தன - என்றார். (ம)

## யாழ் - திருமலை நாளை மோதல்

யாழ்ப்பாணம், டிசெ. 16

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் மாவட்டங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து திருகோணமலை மாவட்ட அணி நாளை மோதவுள்ளது. அரியாலையில் அமைந்துள்ள கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் காலை 9 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். (ம-23)

## கால்பந்தாட்டத் தொடர்

இலங்கை கரல்பந்தாட்டச் சம்மேளனம் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் ஊடாக கால்பந்தாட்டத் தொடர் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி வல்வெட்டித்துறை நெற்கொழு விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகும் இந்தத் தொடரில் கொழும்பில் இருந்து 6அணிகளும், வடமாகாணத்தில் இருந்து 12 அணிகளும் பங்கு பற்றுகின்றன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 16

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று புதன்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

இன்று இடம்பெறும் ஆட்டங்களாக பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உரும்பிராய் சென்.மைக்கல் அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதவுள்ளது. (ம-23)

## இந்தியா, பாகிஸ்தான் தொடர் நடைபெறும் முன்னாள் வீரர் அருண்லால் நம்பிக்கை

இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடர்கள் மீண்டும் நடைபெறும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் இந்தியாவின் முன்னாள் வீரரான அருண்லால்.

இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடரை மீண்டும் நடத்த இரு நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகளும் முடிவுசெய்தன. அதன்படி 3 ஒருநாள் ஆட்டங்களும் இரண்டு ரி-20 ஆட்டங்களும் இலங்கையில் நடத்தத் திட்டமிடப்பட்டது. பாகிஸ்தான் அரசு தொடருக்கு அனுமதி வழங்கிய போதிலும், இந்திய அரசு இன்னும் அனுமதி வழங்கவில்லை. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்தியாவிடம் இருந்து பதில் ஒன்றைப் பெற்றுத் தருமாறு இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை நாடியுள்ளது. ஏனெனில் இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையே இந்தியா, பாகிஸ்தான் தொடருக்கு மத்தியஸ்தம் வகிக்கிறது.

நிலைமை இவ்வாறு இருக்க, தொடர் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார் இந்தியாவின் முன்னாள் வீரரான அருண்லால். அவர் மேலும் தெரிவிக்கையில்; விளையாட்டை அரசியலுடன் கலக்கக் கூடாது என்பதை நான் எப்போதும் வலியுறுத்தி வருகிறேன். விளையாட்டின் ஆர்வலர் என்ற முறையில் பாகிஸ்தானுடன் விளையாடுவதை எப்போதும் வரவேற்கிறேன். சில அமைப்புக்கள் தொடரை எதிர்க்கத்தான் செய்யும். அதற்காக ஒட்டுமொத்த மக்களின் எதிர்பார்ப்பை வீணடிக்கக்கூடாது. இந்தியா, பாகிஸ்தான் தொடர்களை கிரிக்கெட் ரசிகர்கள் பலரும் எதிர்பார்த்துள்ளனர் என்பதை இருநாட்டினரும் உணர வேண்டும்.- என்றார். (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Job Vacancy**
**Educational Counselors**
ICS Study Overseas
Apply within 7 days

We are a well established company engaged in educational consultancy
The Ideal Candidate Should
1. Have an excellent command of English Language both written and oral.
2. Possess excellent in for Person Skills.
3. Be able to demonstrate good IT skills.
4. Tamil typing will be an Advantage.
77,Clock Tower Road, Jaffna.
021-7306000, 077-3013060
infojaffna@icssrilanka.com

# மீண்டும் பயிற்சிக்குத் திரும்பினார் பார்சிலோனா கழகத்தின் மெஸ்ஸி



காயம் காரணமாக ஓய்வில் இருந்து வந்த ஆர்ஜென்ரினா அணியின் தலைவரும், பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரருமான மெஸ்ஸி மீண்டும் பயிற்சிக்குத் திரும்பியுள்ளார்.

லா லிகா தொடரில் செவிலியா அணிக்கு எதிரான ஆட்டத்தில் காயமடைந்த மெஸ்ஸி, சில வாரங்களாக காயத்தால் அவதியுற்று ஓய்வில் இருந்து வந்தார். இந்த நிலையில் அவர் மீண்டும் பயிற்சிக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிவித்து தனது சமூக வலைத்தளமான முகப்புத்தகத்தில் தான் பயிற்சியில் ஈடுபடும் படம் ஒன்றைப் பதிவிட்டுள்ளார். மைதானத்துக்குத் திரும்பியமை சிறப்பாக உள்ளது. லா லிகா தொடரில் எஞ்சிய ஆட்டங்களில் பார்சிலோனாவுக்காக களமிறங்க ஆர்வமாய் உள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)



வடமாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு கிரிக்கெட் உபகரணங்களை வழங்கியுள்ளார்.

## இரண்டாவது பகலிரவு டெஸ்டில் ஆஸ்திரேலியா - பாக். அணிகள்

இரண்டாவது பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் – ஆஸ்திரேலிய அணிகள் விளையாட வாய்ப்புக்கள் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிரிக்கெட் வரலாற்றில் இந்த வருடமே பகலிரவு டெஸ்ட் அறிமுகப்படுத்தப்பட்டது. முதலாவது பகலிரவு டெஸ்ட் ஆட்டம் ஆஸ்திரேலியா–நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிலையில் இரண்டாவது பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தை நடத்த ஆஸ்திரேலியாவும் பாகிஸ்தானும் முன்வந்துள்ளன. பெப்ரவரி 14ஆம் திகதி ஆஸ்திரேலியா பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள டெஸ்ட் ஆட்டமே பகலிரவு ஆட்டமாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (ம)

## லோட்ஸ் தரப்படுத்தலில் இடம்பிடித்தார் மத்தியூஸ்



லோட்ஸ் மைதான நிர்வாகம் இந்த வருடத்துக்கான சிறந்த 20 வீரர்களின் தரப்படுத்தலில் மத்தியூஸிற்கும் இடம்கொடுத்துள்ளது.

லோட்ஸ் மைதானம் வருடாவருடம் சிறந்த இருபது வீரர்களைத் தெரிவுசெய்து அவர்களை பட்டியல் படுத்தும். அந்த அடிப்படையில் இந்த வருடத்துக்கான பட்டியலில் மத்தியூஸிற்கு 9ஆவது இடத்தை வழங்கியுள்ளது. ஒருநாள் ஆட்டங்களில் 3ஆயிரம் ஓட்டங்கள் மற்றும் 100 இலக்குகள் என்ற மைல் கல்லை மத்தியூஸ் எட்டியிருந்தார். இந்தப் பெறுபேற்றை எட்டும் 4ஆவது இலங்கை வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றிருந்தார். இதுவே அவருக்கு 9ஆவது இடத்தை வழங்க பிரதான காரணம் என்று லோட்ஸின் தெரிவிக்குழு அறிவித்துள்ளது. (ம)

## இன்றைய மோதல்கள்

**கலைமதி வி.கழக தொடர்**

கரணவாய், டிசெ. 16

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

**பருத்தித்துறை லீக்கின் தொடர்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான 5 வீரர்கள் பங்குபற்றும் காற்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயதாரகை அணியை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை அணியை எதிர்த்து நெற்கொழு கழுகுகள் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நெடியகாடு இளைஞர் அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து தொண்டமானாறு கலைவாணி அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து நக்கீரன் அணி மோதவுள்ளது. (ம-23)

## மரண அறிவித்தல்

### செல்வி ஜெயரட்ணம் சயானி



உரும்பிராய் தெற்கு, சேமபுலம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஜெயரட்ணம் சயானி 14.12.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் பத்மராணி தம்பதியினரின் அன்பு மகளும், சிறிகாந் (லண்டன்), சிவானி ஆகியோரின் அன்பு சகோதரியும், இந்திரன் (லண்டன்), Dr.பத்மநாதன் (லண்டன்), தேவராஜா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2015) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு இந்து மயானத்துக்கு தகனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சிறிகாந்
(சகோதரன் - லண்டன்)
076 607 0723

சேமபுலம் வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (67970)

## மரண அறிவித்தல்



### சவிரிமுத்து மரியநாயகம்

யாழ்ப்பாணம் ஸ்ரேசன் றோட்டைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட சவிரிமுத்து மரியநாயகம் 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து-அன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை நாகம்மா தம்பதியரின் மருமகனும், ஜெயசீலியின் அன்புக் கணவரும், நிருபா, பிரசன்னா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவீந்திரன், ஜீன் ஆகியோரின் மாமனும், நிவேதா, ருவிந், அல்வின், சீமோன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அல்பிரட், கிறிஸ்ரிபேபி, பெனடிக்ற், செல்வராஜா, அமுதராஜா, செல்வரட்ணம் மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா, மகேஸ்வரி, ராணி மற்றும் புனிதசீலீ, புஸ்பம், டொமினிக் ஜீவா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (17.12.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ். அடைக்கல அன்னை திருத்தலத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.16, இராசாவின் தோட்டம்,
ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
0768942 211 (மகன்-பிரசன்னா) (68972) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு பாஸ்கரகுமார் (G.S) கந்தரோடை

பிறப்பு - 04.03.1945
இறப்பு - 15.12.2015



கந்தரோடை சித்தியார்வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய கிராம சேவையாளர் முத்துக்குமாரு பாஸ்கரகுமார் நேற்று (15.12.2015) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - ஆச்சியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராஜா - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் வரலட்சுமியின் (பவா) அன்புக்கணவரும், சிவகுமாரதாஸ் (சிறுப்பிட்டி) காலஞ்சென்ற உதயகுமார் (பிரான்ஸ்) மற்றும் விமலகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராஜிப்பிருந்தா (லண்டன்), சைலஜா (பிரான்ஸ்), லக்ஸ்மண குமார், லக்ஸ்மிபிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் கேதீஸ்வரன் (கண்ணன் - லண்டன்), கபிலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்நியன், மொழி (லண்டன்), தர்மிகன் (பிரான்ஸ்), யஸ்வினி அகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2015) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் Dr.சுப்பிரமணியம் றோட், சுன்னாகம் மேற்கு, சுன்னாகத்தில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கம்புலவு கந்தரோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 4345 009 (67971)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.